சிவபக்தி தந்த செல்வம்



புத்தக நிலையம்

டாக்டர் கே. ராமமூர்த்தி

சிவபக்தி தந்த செல்வம்

(சிவபெருமான், பாணபத்திரனுக்கு திருமுகப்பாசுரம் அருளி, பெருஞ்செல்வம் வழங்கிய வரலாற்று பக்திக் கதை)

பாரதிகாவலர்
டாக்டர் கே.ராமமூர்த்தி

கங்கை புத்தகநிலையம்
13, தீனதயாளு தெரு,
தியாகராய நகர், சென்னை—600 017.

முதற்பதிப்பு : மே, 1999

நூலாசிரியர் பாரதிகாவலர் டாக்டர் கே.ராமமூர்த்தி அவர்களின் 61 வது அகவையில் பிரசுரமாகிறது.

விலை ரூ. 40.00

➔ Title	:	SIVABAKTHI THANTHA CHELVAM
➔ Author	:	Dr.K.Ramamurthi
➔ Language	:	Tamil
➔ Subject	:	Historical Story (Saivite)
➔ Edition	:	First Edition. May, 1999.
➔ Pages	:	208 + VIII = 216
➔ Published By	:	Gangai Puthaka Nilayam, 13, Deenadayalu Street, Thyagaraya Nagar, Chennai-600 017.
➔ Price	:	Rs. 40.00

Laser Typeset at : Siva Graphics, # 6, Parameshwari Colony, Kodambakkam, Chennai-24.

Printed at : SHAKTI PRINTERS



கோவிலூர்
ஆதீனம்
தவத்திரு
ஸ்ரீலஸ்ரீ நாச்சியப்ப
ஞான தேசிக சுவாமிகள்
அவர்கள் அருளிய

அணிந்துரை

"வேத நெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்க" என்ற பண்டையப் பாட்டு வரிகளுக்கேற்ப, வேதாகமங்களின் வழியே சைவச் செந்நெறி, உலகுக்கு உய்யும் வழி காட்டுகிறது.

உண்மையான அயராத பக்தி நல்வாழ்வையும் பெருஞ்செல்வத்தையும் வழங்கும் என்கிற சீரிய கருத்தினை, முனைப்பாக வைத்து, எழுதப்பட்டுள்ள 'சிவபக்தி தந்த செல்வம்' என்ற இந்நூல் பெரிதும் வரவேற்கத் தக்கதே. திருவிளையாடற் புராணத்தில், சேரமான் பெருமாள் நாயனாருக்கு, சிவபெருமான் திருமுகப்பாசுரம் எழுதி, பாணபத்திரனுடைய சிவபக்திக்கு பெருஞ்செல்வம் வழங்கிய ஒரு பகுதியை, சுவைபடவும்

மென்மேலும் படிக்கத்தூண்டும் வகையிலும் விஸ்தார மாகவும் பக்திப் பரவசமான வரலாற்று நெடுங்கதையாக எழுதியுள்ள பாரதிகாவலர் டாக்டர். கே. ராமமூர்த்தியின் தனித்திறம் போற்றுதலுக்குரியது.

திருவிளையாடற் புராணக் காட்சிகள் ஓவியங்களாக, நகரத்தார் நிர்வகிக்கும் இளையாற்றங்குடி, இலுப்பைக் குடிக் கோயில்களில் அதிகமாக வரையப் பெற்றுள்ளன. அத்தகைய பக்திக் கலைகளைப் பராமரிப்பதில் கோவிலூர் ஆதீனம் மிகுந்த ஈடுபாடு கொண்டிருக்கிறது. இந்த நூலிலும், அந்தக் காட்சிகளையெல்லாம், மனத் திரையில் பதியும் வகையில் ஆசிரியர் சித்தரித்திருக்கிற சிறப்பைப் படிக்கும் போது, நமக்கு மனநிறைவு ஏற்படுகிறது.

கோவிலூர் ஆதீன ஆதி அருள் முதல்வர் தவத்திரு ஆண்டவர் சுவாமிகள், காது செவிடாகி விட்ட ஒருவருக்கு திருநீறு வழங்கியதும், காது கேட்கும் சக்தி பெற்றது. இந்த நூலில் திருநீற்றின் பெருமையை கதைப் போக்குடன் உள்ளத்தைத் தொடும் வகையில் எழுதியிருப்பதை நாம் படித்ததும், அந்த நினைவு நம் நெஞ்சில் நின்றது. நெகிழ்ச்சி உண்டாகிறது.

சிவபிரானின் பல தரிசனங்களையும் சிவச்சின்னங் களையும் பொற்பலகை பெற்ற பாணபத்திரன் தன் நடையாத்திரையில் காண்பது போல் நூலாசிரியர் அழகுபட விவரித்துள்ள பகுதியைப் படித்ததும், சிவபக்தி மீதூறி, கோவிலூர் ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீராமநாத ஞான தேசிக சுவாமிகள், காசியாத்திரை செய்ததும், பன்னிரு ஜோதிர் லிங்கங்களை தரிசனம் செய்ததும் நம் அகத்தில் வலம் வந்து, ஆனந்தக் களியேறிட, நூலாசிரியர் பாரதிகாவலரின் எழுத்தாற்றலையும் சிவபக்தியையும், பாராட்டி நாம் வாழ்த்துகிறோம்.

பாணபத்திரனை மையமாக வைத்து சம்பவங்கள் அனைத்தும் கதையோட்டத்துடன் பாங்குடன் எழுதப் பட்டிருக்கிறது. பக்தி நெறிப்பட்ட பாரதப் பண்பாடே பெரும் செல்வமாகும். சிவபக்தி பெருஞ்செல்வம் தரும் அருள் வல்லமை உடையது என்ற பேருண்மையானது, இந்நூல் முழுவதிலும் 'பாலினுள் வெண்ணெய் போல்' விரவியுள்ளது.

நூலாசிரியர் பாரதிகாவலரின் தமிழ்ப் புலமையும், வரலாற்று நிகழ்வுகளை சான்றுகளுடன் கதையோட்டமாக ஆக்கியுள்ள பாங்கும், திருமுறைப்பாடல்களில் ஆழங்கால் பட்டிருக்கும் பான்மையும் சிவபக்தி தந்த செல்வமாக மலர்ந்திருக்கிறது.

வர்ணனைகள் மூல மரபு ஒட்டியும், தாய் நிலச் சுவையுடைய நடையழகும் நூலுக்கு அணியாக அமைந்து படிக்கும் ஆர்வத்தைத் தூண்டுகிறது. மகிழ்வுடன் நூலுக்கு அணிந்துரை வழங்கி, பாரதிகாவலரை ஆசீர்வதிக்கிறோம்.

நூற்பணிகளை கோயில் திருப்பணிகள் போல் பக்தியுடன் செம்மையாகச் செய்து தரமான நூல்களைப் பிரசுரித்து வரும் வானதி திருநாவுக்கரசு அவர்களும், அவரது குமாரர்களும் பாராட்டுக்குரியவர்கள். இந்த தெய்வீகப் பிரசுரத்தை மெய்ப்பாட்டுடன் வெளியிட்டிருக் கும் கங்கை புத்தக நிலையம் வானதி இராமநாதனுக்கு வாழ்த்துக்கள்.

எந்த விஷயமும் கதைவடிவில் அமையும்போது உள்ளத்தில் ஆழமாகப் பதியும். இதிகாசங்களும் புராணங்களும் வெறும் கதைகள் மட்டுமல்ல. கதைப் போக்குடன் கூட, அறிவியல் அடிப்படைகளாகவும், வாழும் நந்நெறிகளையும், தீர்க்கமான தொலை நோக்குகளையும் உள்ளடக்கியவை. ஊன்றிப்

படிப்போருக்கு அவற்றில் பொதிந்துள்ள அந்த பேருண்மைகள் புலப்படும்.

கல்வியுடன் ஒன்றிய ஒழுக்கமும், தெய்வ பக்தியும் வளர இது போன்ற நூல்கள் பெரிதும் உதவும். தொன்மைக் காலம் தொட்டு தொடர்ந்து வருகிற பக்திப் பண்பாட்டை உன்னதமாக்கிக் காட்டும் சிவபக்தி தந்த செல்வத்தை தமிழ்ப் பெருங்குடியினர் ஒவ்வொருவரும் பெற்று உய்ய வேண்டும் என்பதே நம் விருப்பம்.

இந்த நந்நெறி வளர்ந்து, நம் பின் சந்ததியினருக்கும் இது பெரிய சொத்தாக அமைந்திட, இந்நூலை ஒவ்வொருவரும் வரவேற்று ஆதரிக்க வேண்டும் என்று இறைவனை நாம் வேண்டுகிறோம்.

5–5–1999
மானகிரி, கோவிலூர்,
காரைக்குடி.

ஸ்ரீலஸ்ரீ நாச்சியப்ப
ஞான தேசிக சுவாமிகள்
கோவிலூர் ஆதினம்

உ
திருச்சிற்றம்பலம்

சைவ சித்தாந்தப் பெருமன்றம்
[தோற்றம் : 1905]

சிவத்திரு சி.எஸ்.குப்புராஜ் பி.இ.,
அவர்கள் வழங்கிய

முன்னுரை

சைவ சித்தாந்தக் கொள்கைகளுக்கு ஆதாரமாகக் கருதப்படுபவை, பன்னிரு திருமுறைகள், பதினான்கு சாத்திரங்கள், மூன்று புராணங்கள் ஆகும்.

இவற்றுள் பதினோராம் திருமுறையின் முதல் பாடலாக விளங்குவது "மதிமலி புரிசை மாடக் கூடல்" எனத் தொடங்கும் திருமுகப் பாசுரம் ஆகும். இது திரு ஆலவாயுடையாராகிய இறைவனாலேயே எழுதப் பெற்றதாகும். பன்னிரண்டு வரிகளே கொண்ட இப்பாடல் மதுரையில் வாழ்ந்த சிவபக்தராகிய பாணபத்திரர் என்னும் இசைவாணருக்காக எழுதப்பெற்றது.

இந்தத் திருமுகப்பாசுரத்தின் மூலம் சேரமன்னன் பாணருக்குப் மாண்பொருள் அளித்தார். அந்த இறைமயமான வரலாறே, சிவபக்தி தந்த செல்வமாக அமைந்திருக்கிறது.

அறுபத்து நான்கு பாடல்களைக் கொண்ட திருவிளையாடல் புராணத்தில் பாணபத்திரனது வரலாறு நான்கு பாடல்களிலே விளக்கப்படுகிறது.

பாணபத்திரன் வரலாற்றில் ஒரு பகுதியை எடுத்துக் கொண்டு, அதனை விரிவாகவும் கற்பனை வளத்துடனும் எடுத்துக் கூறியிருக்கிறார், பாரதி காவலர், டாக்டர். கே. இராமமூர்த்தியவர்கள். இதில் பாணபத்திரனின் வரலாறு மட்டுமில்லை. அவர் காலத்திய (8-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியும் 9-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியும்) இசைவாணர்களுக்கு மக்களும் மன்னர்களும் செய்த சிறப்புகள், இசைக்கலையின் விளக்கங்கள், யாழ், குழல், கின்னரி, முழவு பற்றிய ஆராய்ச்சிக் குறிப்புகள் மன்னர்கள் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளுடன் நால்வகை நிலங்கள், திணை, பருவம், மாமதுரைச் சிறப்புகள் திருவஞ்சைக்களம், சேரமன்னன் மாண்பொருள் வழங்கும் அரசவைக் காட்சி, தடாதகைப் பிராட்டியின் திருமணம் போன்றவற்றின் நுணுக்கமான செய்திகளும் உள்ளன.

எல்லாவற்றிற்கும் மேலாக இறைவனே எந்த அளவுக்கு அடியவர்களின் வாழ்க்கை நிகழ்வுகளில் நேரடியாகத் தொடர்பு கொண்டு அவற்றினைத் தீர்த்து வைத்தான் என்ற வியத்தகு செய்திகளை எல்லாம் ஆற்றொழுக்கான நடையில் தந்திருக்கிறார் இந்நூலாசிரியர்.

மொத்தத்தில் பார்த்தால் இந்நூலை ஒரு கருத்துச் சுரங்கம் எனலாம். சைவ சித்தாந்தத்தின் தத்துவக் கருத்துக்களை எல்லாம் கதைப் போக்கில் மிக எளிதாக, எடுத்து விளக்கித் தெளிவாக சொல்கிறார் நூலாசிரியர்.

இறைவனே எந்த அளவுக்கு இசையில் ஈடுபட்டான், பக்தர்களுக்கு அருள்பாலித்தான் என்பதெல்லாம் தக்க ஆதாரங்களுடனும், எடுத்துக் காட்டுகளுடனும்

இயம்பப்பட்டிருப்பது நூல் ஆசிரியரின் ஆழ்ந்த புலமையையும், கடின உழைப்பினையும் தெற்றெனை விளக்குகிறது.


சாதாரணமாக வரலாற்றுப் பின்னணியுடன் கதைகளும் நாவல்களும் எழுதப்படும் போது வரலாற்று நாயக, நாயகியருடன், கற்பனைப் பாத்திரங்களையும் உருவாக்கி உலவ விட்டு கதைக்கு மெருகூட்டுவது மரபு. ஆனால் இவரோ வரலாற்றுப் பாத்திரங்களை மட்டுமே வைத்துக் கொண்டு, கதைப் போக்கில் தொய்வு வராமல் எழுதியிருப்பது இவரது தனிப்பெரும் ஆற்றலை எடுத்துக் காட்டுகிறது.

இறைமையும் இலக்கியமும் ஒன்றிய இந்த சிவமயமான பக்தி நூலைப் பிரசுரித்திருக்கும் கங்கை புத்தக நிலையத்தாருக்குப் பாராட்டுக்கள்.

பாரதி காவலர், டாக்டர். கே. இராமமூர்த்தி அவர்களது இலக்கியத் தொண்டும் சைவத் தொண்டும் வாழ்க, வளர்க, ஓங்குக என்று எல்லாம் வல்ல அருட்பெரும் ஜோதி ஆண்டவனை வேண்டி அமைகிறேன்.

சென்னை
6–5–99

சி.எஸ்.குப்புராஜ்
துணைத் தலைவர்
சைவ சித்தாந்தப் பெருமன்றம்
சென்னை-600 004.



பதிப்புரை

நூலின் ஏற்றம்

"சிவபக்தி தந்த செல்வம்" என்ற வரலாற்றுக் கதையின் முதல் நாயகர் சிவபெருமான். சிவபக்தன் பாணபத்திரன், சிவபக்த மன்னர் சேரமான் பெருமாள், உடன் வரும் நாயகர்கள்.

நூலின் மையமான திருமுகப் பாசுரத்தை இயற்றி அருளியவரே சிவபெருமான் என்பதால் நூலின் ஏற்றம் அதிகமாகிறது.

அயராத அன்புடைய பாணபத்திரனுக்குப் பெருஞ்செல்வம் தந்து அமைந்ததால், நூலின் ஏற்றம் மேலும் கூடுதலாகிறது.

சிவபெருமான் திருமுகப் பாசுரத்தை யாருக்கு எழுதினாரோ, அந்தச் சேரமன்னர், குதிரையின் செவியில் பஞ்சாட்சரத்தை ஓதி, சிவபிரான் அனுப்பிய வெள்ளை யானை மீதேறி வான்வழியே சென்ற சுந்தரரைச் சந்தித்து, எதிர் சேவித்து, திருக்கயிலாயம் சென்றடைந்து, அக்கயிலாயத்தில் கயிலை நாதனாம் சிவபெருமான் திருமுன்னர், நேராக சிவபிரானைத் தரிசனம் செய்தபடி, சிவபிரான் அருகே இருந்து, "திருக்கயிலாய ஞான உலா"

பாடியவரான சேரமான் பெருமாள் நாயனார் என்பதால், இந்த நூலின் ஏற்றம் பன்மடங்காகிப் பெருகிப் பயன் விளைவிப்பதாகிறது.

மேலும், சைவத்தின் வளமான பன்னிரு திருமுறைகளின் பாடல்களும் திருவிளையாடற் புராணப் பகுதியும் இடம் பெற்று, சிவச் சின்னங்களின் தரிசனங்களுடன் கூடி, தெய்வீகச் சீர்பெற்று, முக்காலும் திகழ்ந்து ஒளிர்வதனால் இதனைப் படிப்போருக்கும் கேட்போருக்கும் 'சிவபக்தி தந்த செல்வம்' வியாபகமாகி, அனைவரும் நலமோடும் வளமோடும் மங்களமாக வாழ்வாங்கு வாழ்வார்கள்.

பாரதிகாவலர் எழுதிய இந்நூலை தமிழ் மக்களுக்கு வழங்குகிறோம்.

-கங்கை புத்தக நிலையத்தார்

என்னுரை

"சுவை புதிது, பொருள் புதிது, வளம் புதிது, சொற் புதிது..." என்ற அற்புதமான வார்த்தைகள் என் சிந்தையை ஈர்த்து நெஞ்சில் நிலைத்திருப்பவை.

இந்த வார்த்தைகளைக் கொண்ட மகாகவி சுப்ரமண்ய பாரதியின் 'சீட்டுக்கவி'யைப் படிக்கும் போதெல்லாம் சிவ பெருமான் அருளிய, "மதிமலி புரிசை..." எனத் தொடங்கும் சீட்டுக்கவி, என்னை ஆகர்ஷித்து, என் இதயத்தில் பவனி வந்து கொண்டே இருந்தது.

சைவத்திருமுறை பன்னிரெண்டில், 11-ம் திருமுறையின் முதற் பாசுரமாகிய திருவாலவாயுடையார் அருளிய திருமுகப் பாசுரம் என்னும் சீட்டுக்கவி என் உள்ளத்தில் திருவலம் வந்த வண்ணம் இருந்தது. அந்தத் தெய்வக்கவி துலங்க, திருவிளை யாடற் புராணத்தில் சிவபெருமான அருளிய திருமுகப்பாசுரப் படலத்தையும் படித்து அந்தமிலா ஆனந்தத்தில் திளைத்தேன்.

திருவாலயுடையாராகிய சோமசுந்தரக் கடவுளிடம் பாணபத்திரனின் சிரத்தையோடு ஒன்றிய அயராத அன்பு, என் நெஞ்சைப் பெரிதும் நெகிழ வைத்தது. அந்த நெகிழ்ச்சியினால் உந்தப் பெற்று பன்னிரு திருமுறைகளிலும் திருவிளையாடல் புராணத்திலும் சங்கரரின் வேத வேதாந்தங்களிலும் சரித்திர ஆய்வுகளிலும் ஈடுபட்டேன்.

என் இல்லத்தரசி கங்கா ராமமூர்த்தி சிவபக்தி நிறைந்த வரலாற்றுக் கதையாக இதனை எழுதுவதற்கான அஸ்திவாரங் களைச் சொன்னதும் அதில் பெரிதும் முனைந்தேன். அந்த முனைப்பில் அசை போட்டுக் கொண்டிருந்தேன்.

பாணபத்திரன் சிவபக்தியில் தோய்ந்தவன். பாணர்குலத்தவன். பாணர்களின் வரலாறு, அவர்களின் பக்தி கலந்த இசை யாழ் பற்றி நிறைவான செய்திகளை சேகரம் செய்தேன். பாணபத்திரன் வரகுண பாண்டிய மன்னன் அவைச் சம்பவங்களும் பாண்டிய மன்னர்களின் சைவத்திருப் பணிகளும் வரலாற்றில் இன்னும் ஆழமாகச் சொல்லப்பட வேண்டும் என்று தோன்றியது.

சிவபெருமானின் அறுபத்து நான்கு திருவிளையாடல்களை விவரிக்கும் திருவிளையாடல் புராணத்தில் உள்ள திருமுகப் பாசுரம் கொடுத்த படலத்தை முதன்மைப் படுத்தி அதற்கேற்ப அமைத்துக் கொண்டேன்.

நாற்பது ஆண்டுகளுக்கு மேல் ஆட்சி புரிந்த மாமன்னன் வரகுணபாண்டியன். 8–ம் நூற்றாண்டின் இறுதியிலும் 9–ம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் செங்கோல் ஓச்சிய சிவநெறி பற்றிய அப்பேரரசனை ''வரகுணதேவர்'' என்றே போற்றினார்கள். பாணபத்திரன் வரகுணபாண்டியன் இருவரிடமும் நிலவிய நேசம் விரிவாகச் சொல்லப்பட வேண்டும் என்று அவாவினேன். பல நூல்களைத் தேடிப் படித்தேன்.

சிவபெருமான் பாணபத்திரனுக்குத் திருமுகப்பாசுரம் [சீட்டுக்கவி] அருளி சேரமான் பெருமாள் நாயனார் மாண்பொருள் அளிக்கக் கோரிய வரலாற்று நிகழ்ச்சியை விரிவாகவும், தெளிவாகவும் தெரிவிக்க விரும்பினேன். அதே காலகட்டத்தில் வாழ்ந்தவரான சேரமன்னன் சேரமான் பெருமாள் நாயனாரின் சிவப்பற்றும் சுந்தரமூர்த்தி நாயனாரின் 'அஞ்சைக் களத்து அப்பனே' என்ற பக்திப் பாசுரமும் மேலும் இதில் என்னை ஈடுபட

வைத்தது. அதே காலகட்டத்தில் சங்கரர் வாழ்ந்ததையும் வரலாற்றில் காணலாம்.

8–ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 9–ம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் நிகழ்ந்த இந்த சிவமயமான வரலாற்று – சரித்திர நிகழ்ச்சிகளை மையப்படுத்தி இலக்கியச் செறிவும் இறைமை உணர்வும் நிறைந்தவாறு பாணபத்திரன் வரலாற்றை ‘சிவபக்தி தந்த செல்வம்’ என்னும் ஒரு நெடுங்கதையாக உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டேன்.

சேரநாட்டு திருவஞ்சைக் களத்து வீதித் திண்ணை ஒன்றில் பாணபத்திரன் சீட்டுக்கவியுடன் அமர்ந்திருப்பதாகத் தொடங்கி ‘ப்ளாஷ் பேக்’ (Flash-Back) உத்தியில் எழுதியிருக்கிறேன். பாணபத்திரன், பாணர்களின் பெருமை, யாழ் வகைகள், பாணன் பயணமாகும் நிலங்கள், திணை, பருவம் ஆகிய செந்தமிழ் இலக்கியச் செய்திகளையும் உரிய வண்ணம் உரிய இடங்களில் சேர்த்திருக்கிறேன். வண்ணங்களைப் பற்றியும் எழுதி உள்ளேன்.

தமிழ் மூவேந்தர்களின் திருப்பூவணத்து சந்திப்பும், சேரமான் சங்கரர் சந்திப்பும், சுந்தரர் சேரமான் சந்திப்பும், பக்தியும் வேதாந்தமும் கலந்தவாறு அமைக்கப்பட்டிருக்கிறது. மேலும் வரலாற்று நெடுங்கதையாக எழுதும் முயற்சியில் அதற்குரிய கதைப் பாங்கோடு தொடர்பான சம்பவங்களையும், செய்திகளையும் சொல்லியிருக்கிறேன். அனைத்தையும் சரித்திரச் சான்றுகளுடனும் இலக்கிய ஆதாரங்களுடனும் அமைப்பதில் மிகுந்த கவனம் எடுத்துக் கொண்டு இந்நூலை எழுதியிருக்கிறேன்.

முழுமையும் சிவ மயமான இந்நூலில் பல மன்னர்கள், பல திருத்தலங்கள், புண்ணிய நதிகள், மகான்கள், அருளாளர்கள், புலவர் பெருமக்கள் பற்றியும் பல தத்துவங்கள், சைவப் பெரியார்களின் பாசுரங்கள் பற்றியும் கதையோட்டத்துடன் இணைந்து செல்லும் வகையில் எழுதியிருக்கிறேன்.

சிரத்தையே பெரும் செல்வமாகும். மெய்ப்பாடு நிறைந்த பாணபத்திரனின் சிவபக்தியை அயராத அன்பாக சிவபெருமான் ஏற்று அருளிய பக்திக் கதை இது. பாணபத்திரனுக்கு, சேரமான் பெருமாள் மூலம் பெருஞ்செல்வம் வழங்கிய சிவபெருமான் அருளிய திருமுகப் பாசுரத்தின் கதையே 'சிவபக்தி தந்த செல்வம்' என்ற நூலாக உருவாகியிருக்கிறது.

என் இனிய சகோதரரும் கலைமகள் ஆசிரியரும் ஆன கீழாம்பூர் சங்கரசுப்ரமணியன் இரண்டாண்டுகளுக்கு முன்பு 'சீட்டுக்கவி' என்றதலைப்பில் தீபாவளி மலருக்கு கட்டுரை எழுதப் பணித்தார். மலரில் நான் எழுதிய அக்கட்டுரை, இந்நூலை எழுத அடித்தளமாக அமைந்ததை எண்ணி, அவருக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தெய்வபக்தி மிகுந்த வானதி திருநாவுக்கரசு அவர்களிடமும் அவரது குமாரர்கள் திரு.சோமசுந்தரம், திரு.ராமநாதன் அவர்களிடமும் ஒருநாள் இந்த சிவமயமான வரலாற்றுக் கதையைச்சொன்ன பொழுது சிரத்தையோடு அவர்கள் செவிமடுத்துக் கேட்டது எனக்கு மெய்ச் சிலிர்ப்பூட்டியது. இலக்கியப் பணிகளுடன் தேசபக்தி தெய்வபக்தி பணிபுரிகிறவர்கள் வானதி குடும்பத்தினர். இதனை நூலாக எழுதப் பணித்ததை, ''இறையருள் வழங்கும் வரப்பிரசாதமாக'' ஏற்று நூற்பணியில் மேலும் தீவிரமாக முனைந்து, இந்த ஓராண்டில் நிறைவு செய்தேன். இது என் பேறு ஆகும். அவர்களுக்கு என்றும் என் நன்றி உரித்தாகும்.

தேவாரத் திருப்பதிகங்கள், திருவாசகம் இவற்றைச் சிறப்பாக பிரசுரித்திருக்கும் கங்கை புத்தக நிலையத்தின் சார்பில் 'சிவபக்தி தந்த செல்வம்' என்ற இந்நூல் வெளிவருவதில் மிக மகிழ்ச்சியடைகிறேன். திரு.ராமநாதன் அவர்களுக்கு என் நன்றியைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ் அறிஞர்களும் அருளாளர்களும் சைவசமயப் பெரியார்களும் இலக்கிய ஆர்வலர்களும், இந்நூலை வரவேற்க வேண்டுகிறேன்.

பெரியபுராணம், கந்தபுராணம், திருவிளையாடற் புராணம் மூன்றும் முக்கண்கள். திருவிளையாடற் புராணத்துக்கு மதிப்பு மிகுதி; பக்தியுடன் பாராயணம் செய்யும் சிறப்பும் மிகுதி. ஆக, அதில் இடம்பெற்று உள்ள "அயரா அன்புடன் சிவபக்தி கொண்ட பாணனின் வாழ்வு வளம் பெற்று செல்வச் செழிப்பாகிய வரலாற்றை," சிவபக்தி இழையோட எழுத விரும்பினேன்.

பக்திச் சுவையும், தத்துவப் பொருளும், செந்தமிழ் இலக்கிய வளமும், சிவமயமான சொற்களும் புதிய வண்ணம் பொலிந்து திகழுமாறு ஆய்வுடன் பெரிதும் முயன்று எழுதி இருக்கிறேன்.

இந்நூலில் குறைகள் இருக்குமானால் அது என்னைச் சார்ந்ததே. நூலின் சிறப்பும் ஏற்றமும் சிவபெருமானின் திருவருளாகும்.

பல நூல்களை நான் எழுதியிருந்தாலும், தமிழ் அன்பர்களின் ஆதரவும், பாராட்டும் பெற்றிருந்தாலும் முதன்முதலாக இந்த வரலாற்றுக் கதையை பக்திப்பூர்வமாகவும், மிகுந்த பணிவுடனும் எழுதியிருப்பதை வரவேற்க வேண்டுகிறேன்.

சிவபக்தி தந்த செல்வம் அனைவருக்கும் வியாபகமாகி எல்லாருக்கும் எல்லா விதமான மங்களங்களும் உண்டாகட்டும்.

பாரதிகாவலர் கே. ராமமூர்த்தி

14.04.1999
அபிராமபுரம்,
சென்னை–600 018.

பொருளடக்கம்

அனுபந்தம்

1
அந்தத் திண்ணையில் பாணபத்திரன்

கையிலே திருமுகப்பாசுரம்; மெய்யிலே திருநீறு; வாயிலே பஞ்சாக்ஷரம்; நினைவிலே சிவ உருவம்; நெஞ்சிலே சிவநேசம்; உணர்விலே சிவபக்தி; சிந்தனையெல்லாம் சிவமயம்.

பாணபத்திரன், திருமுகப்பாசுரம் என்றழைக்கப்படும் சீட்டுக்கவியுடன், அந்தத் திண்ணையில் அமர்ந்திருந்தான். திண்ணை அவ்வளவு வழுவழுப்பானதல்ல. சற்றே சொரசொரப்பான தளமுடையது தான்.

அக்காலத்து வீடுகளில், வீட்டின் வாசற்படியை அடைந்ததுமே, பொதுவாக இருபுறமோ அல்லது ஒரு புறத்திலோ திண்ணை அமைந்திருக்கும். அனேகமாக, எல்லா வீடுகளின் முன்புறத்திலும் திண்ணைகள் உண்டு. திண்ணையை, தெற்றி என்பதுமுண்டு.

ஊரில், வீதிகள் தோறும் உள்ள வீடுகளில் திண்ணைகள் எடுப்பாக்க் காட்சி தரும். வரிசையாக வீடுகள் வனப்பாக அமைந்திருக்கும். ஏறி அமர்வதற்குக் கொஞ்சம் சிரமமாக இருந்தாலும், அவ்வளவு ஒன்றும் அதிகமான உயரமாக இருக்காது. வழிப்போக்கர்களை 'வருக வருக' என்று வரவேற்பதாகக் கூடத் தோன்றும்.

சில வீடுகளில் உள்ள திண்ணைகளில் தனியாகத் திண்டுகள் (அரை வட்ட வடிவான பஞ்சணைகள்) வைத்திருப்பார்கள். சில வீடுகளில் திண்டு போலவே கற்களால் கட்டி, திண்ணையுடன் சேர்ந்தவாறே அமைத்திருப்பார்கள். எடுப்பாக இருக்கும்; நிரந்தரமான திண்டு அது.

பாணபத்திரன் வந்தமர்ந்த வீட்டுத் திண்ணை விசாலமானது. நீண்ட சதுரம் என்று தான் சொல்ல வேண்டும். பஞ்சணைத் திண்டு எதுவும் அங்கு இல்லை. ஆனால் வந்து அமர்பவர்கள் களைப்பு நீங்கிவிட கால் நீட்டி, முதுகு சாய்ந்து, அமர்ந்து கொள்ளும்படியான சாய்வான திண்டு, திண்ணையோடு சேர்ந்தே அமைக்கப்பட்டிருந்தது.

அந்த வீட்டின் முன்புற வாயிலும், திண்ணையும் திண்டும் பாணபத்திரன் கண்களில் பட்டதுமே, அங்கு சென்று அமர்ந்து களைப்பாற்றிக் கொள்ளும் எண்ணத்தை உண்டாக்கி விட்டது.

சேர நாட்டின் திருவஞ்சைக்களத்துத் திருவீதியில் உள்ள ஒரு வீட்டுத் திண்ணை; பாணபத்திரனை, ஆகர்ஷணம் செய்துவிட்ட அருமையான திண்ணை அது.

அங்கே, ஒரு தண்ணீர்ப்பந்தல். தாகமுடன் வந்தவர்கள் நீர் அருந்தி தாகம் தணித்துக் கொள்ள உதவுகிற தண்ணீர்ப்பந்தல். வேகமாக வந்த களைப்பும் உடலின் அசதியும் தீர, இளைப்பாற்றிக் கொள்ளலாம், திண்ணையில் அமர்ந்தபடி.

பயணச்சோர்வு நீங்கிவிட, பாணபத்திரன் அந்தத் திண்ணையில் அமர்ந்தான்.

சுவர் ஓரமாக இருந்த திண்ணைத் திண்டின் மீது சாய்ந்து கொண்டபடியே, தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டான், பாணபத்திரன்.

பாணர்களின் தலைவன் பாணபத்திரன்; தேன் மழையாய் யாழிசை வழங்குபவன் பாணபத்திரன்.

பண்டையத் தமிழ்நாட்டில், பாணர் என்போரும் வாணர் என்போரும் பெயர் பெற்ற குடிமக்களாவர்.

பழந்தமிழ் நாட்டில் ஆட்சிபுரிந்த குல மன்னர்கள் பலராவர். பல வகுப்பாரும் பல இனத்தாரும் வாழ்ந்து வந்திருக்கிறார்கள்.

நாகர் என்றொரு இனத்தார் நாகநாட்டை ஆண்டதாகத் தெரிகிறது. சிலப்பதிகாரத்தில் மங்கல வாழ்த்தில் காணலாம்.

அருவர் என்பார் வாழ்ந்த நாடு அருவநாடு என்பார்கள்; கலிங்கத்துப் பரணியில்,

"ஒருவர் ஒருவர்மேல் வீழ்ந்து வடநாடர்
அருவர் அருவரென அஞ்சி"

என்பதாகப் பாடப்பட்டிருக்கிறது.

மழவர் என்ற பழம் குலத்தைச் சார்ந்தவர்கள் பெரும்படை வீரர்களாவார்கள்.

"மின்னார் செஞ்சடைமேல்
மிளிர் கொன்றை யணிந்தவனே
மன்னே மாமணியே
மழபாடியுள் மாணிக்கமே"

என்று தேவாரம் செப்புகிறது. 'மழபாடியே மழுவாளனார்' எனத் திருநாவுக்கரசர் பாடி ஊர்ப்பெயர்

மழபாடியை, அங்குள்ள நாதனின் நாமம் மழுவாடி எனவும் தெரிவிக்கிறார்.

பண்டையத் தமிழ் நிலத்தில் திரையர் என்று ஒரு பழங்குடியினர் உண்டு. திரைகடல் வந்தவர்கள் திரையினர் ஆயினர் என்பாரும் உளர். இளந்திரையன் என்று ஒரு மன்னன் இருந்திருக்கிறான்.

முத்தரையர் என்ற பழந்தமிழ் குலத்தவர் படை வீரர்களாகத் திகழ்ந்தனர். நாலடியாரில் முத்தரையர்களின் வள்ளல் தன்மை விவரிக்கப்பட்டுள்ளது. 'முத்தரையர் கோவை' என்றே நூல் ஒன்று இருந்ததாக சரித்திரமே சான்று பகர்கிறது.

முனையர் என்று வாழ்ந்த தமிழ்க்குலம் பண்டையச் சிறப்பு வாய்ந்தது. திருமுனைப்பாடி நாடு அவர்கள் ஆட்சி புரிந்த நிலமாகும். முனையர் பாடி என்பதே முனைப்பாடி ஆகியிருக்கிறது. சமயக்குரவர் சுந்தரர் காலத்தில் திருமுனைப்பாடி நாட்டை ஆண்ட அரசன் 'நரசிங்க முனையர்' என்றும் திருத்தொண்டர் புராணத்தில் காணலாம்.

அதியர் என்றொரு குலத்தாரை அதியமான், அதியர்கோமான் என்றும் கூறுவர். கடையெழு வள்ளல்களில் ஒருவனாவான், அதியமான் நெடுமாறன் அஞ்சியார். தகடூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்ததைத் தமிழ் இலக்கியம் கூறும்.

பழனிமலைப் பகுதிகளில் பண்புடன் வாழ்ந்த தமிழ்க்குலம் ஆவியர் குலம். ஆவியர் கோமான் அக்குலத் தலைவன். பேகன் என்று பிரசித்திபெற்ற வையாவிக் கோப்பெரும் பேகன் கடையெழு வள்ளல்களில் ஒருவனான ஆவியர் குலத்தவ்ன் தான்.

ஆவினன் குடியினர் என்பதும் திருஆவினன்குடி என்பதும் பழனியை நினைவு படுத்துபவை.

ஒய்மா நாடு என்று ஒரு நாட்டை ஆண்ட தமிழ்க் குல நிலமன்னன் நல்லியக் கோடன். அவர்கள், ஓவியர் என்ற வகுப்பினரைச் சேர்ந்தவர்கள்.

வேளிர் என்கிற வகுப்பாரும் தமிழ்நாட்டில் வாழ்ந்திருக்கிறார்கள்.

“வேளான் குலத்தின் கண்வரும் பெருமைக் குறுக்கையர் தம் குடிவிளங்கும்” என்று திருநாவுக்கரசர் புராணம் கூறுகிறது.

இவ்வாறு, பண்டையத் தமிழ்நாட்டில், பலகுலத்தாரும் குறுநில மன்னராகவும் வாழ்ந்து வந்த பெருமைகளுடன் ‘பாணர்’ என்பாருடைய அருஞ்சிறப்பும் வரலாற்றில் நிற்பதாகும்.

சேர சோழ பாண்டியரென்னும் மும்மன்னர்களின் செங்கோலும், சிவபக்தியும் சிவத்தொண்டும் போன்றே இறைபக்தியாம் சிவபக்தியில் இணை கூற முடியாத அளவு மேம்பட்டுத் திகழ்ந்த பழந்தமிழ்க் குலம் பாணர் குலமாகும்.

ஏரும் கலப்பையும் வாழ்வுக்கு இன்றியமையாதது. சிலப்பதிகாரம் எழுதப்பட்ட காலத்திலேயே ஏர்க்களத்தைப் பற்றி பாணர்கள் பாடியுள்ளார்கள். பரிசில் பல பெற்றுச் சிறப்பும் அடைந்திருக்கிறார்கள்.

பாணர் குலத்தின் வாழ்வும், தொண்டும் பைந்தமிழ்நாட்டு பக்தி வரலாற்றில் தனி இடம் பெற்றுத் திகழ்கின்ற ஒன்றாகும். வரலாற்றில் பதிந்த பாணர்களின் வாழ்வு இறைமயமானது; இசைமயமானது.

2
பக்தி நிறைந்த பாணபுரம்

பண்டைய பாணர் குலம் புகழ் மிக்கது; பாணர்களின் ஆட்சி மாட்சி நிறைந்தது.

பிற அரசர்களைப் போன்றே, பாணர் குலத்து அரசர்களும், தங்கள் நிலப்பகுதியை விரிவுபடுத்திக் கொண்டு உள்ளனர். பாணர்களின் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளைக் கொண்ட நிலத்தை, பாணராஷ்டிரம் என்று அழைத்து வந்தார்கள்.

பாணராஷ்டிரம் என்றும், அவர்கள் நாடு பெரும்பாணப்பாடி என்றும் வழங்கப்பட்டு வந்தது. பாணபுரம் அதன் தலைநகராகத் திகழ்ந்தது.

செந்தமிழின் சீர் பொலிந்த சங்க காலத்திலேயே பாணர்கள் வாழ்ந்து வந்தனர். பாணர் மரபில் வந்த அரசனின் மகனான கீர்த்தி என்பவளைத் சோழ மன்னன் திருமணம் செய்து கொண்டு பாணர்களுடன் உறவு பூண்டான்.

காவிரிப்பூம்பட்டினத்தை ஆண்ட நெடுமுடிக்கிள்ளி எனும் சோழ அரசனே அவன். சோழ மன்னன் நெடுமுடிக்கிள்ளிக்கும் பாணர்குல இளவரசி கீர்த்திக்கும் பிறந்தவன் தான், உதயகுமாரன் என்பவன்.

சங்க காலத்தைத் தொடர்ந்தே, பாணர்களின் ஆட்சி நடந்தது. கி.பி. 5-ம் நூற்றாண்டில் 'பாணராஷ்டிரம்'

என்று வழங்கப்பட்டிருக்கிறது. பாலாற்றின் வடக்கே உள்ள பகுதி பாணர்கள் ஆண்ட நிலம் என்பதாகத் தெரிகிறது.

திருவதிகை, திருப்பாதிரிப்புலியூர், பண்ருட்டி ஆகிய நிலப்பகுதிகள் பாணராஷ்டிரத்தைச் சேர்ந்தவையாக இருந்தன.

திருவதிகை என்னும் ஊர் பாடல் பெற்ற சிவத்தலம். சிவபெருமான் முப்புரங்களை எரித்த தலம் இத்திருவதிகை என்பதால், இதனை வீரட்டானத் தலமாக அழைப்பார்கள்.

திருவதிகைக்குப் பல்வேறு சிறப்புக்கள் உண்டு. பெண்ணையாற்றின் கிளை ஆறான மலட்டாறு சுந்தர மூர்த்தி சுவாமிகளால்,

"வைத்தாய் பெண்ணைத் தென்பால்;
வெண்ணெய் நல்லூர் அருட்டுறையும்"

என்று பாடப்பெற்ற சிறப்புப் பெற்ற ஆறு. இதற்குத் தெற்கே பாய்கிறது, கெடிலம் என்னும் ஆறு. இந்த கெடிலம் ஆற்றின் கரையில் உள்ள தலமே திருவதிகை.

கெடிலம் ஆறும் திருவதிகையும் திருநாவுக்கரசரால் பாடப்பெற்ற பெருமை உடைய நதியும் பதியும் ஆகும்.

திருவதிகை, சிவத்தலம் என்பதுடன் சமயக்குரவரின் பாடல் பெற்ற திருத்தலமும் ஆகும். இங்குள்ள சிவன்கோயிலின் பெரியகோபுர நிலைகளில் உள்ள நடனச் சிற்பங்கள் சிதம்பரம் மேலைக் கோபுரவாயில் நிலைகளில் உள்ள சிற்பத்தைப் போன்றவையாகும்.

திருவதிகைக் கோயில் கருவறை, தேர் போன்று அலங்கரிக்கப்பட்டு நிழல், பூமியில் சாயாத வண்ணம் நிர்மாணிக்கப்பட்டு உள்ளது கவின் தருகாட்சியாகும்.

நாவுக்கரசரின் தமக்கை திலகவதியார் தங்கி, சிவத்தொண்டு புரிந்த இடம் திருவதிகை. திருநாவுக்கரசர் திருவதிகைப் பெருமானைப் பணிந்த இடம் இதுதான். தமக்கையர் தந்த திருவெண்ணீற்றை அணிந்து, திருவதிகைக் கோயிலின் உட்சென்று,

"கூற்றாயின வாறு விலக்க கிலீர்
கொடுமை பல செய்தன நானறியேன்"

என்று தொடங்கி, பத்துப்பாடல்களைப் பாடினார். நாவுக்கரசர் முதல் திருப்பதிகம் பாடியது திருவதிகையில் தான்.

"ஆற்றேனடி யேனதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே"

என்று நிறைவு செய்து பத்துப் பத்தாகப் பாடிய நாவுக்கரசரின் சூலை நோயைத் தீர்த்த திருத்தலம் திருவதிகை.

கெடில வீரட்டானத் துறை யம்மானே என்று முடியும் பத்துப் பாடல்களும், திருவதிகைக்கும் கெடில ஆற்றுக்கும் புனிதம் தருவதாக அமைந்தன.

திருவதிகை - வீரட்டானம் திருவடித்தாண்டகம் என்று மேலும் பத்துப்பாடல்களும் தெய்வப் புனற் கெடில திருவதிகைத் தென்கடில என்றவாறு சந்தமுடன் இசைக்கும்.

சிவபக்தியூட்டும் திருவதிகை பாணராஷ்டிரத்தில் இருந்தது என்பதால் பாணர்களின் மாட்சி சுடர்ந்தொளிர்ந்து மிகுந்து நிற்கிறது. திருநாவுக்கரசர் திருவதிகையில் தான், சைவராக மாறினார். இங்கே தான் உழவராகத் தொண்டு ஆற்றினார். நாவுக்கரசர்

காலத்தவரான திருஞான சம்பந்தர் திருவதிகைக்கு வந்து சிவபிரானைத் தரிசித்தார். தரிசித்த அவர்,

குண்டைக் குறட்பூதங் குழும அனலேந்தி,
கெண்டைப் பிறழ் தெண்ணீர்க் கெடில வடபக்கம்"

என்று தொடங்கிப் பதிகம் பாடினார்.

"கீதம் உமைப்பாடக் கெடில வடப்பக்கம்
வேத முதல்வன் நின்றாடும் வீரட்டானத்தே"

என்பதாக பத்துப்பாடல் பாடி திருவதிகைக்கு மேலும் சிறப்புச் சேர்த்தார்.

சுந்தர மூர்த்தி சுவாமிகளோ, நாவுக்கரசரின் உழவாரப்படையின் சீர்த்திக்கு முன்னே வரக் கூச்சம் கொண்டு, அருகில் இருந்த சித்தவட மடத்திலேயே தங்கினார்.

இத்தகைய சிவபக்தி நிறைந்த திருவதிகை பாணராஷ்டிரத்தில் இருந்த தலமாகும். பாணர்கள் மகாபலி (மாவலி) பாணன் மரபைச் சேர்ந்தவர்கள் என்று கல்வெட்டுக்களிலிருந்து தெரிய வருகிறது.

திருவல்லம் என்னும் இடத்தில் உள்ள சிவன்கோவில் கல்வெட்டுக்களில் பாணர்கள் பற்றிய செய்திகள் உள்ளன.

வல்லம் என்றால் அரண்மனை உடைய ஊர் என்றும் சொல்லலாம். வட ஆற்காட்டில் உள்ள திருவல்லம் பாணமன்னர்களின் கோட்டையாக விளங்கிற்று.

பாணர்கள் ஆண்ட நாட்டை பெரும் பாணப்பாடி என்றும் அழைப்பார்கள். நீண்ட காலம் அவர்கள் அங்கே ஆண்டு வந்தனர். பாண மன்னர் கட்டிய ஏரி ஒன்று கூட அங்கே இருந்தது.

பெரும்பாணப்பாடியின் தலைநகரம் திருவல்லம் என்பதாகும். திருவல்லம் என்பதை தீக்காலி வல்லம் என்றும் சொல்வதுண்டு. அந்தத் திருவல்லம் நிவா நதிக்கரையில் எழிலுடன் அமைந்திருந்த நகரமாகும். அதையே பாணபுரம் என்றும் அழைப்பார்கள்.

பாணபுரம் என்கிற திருவல்லமும் நிவாவும் பாடல்பெற்ற ஆறும் ஊரும் ஆகும்.

திருஞானசம்பந்தர் பாடல்கள் பாணர்களின் பண்ணுடன் ஒன்றியது.

"எரித்தவன் முப்புரமெரியின் மூழ்கத்
தரித்தவன் கங்கையைத் தாழ்சடை மேல்
விரித்தவன் வேதங்கள் வேறுவேறு
தெரித்தவன் உறைவிடம் திருவல்லமே"

என்பதாகப் பாடிப்பரவசம் கொண்ட தலம் திருவல்லம்.

"திருவல்லத்து சிவபிரான் தாயாவான்; உலகுக்குத் தன்னொப் பிலாத் தூயவன்; தூமதி சூடியெல்லாம் ஆயவன்; அமரருக்கும் முனிவர்கட்கும் சேயவன் உறைவிடம் திருவல்லமே" என்றெல்லாம் திருஞானசம்பந்தர் திருப்பதிகம் பாடிய தலம் திருவல்லமாகும்.

நிவா நதிக்கரையில் உள்ள தலமான திருவல்லத்தையும் நிவா நதியையும் நினைக்கும் போது திருஞானசம்பந்தரின் 'எந்தையீசன் எம்பெருமானேறமர் கடவுள் என்றேத்தி' எனத் தொடங்கும் பாட்டில்,

"கந்த மாமல ருந்திக்
கடும்புனல் நிவா
மல்கு கரைமேல்"

என்று வரும் வரிகள் சிந்தையில் நிற்கும்.

"மணி கலந்து பொன்னுந்தி வருபுனல் நிவா" என்றும் "மணம் கமழ்ந்து பொன்னுந்தி வருபுனல் நிவா" என்றும் சம்பந்தப் பெருமானின் பாட்டுவரிகள் பூம்புனலின் பெருமை பேசும்.

பெருமை கொண்ட அந்த நிவாவில் அகிலும் கதிர்மாமணியும் கலந்துந்தி வருமாம்; 'கறிமாமிளகும் மிகுவன் மரமும் மிகவுந்தி வரும் நிவாவின் கரைமேல்' என்று ஒரு பாட்டிலும், 'ஏலம் இலவங்கம் எழிற்கனகம் மிகவுந்தி வரும் நிவாவின் கரைமேல்' என்று பிறிதொரு பாட்டிலுமாக, சுந்தரர் பாடிப்பாடி 'நிலவெண்மதி சூடிய நின்மலனைப் பணிகிற பாங்கு பரவசமூட்டும்.

திருவதிகைப் பதியும் திருவல்லமாகிய பாணபுரமும் பாடல்பெற்ற தலமாகித் திகழ்ந்த அத்தகைய சீருடைய பாணபுரம் பைந்தமிழ் நாட்டு பக்தி இலக்கியத்தில் தனி இடம் பெற்றுத் திகழ்கின்ற ஒன்றாகும். வரலாற்றில் பதிந்த பாணர்களின் வாழ்வு இறைமயமானதாகும்.

"தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண் மதிசூடிக் காடுடைய சுடலைப் பொடி பூசியென் உள்ளங் கவர் கள்வன்; ஏடுடைய மலரான் முனைநாட் பணிந்தேத்த லருள் செய்த பீடுடைய பிரமாபுரமேவிய பெம்மானிவனன்றே" என்ற சிலிர்ப்பூட்டும் வரிகள் சமயக்குரவரான திருஞான சம்பந்தர் பாடிப் பரவசமூட்டியது.

தெய்வத் தலந்தோறும் சென்று பக்திப் பாடல்கள் பாடியருளிய திருஞான சம்பந்தப் பெருந்தகையுடன் கூடவே தலந்தோறும் சென்றவர், பாணர்குலத் திருத்தொண்டர்கள். சம்பந்தரின் பக்திப் பாட்டிற் கெல்லாம் யாழிசை அமைத்து, இன்னிசை கூட்டி,

சந்த நயம் மிளிர அருளமுதாய் அவற்றிற்கு நயம் சேர்த்தவர் திருநீலகண்ட யாழ்ப்பாணர் ஆவார்.

"... தாணுவெனை ஆளுடையான் தன்னடியார்க்கு அன்புடைமை
பாணன் இசை பத்திமையால் பாடுதம் பரிந்தளித்தான்..."

என்று திருஞான சம்பந்தர் பாடிஉள்ளார்.

"திருநீலகண்டத்துப் பாணனார்க்கு அடியேன்"

என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள், "மன்னிய சீர் மறைநாவன் நின்றவூர்ப்பூசல்" எனத் தொடங்கும் பாடலில் திருநீலகண்ட யாழ்ப்பாணருக்கு, தம்மை அடியவர் என்று பாடிப் பரவசம் கொள்கிறார் எனில், பாணர் தம் பெருமை தான் என்னே!

பாணனார்க்கும் அடியேன் என்று பாடிப் பரவசப்படுகிற சுந்தரர், "பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்" என்று பக்தியை பாட்டிசையோடு சேர்த்துத் தம்மை இறைஇசைக்கு அடிமையாக்கிக் கொண்டுள்ளார்.

அந்த இறை இசையை, ஏழிசையாய் இசைப் பயனாய் இருப்பவனே', ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே, பாட்டுக்கு உருகும் பரமன், என்றெல்லாம் போற்றியுள்ளார்கள். வாழ்வுடன் இசையும், இசையுடன் இறைமையும், அவைஒன்றிய வாழ்வே வாழ்வாகக் கொண்டவர்கள் தமிழர்கள்.

இந்த இசைக்கு அடிப்படை யாழ். "யாழிசைப் பிறவா இசையே என்கோ" என, சிலப்பதிகாரம் சொல்லும். இசைவளர்ந்தது யாழ் மூலம் என்பர். திருநீலகண்ட யாழ்ப்பாணர் தமிழ் நிலமெங்கும் யாழ் எடுத்துப் பாடி இறை இசை பரப்பினார். அவர் மட்டுமா! திருநீலகண்ட

யாழ்ப்பாணரின் மனைவி மதங்க சூளாமணியும் இப்பணியில் ஈடுபட்டார்.

அத்தகைய திருநீலகண்ட யாழ்ப்பாணர் பிறந்ததனால், எருக்கத்தம் புலியூர் பெருமை பெற்றது என்பர். அவர் பிறந்த அவ்வூரை திருவெருக்கத்தம் புலியூர் என்று சிறப்புடன் அழைப்பார்கள்.

கெடில நதி பாயும் தென்கரையில் பாதிரிமரங்கள் உள்ள புலியூரை திருப்பாதிரிப் புலியூர் என்பார்கள். விருத்தாசலத்தின் தென் பகுதியில் உள்ள புலியூரையும் எருக்கத்தம் புலியூர் என்பார்கள்.

தமிழில் நெல்லைப் பூமியில் அந்தம் என்பதை அத்தம் என்பதுண்டு. தமிழில் அத்தம் என்றால் காடு எனப்பொருள். எருக்கத்தம் என்பது எருக்கங்காடு. எருக்கஞ்செடிகள் அதிகமாகவும் நெருக்கமாகவும் காடுபோல் வளர்ந்துள்ள ஊரை எருக்கத்தம் புலியூர் என்றே வழங்கினார்கள்.

சிவபிரானுக்கு வெள்ளெருக்கு உகந்த மலர். அங்குள்ள கோயிலின் கர்ப்பக் கிருஹத்தினருகில் வெள்ளெருக்கு உள்ளது.

சமயக் குரவரின் பாடல்பெற்ற தலம் என்ற சீர்உடைய ஊர் இது. இந்த ஊரில் பிறந்த திருநீலகண்ட யாழ்ப்பாணர், செந்தமிழுடன் இசை ஒன்றிட சீர்காழிக்கோன் ஞானசம்பந்தருடன் பல தலங்களுக்குச் சென்றவர் என்று பூவுலகத்து மாந்தர் சொல்வார்களாம், அதனை,

"தனையொப் பருமெருக் கத்தம்
புலியூர்த் தகும்பகழோன்

நினையொப் பரும்திரு நீலகண்
டப்பெரும் பாணனைநீள்
சினையொப் பலர்பொழிற் சண்பையர்
கோன்செந் தமிழொடிசை
புனையப் பரன் அருள் பெற்றவன்
என்பரிப் பூதலத்தே”

என்பதாக, நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டர் திருவந்தாதியில் பாடிப் பெருமிதம் கொள்கிறார்.

நம்பியாண்டார், பதினோராம் திருமுறை ஆசிரியர்களில் ஒருவர். தேவாரத் திருமுறைகளை, பண் அமைத்து வகுத்த பெருமைக்குரிய நம்பியாண்டார் நம்பி, தேவாரப் பதிகங்களின் பண்களை, திருநீலகண்ட யாழ்ப்பாணர் வழி வந்த ஒருவர் மூலமாகத் தெரிந்து, தேர்ந்து பின்னரே அச்சீரியப் பணியை நிறைவு செய்தார். திருநீல கண்ட யாழ்ப்பாணரின் அருளிசையின் பண்புலமை அத்தகைய பெருமை உடையது.

அது காரணம் பற்றியே, திருநீலகண்டரை, ‘நீலகண்டப் பெரும்பாணனை’ எனப்போற்றி உள்ளனர்.

அவ்வாறான செம்பொன் சிற்றம்பலத்து ஈசனின் பாற்பட்டதான செழுநெறியாம் சிவநெறி பற்றி வாழும் பெரும்பாணர் வழிவந்த பாணர்களின் தலைவன் பாணபத்திரன்.

சம்புவே, உம்பர் தொழும் செம்பொன் சிவமே என்று சாமவேதனை, சசிதாங்கியசங்கரனை, வெண் தோடுடையவனை, நிதம் பணிந்து பாடுகின்ற பாணபத்திரன் அந்தத் திண்ணையில் அமர்ந்திருந்தான்.

பிறையணி, படர்சடை முடியிடைப் பெருகிய புனலுடைய இறையவனை இதயத்திற்குள்ளாகத்

தோத்தரித்தபடியே பாணபத்திரன் அங்கே அமர்ந்திருந்தான்.

பாணர்கள் பாடுவார்கள்; ஆடுவார்கள்; இறைமையுடன் இசை கலந்து யாழ் எடுத்துப் பாடுவது பாணர்களுக்கே உரியதாகும்.

ஆடலும், இயலும், சீருடன் இசைமுரசுடன் ஒன்றி, பாட்டாகப் பாணரிடமிருந்து பாங்குடன் சேர்வதை,

"ஆடு இயல் கொள்கை அந்தரி கோலம்
பாடும் பாணரிற் பாங்குறச் சேர்ந்து"

என சிலம்பின் வரிகள் சித்தரிக்கின்றன.

நாதனாகிய நன்னெறிப் பொருளினை, நர்த்தனனை, நீடிய நிமலனை, நிறைமதி தந்திடும் ஈசனை, அந்த இறைவனை,

"குழலினும் யாழினும் குரல்முதல் ஏழும்
வழுவின்றி இசைத்து வழித்திறம் காட்டும்"

என்று பழந்தமிழ்ப் பனுவல்கள், பாணர்களின் இசைப் பெருமையை யாழுடன் சேர்த்தே கூறும்.

பாணர்களின் வாழ்வுடன் யாழ் இணைந்த ஒன்றாகும்.

3
பாணர்களும் யாழும்

யாழ் என்றாலே பாணர்களின் நினைவு தான் அனைவருடைய உள்ளத்திலும் எழுந்து நிற்கும். யாழைச் சொல்லாமல், பாணர்களைச் சொல்ல இயலாது.

பண் பாடுகிறவர்களை பாணர் என்றே அழைப்பார்கள். பாணர்களை, பணி அடிப்படையிலும், குடி அடிப்படையிலும் வகைப்படுத்திச் சொல்வார்கள். இசைப்பாணர், யாழ்ப்பாணர், பிச்சை ஏற்றுப் பிழைக்கும் பண்டைப் பாணர்கள் என்பதாக மூவகை உண்டு.

யாழ்ப்பாணர்களிலும், சிறிய யாழ் கொண்டு இசைப்பவரை சிறுபாணர்கள் என மொழிவார்கள். பெரிய யாழினால் இசைப்பவரைப் பெரும்பாணர் என்றும் கூறுவார்கள்.

பாணர்களின் குடிச்சிறப்பு பண்டைய நாட்களில் முக்கியத்துவம் பெற்றுத் திகழ்ந்தது. சங்க காலத்துப் புறநானூற்றுப் பாடலில்,

> "துடியன் பாணன் பறையன் கடம்பனென்று
> இந்நான் கல்லது குடியுமில்லை"

என்றே சிறப்பிக்கப்பட்டுள்ளது.

கீதஞானம், இலக்கியஞானம், சுருதி ஞானம், தாள ஞானம் ஆகிய நால்வகை ஞானமுடைய இசை நூல் புலவர்கள் பாராட்டுகிற பெருமை பெற்றவர்கள்,

பாணர்கள். பாணர்குலப் பெண்களை விறலியர் என்பார்கள்.

இசைநயம் கூட்டி, பாடி, பாணர்களும் விறலியர்களும் பொற்றாமரையும், பொன்மாலைகளும் பரிசில் பெற்றிருக்கிறார்கள்.

தமிழ் மும்மன்னர்களும், கடையெழு வள்ளல்களும் பாணர்களுக்குச் சிறப்பளித்துப் போற்றி உள்ளனர். பாண்டிய மன்னர்களும், சோழ வேந்தர்களும், சேரத்து அரசர்களும் பாணர் குலத்தைப் பாதுகாத்து வந்துள்ளனர்.

பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்பான். பாணர்களுக்கு பொற்றாமரை பரிசில் வழங்கியிருக்கிறான்.

கரிகால் பெருவளத்தான் கோப்பெருஞ்சோழன் வழங்கிய கொடைகளின் வள்ளல் தன்மையை புறமும் பெருநராற்றுப்படையும் பகர்கின்றன. பறம்பு நாட்டுப்பாரி, வாரி வாரி வழங்கியதையும், கபிலர் பெருமான் கூறியுள்ளார். ஆய் என்று ஒரு வள்ளல்; அம்பர் கிழான் அருவந்தை என்று ஒரு வள்ளல்; இசைக்கலையில் ஆர்வமிகு செம்மல்களாகிய இவர்கள் பாணர்களை ஆதரித்துள்ளனர்.

இசைக்கலையில் பண்களின் மூலமாக இறை உணர்வூட்டிய பெருமை பாணர்களுக்கு உண்டு.

யாழ் எடுத்து மீட்டினால், ஏழிசை கேட்டு இன்புறச் செய்வார்கள், பாணர்கள்.

சோலைகளிலுள்ள அழகான வண்டுகளின் ரீங்காரம் யாழினின்று வரும் இசைபோன்றது என்பதை,

"கொம்பார் சோலைக் கோலவண்டு
யாழ்செய் குற்றாலம்"

என்ற வரிகளால் உணர முடிகிறது.

மாடகத்தை முறுக்கி, கட்டமைந்த நரம்புகளைத் தாக்கி கைவிரல் தழுவி, ஓசை எழுந்திட நாவசைவால் ஒலியேற்றும் பாணர்களின் இசையின் இறைமைக்கு, யாழ்க்கருவியே ஆதாரமாகி நின்றொளிர்வதாகும்.

பாணர்களுடன் ஒன்றிய யாழ், நரம்புக் கருவிகளில் ஒன்று. இசைக்குப் பிறப்பிடமானது, யாழாகும்.

தோல், துளை, நரம்பு, கஞ்சம், மிடறு (ஆண் பெண் குரல்) ஆகிய ஐந்தும் ஒன்றிட ''பஞ்சமாசத்தம்' என்பார்கள். அதில் நரம்பு வகைக் கருவிகளில் யாழ், வீணை கின்னரி (கின்னரம்) மூன்றினைக் குறிப்பிடுவார்கள். யாழிசையில் வல்ல ஒரு தேவகணத்தாரை கின்னரர் என்பார்கள். யாழிற்குரிய இசைபாடுவோர் பாணர்கள். இப்பாணர்களிலும் குழலன், மதங்கன், கவுண்டியன் என மூன்று வகையாகக் காட்டுவர்.

"குன்றாக் குழலன் மதங்கன் கவுண்டியனாம்
நன்றாகப் பண்பாடும் பாணரைச் சென்றே
அடிவணங்கிப் பொன்கொடுப்பர்..."

என்று பஞ்சமரபு இலக்கணம் சொல்லும்.

சுத்தம், சாளவம், தமிழ் என்னும் மூன்றினுள்ளும் ஓசையை உச்சரித்து, நாடியை அதிர்வுண்டாகும்படி செய்து வளைவாக்கி, மயங்கிசையாய் (தமிழ்) பண்கூட்டிப் பாடும் பாணர்களாம் மதங்கன் என்பார்க்கு யாழ்க்கருவி சிறப்பானதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

'மதங்கன்' என்பார்க்கு யாழ்க்கருவி எனச் சொல்லப்பட்டிருப்பது பொருத்தம் உடையதே.

'மதங்கி' என்றால் பாணர் சாதிப்பெண் என்பது பொருள். ஆனால், அதனினும் சிறந்த பொருள் என்னவென்றால், உமாதேவி என்பதாகும்.

மதங்கி என்பதனையே மாதங்கி என்றும் கூறலாம். மாதங்கி என்றால் பார்வதி தேவியைக் குறிக்கும். அந்த மாயன் மாமணிகண்டன், வளர்சடைமேல் மாதங்கிக் கங்கை நீர் மன்னுவித்தானின் தேவியே மாதங்கி.

மாதங்கி என்னும் சொல் மகத்துவமானது. மாதங்கி எனில் 'யாழின் தேவதை' என்றும் பொருள்படும் சிறப்புடைய பெயர் அது.

யாழ் என்பது நரம்புக்கருவிகளில் முதன்மைபெற்ற இசைக்கேற்ற கருவியாகும்.

அஞ்சேல் என்றால் ஆட்கொண்டு அருள் செய்வான். அந்தியஞ் செந்நிறத்தான்; அந்த அந்தியே போலும் அவிர்சடையான், அம்பலத்தாடும் சிவன் மீது பாடுகிறவன், பாணபத்திரன்; யாழ் உடைய பாணன்.

பாணர்களை சிறியாழ், பேரியாழ் இவற்றை இசைப்பதின் அடிப்படையில் இருவகையாகச் சொல்வர். சிறுபாணர் என்றும் பெரும்பாணர் என்றும் கூறுவர். சங்கம் மருவிய காலத்தில், மருவூர்ப் பாக்கத்தில் இசையுடன் ஒன்றியபடி பெரும்பாணர் வாழ்ந்திருக்கிறார்கள்.

"ஈரேழ் தொடுத்த செம்முறைக் கேள்வி" என்பதாக யாழிசையைக் குறிப்பிடுவார்கள். யாழினை, 'கேள்வி' என்ற பெயரிலும் அழைப்பதுண்டு.

இசைவளர்க்க, குழற்கருவியை கண்டவர்கள் முல்லை நிலத்தவர்கள். குழல் ஒலியைப் பற்றியே நரம்பொலி அமைக்கப்பட்டதென்பர். மூங்கில் குழலைத் தொடர்ந்து, வில்யாழ் வந்தது. பின்னரே, இசைக்கு பல பெயர்கள் சூட்டப் பட்டன. இசைமேலும் மேலும் வளர்ந்தோங்கியதே யாழ்க்கருவியினால் கிடைத்த பெரும் வாய்ப்புக்களால்தான்.

கலித்தொகையில், "காழ்வாரை நில்லாக் கடுங்களிற்றொருத்தல் யாழ்வரைத் தங்கியாங்கு" என்று யாழ் பற்றி பேசப்படுகிறது.

பழந்தமிழர்கள் வில்லினின்று நாண் செய்யும் ஒலியைச் செவியுற்றனர். இசை தரவல்லதான நரம்புக் கருவியாக, யாழ் என்பதனை அமைத்தார்கள்.

யாழ்க்கருவி காட்சிக்கு எப்படியிருந்தாலும், இசையை இனியவகையில் தரவல்லதாகும். பெரும் பாணாற்றுப் படை, யாழ் எடுத்து குறிஞ்சிப் பண்பாடி மகிழ்வதை அழகுபடத் தெரிவிக்கும்.

மாந்தர்களிடம் யாழ்க்கருவி மூலம் இசைபாடும் பாணர்கள் பெயரும் புகழும் பெற்று விளங்கி வந்தார்கள்.

வில்லினையொத்த வடிவமுடைய யாழினையே வீணை என்ற பெயரிலும் அழைத்து வந்தனர். "மாசில் வீணையும் மாலை மதியமும்" என்ற நாவுக்கரசரின் பாட்டு வரியும், "இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால், இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்" என்ற மணிவாசகரின் திருப்பள்ளி எழுச்சி பாட்டு வரியும் யாழில் தோத்திரம் இயம்பியதைப் பகரும்.

அவ்வாறான யாழ் வாசிப்பதில் வல்லவர்களான பாணர்களின் தலைவன் பாணபத்திரன்.

யாழ்வகைகளிலும் பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டு யாழ் என நால்வகை யாழ் உண்டு.

"பேரியாழ் பின்னுமகரஞ் சகோடமுடன்
சீர்பொலி செங்கோடு செப்பினாற் றார்பொலிந்த
மன்ன திருமாற வண்கூடற் பெருமானே
யின்ன முளவே சில"

என்று அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரையில் குறிப்பிட்டுள்ளார்.

பேரியாழ் இருபத்தோறு நரம்புகளிலும், மகரயாழ் (மகர-மீன் வடிவு) பத்தொன்பது நரம்புகளிலும், சகோட யாழ் பதினான்கு நரம்புகளாலும், செங்கோட்டு யாழ் ஏழு நரம்புகளாலும் கட்டப்பட்ட இசைக்கருவிகளாகும்.

'இன்னமுளவே சில' என்ற வரிகளின்படி வேறு சிலயாழ்களும் இருந்திருக்கின்றன. அவற்றின் பெயர்கள் அதில் கூறப்படவில்லை.

வில்யாழ், நாரதப்பேரியாழ், கீசகப்பேரியாழ், ஆதியாழ் என்கிற ஆயிரப்பேரியாழ் ஆகியவைகளும் இருந்திருக்கின்றன.

"வில் யாழிசைக்கும் விரலெறி குறிச்சிப்
பல்காற் பறலைகிளைச் செத்தோர்க்கும்"

என்ற பெரும்பாணாற்றுப் பாடல் வரிகளும்,

"ஆரியர் பதங்கொள் நாரதப் பேரியாழ்"

மற்றும்

"கீசகப் பேரியாழ், கிளையுடன் முரல"

என்ற கல்லாடத்தில் வரும் பாடல் வரிகளும்

"ஆயிரம் நரம்பிற்றாதி யாழும்"

என்று பிங்கலத்தையில் வரும் பாடல்வரியும் யாழ் வகைகளைக் கண்முன்னிறுத்தும்.

யாழிசையில் ஏழியிசையை இசைக்கும் வல்லவர்கள் பாணர்கள். அந்தப் பாணர்களின் தலைவன் பாணபத்திரன். திருவஞ்சைக்களத்து வீதித்திண்ணையில், யாழ்வல்லான், பாணபத்திரன் அமர்ந்திருந்தான்.

பண் இசைத்துப் பாடுவதில் கால அளவு முறைகளும், அதற்குரிய ஓசைகளின் அளவும் வரையறைக்கப்பட்டு உள்ளன. 'ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே' என்று இறைவனைப் பாடுவார்கள்.

அலகு, மாத்திரை, சுருதி என்பார்கள். குரல் (ம), துத்தம் (ப), கைக்கிளை (த), உழை (நி), இளரி (ச), விளரி (ரி), தாரம் (க) ஆகப் பண் ஏழும் கூடி, சங்கு, குயில், யானை, மயில், புரவி, அன்னம், காடை (ஒரு பறவை) ஆகிய ஏழின் ஓசையும் 4, 4, 3, 2, 4, 3, 2 மாத்திரை அளவுடன் எழுந்திட யாழ் எடுத்து மிடற்றுவது (பாடுவது) பண்டைய மரபு.

இவ்வாறு பரவசமுண்டாக்கப் பாடுவார்கள் பாணர்கள்.

> "சங்கு குயிலோடி யானைமயில் வாம் புரவிப்
> பொங்குபு னலன்னம் புகைக் காடை—துங்கமாம்
> யாழிசையினும் பொருளினைச் சொன்னாரிசைப் புலவோர்
> ஏழிசையு மென்றாரிவை"

இவ்வாறு யாழின் வழி வரும் ஏழிசையைச் சொல்லியுள்ளார்கள்.

நான்கு வகை யாழைப் பற்றிக் கூறும் பாட்டில், "மன்னர் திருமாறவண் கூடற்பெருமானே" என்ற

மூன்றாவது வரி, முடத்திருமாறன் என்றும் பாண்டிய மன்னனைக் குறிப்பிடுவதாகும்.

மணிமாடமோங்கும் மதுரையர் கோவான திருமாறன், இரண்டாவது கடற்கோளால் அழிந்த கபாடபுரம் விட்டு, மதுரைத் தமிழ்ச் சங்கம் நிறுவிய பாண்டியன் என்பர்.

"பொதிய மலைத் தென்னன், புயல் தணிந்த வீரன், திருமடந்தை மன்னன்'' என்று போற்றப்பட்ட பாண்டியன்-அந்தப்பாண்டியன் தொன்மைபோல் பாணர்களின் தொன்மையும் யாழின் சேர்க்கையுமாக ஒன்றிய பாணர் குலத்தில் வந்தவன் தான் பாணபத்திரன்.

பாணர்கள், பரிசில் பல பெற்று வாழ்ந்திருக்கிறார்கள். பரிசில் பெற்ற ஒரு பாணன், பரிசில் பெறவிருக்கும் மற்றொருபாணனை ஆற்றுப் படுத்துவர் - வழிப்படுத்துவர்.

செந்தமிழ் இலக்கியத்தில் அவ்வாறு பாணர்கள் ஆற்றுப்படுத்தியவையே சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை என்று பதினெண் மேற்கணக்கு பத்துப்பாட்டில் இரண்டாக அமைந்துள்ளன.

தமிழ்ப் பெருநிலத்தின் வள்ளல்களின் கொடைத்திறமும், மாந்தரின் வாழ்வு, வீரம், விருந்தோம்பல் எல்லாம் பாணாற்றுப் படைகள் தெரிவிக்கும் செய்திகளாகும். பழந்தமிழ்க் கருவூலங்களாக நின்று, அவை பாணர்களின் பெருமையைப் பேசுகிறது.

அத்தகைய பழந்தமிழ் காப்பியக் கீர்த்திகளும், பக்திவழி சீர்த்திகளும் உடைய தொன்மையான மரபு வழி வந்தவன் நேர்த்திமிகு பாணபத்திரன்.

பாடுவதையே பெரும்பணியாகக் கொண்ட அந்த பாணபத்திரன், பரமனடி பணிந்து பாடுகிற பண்பினன்

யாழ்வல்லான் அவன்; யாழ் எடுத்து, பண்கூட்டி, இறைமையும், இசையும் கலந்தொன்றி உறவாடப் பண்ணுகின்ற சிவபக்தன் அவன்.

துஞ்சும் போதும் சுடர்விடு சோதியை நெஞ்சுள் நின்று நினைப்பிக்கும் சிவ பிரானை நினைந்து நினைந்து பாடுகிறவன், பாணபத்திரன்.

மூலமாகிய மூவர்க்கும் மூர்த்தியவன் எம்பிரானை வணங்குபவன், பாணபத்திரன். அடியும் முடியும் அறியும் அயன் அவன் எனப் பணிபவன், பாணபத்திரன்.

நீலகண்டனை, நெற்றியோர் கண்ணனை, நித்தியம் பாடிப் பணிகிறவன் அவன். பால்வெண்ணீற்றுப் பரமனைப் பாடுபவன், பாணபத்திரன்.

அம்பலத்தும் அண்டத்தும் அப்பாலுமாய் நின்றாடுபவனை அடிபோற்றிப் பாடுபவன் பாணபத்திரன்.

சிவபெருமானின் திருவடிகளையே நினைந்து நினைந்து, உருகி உருகி, முக்காலமும் தோத்திரங்கள் பாடி, துதி செய்து, வாழ்கிறவன் பாணன். பல்சடையன் பாதம் பணிகிறவன் பாணன்.

சித்தத்தை, சிவன் பாலே வைத்தவன்; அந்தச் சிவக்கடலில் தன்சித்தத்தை கரைத்துக் கொண்டிருக்கிற சிவனடியான் பாணபத்திரன்; சேமமுற வழிசெய்யும் சிவநெறி பற்றிப் பாடுபவனே பாணபத்திரன்.

திருவெண்ணீற்றுத் திருமேனியன் திருமுன் சென்று, தேன் மழை போல் யாழ்வாசிக்கும் பாணபத்திரனின் இசை, திருவருளால் அரும்பி, அமுத இசையால் இதய கலசங்கள் நிறைந்து, சிவரசம் கமழ்ந்திடச் செய்யும் தன்மையது.

சோமசுந்தரக் கடவுளின் திருக்கோயிலிலே, தினந்தோறும், இறைவன் மீது இசைபாடுவதையே சிந்தையில் கொண்ட பாணபத்திரன், அந்தத் திண்ணையில் வந்து அமர்ந்தான்.

திண்ணையில் அமர்ந்து, திண்டில் சாய்ந்தான். களைப்பாறினான். சாய்ந்தமர்ந்தபடியே, அசதி அகன்றதும், ஏதோ ஒரு யோசனையில் ஆழ்ந்திருந்தான் அவன்.

ஏதோ ஒரு யோசனை. ஆமாம். தீவிரமான யோசனை என்பதை முகத்தில் படிந்திருந்த எண்ணங்களின் அதிர்வுக் கோடுகள் சொல்லாமல் சொல்லிக் கொண்டிருந்தன. பாணபத்திரனின் புருவங்களின் அசைவும், பார்வைகளின் பல்திசை போக்குகளும் அவன் ஆழ்ந்திருக்கும் யோசனையின் முக்கியத்துவத்தை முத்திரையிட்டுக் காட்டிக் கொண்டிருந்தன.

பாணபத்திரன் முகம், கவலை தோய்ந்ததாகக் காணப்படுகிற மறுநொடியே அக்கவலை எங்கோ பறந்து போன மாதிரி முகத்தில் அந்தச் சாயலே சிறிதும் தெரியாவண்ணம் முற்றிலும் வேறுவிதமாக காட்சி தரும்.

களி பேருவகையின் கீற்றுகள் முகத்தில் தவழ்ந்து தவழ்ந்து பாணபத்திரனின் வதனத்தைப் பொலிவாக்கும். வினாடிப் பொழுதில், கவலையின் சாயல் கோடுகள் மெல்லியதாகப் படிந்து, சுந்தரவதனப் பொலிவை மாறுபடுத்திக் காட்டும்.

என்ன இது ஒரு விசித்திரமான கோலத்தின் காட்சியாக இருக்கிறது! மானுடமனம் அலை பாய்கிற தளமாக, பாணனின் முகத் தோற்றம் அமைந்ததோ! என்ன ரசவாதங்கள் இவை!

மகிழ்ச்சியும், நெகிழ்ச்சியும் மாறி மாறி ஆட்சி கொள்ளும் இடமாக பாணபத்திரனின் முகம் காட்சிப்பட்டுக் கொண்டிருந்தது.

திருவஞ்சைக்களம் என்னும் அந்த ஊரின் ஜனங்கள் தத்தம் பணிகளில் கருத்துடன் இருந்து காரியங்கள் ஆற்றுபவர். ஊரின் நிலவரத்திலும் கண்ணாக இருப்பார்கள். அந்த வீதி வழியாக, வருவோர் போவோர் அனைவரும் திண்ணையில் அமர்ந்திருக்கும் பாணபத்திரனை கவனித்தபடியே சென்றார்கள்.

சிலர் திண்ணைப் பக்கமாகத் திரும்பி பார்த்துக் கொண்டே சென்றனர். வேறு சிலரோ, பாணபத்திரனை ஒரு விநாடி தீர்க்கமாகப் பார்த்து விட்டு, சிவனடியார் போலும் என்று தமக்குள்ளே எண்ணிக்கொண்டு தம் வேலையின் முனைப்பில் நடக்கலாயினர். பாணபத்திரனின் தோற்றமும் அவன் இருந்த நிலையும், 'பாணன் ஊருக்குப் புதிது' என்பதைத் தெரிவித்துக் கொண்டிருந்தது.

சிவபெருமான் அமர்ந்து அருள் பாலிக்கிற ஊரில், சிவமயமான பாணபத்திரனின் தோற்றம் ஊர்மக்களை வசீகரித்தது.

பாணபத்திரனுக்கு, ஊர்மக்கள் அந்த வீதி வழியாகப் போவதும் வருவதுமான காட்சி, அவ்வளவாக மனத்தில் படவில்லை. திண்டிலிருந்து நிமிர்ந்தபடி ஆயிரம் யோசனைகள் மண்டிக்கிடக்கிற சிந்தையுடன் தன்னிடம் இருந்த தோல் கொள் கலத்தை (கைப்பையை) சரிபார்த்துக் கொண்டான்.

அந்தத் தோல் கொள் கலத்திற்குள் (பைக்குள்) கையை விட்டுத் துழாவித் துழாவிப் பார்த்துக் கொண்டான்.

அப்படி அந்தத் தோல் கொள்கலத்திற்குள் என்னதான் பொக்கிஷம் இருக்கிறது!

அப்படியே, துழாவியதை வெளியே எடுத்தான். பட்டாடைக்குள் மூன்று நான்கு சுற்றுக்களாகச் சுற்றி வைக்கப்பட்டிருந்தது. பத்திரமாகவே இருந்தது. பாணனின் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. பீறிட்ட பெருமிதம் பொங்கி வழிந்தது.

மீண்டும் ஒரு நினைப்பு, பட்டாடையை விரித்துப் பார்த்து விட எண்ணினான். விரித்தும் பார்த்தான். அப்பப்பா! அவன் ஆறுதல் அடைந்தான். ஆனந்தமடைந்தான்.

கையிலே வைத்துக் கொண்டிருந்த தோல் கொள்கலத்தில் இருந்த பட்டாடைக்குள்ளிருந்த அந்தத் திருமுகப்பாசுரம் பத்திரமாக இருந்தது கண்டு மன அமைதி பெற்றான். கணத்திற்கு கணம் சீட்டுக்கவி தன்னிடம் இருப்பதை நினைந்து, உவகை கொண்டான். நெஞ்சம் மறக்காமல், சீட்டுக்கவியின் நினைப்புடனேயே திண்ணையிலிருந்து, கீழே இறங்கினான்.

திருவஞ்சைக்களத்து வீதியை இருபுறமும் நன்றாக ஏறிட்டுப் பார்த்தான். தனக்கு சிரமபரிகாரத்திற்கு இடம் தந்த திண்ணையைத் திரும்பி பார்த்தபோது, பாணனின் நெஞ்சில் நன்றியுணர்ச்சி கசிந்து கொண்டிருந்தது.

'தெற்றியே நன்றி' என்றான். திண்ணையை தெற்றி என்பார்கள் அல்லவா!

களைப்புத் தீரவும், ஓய்வெடுத்துக் கொண்டு அசதி நீங்கி, புதுத்தெம்பும் வலிவும் பெற இப்படி களைப்பாற, கற்பகச் சோலையாக அமைந்த திண்ணையை அமைத்த

சிலர்களை வியந்து கொண்டே மீண்டும் திண்ணைப் பக்கமாக நடந்தான்.

திருவஞ்சைக் களத்துத் திருவீதித் திண்ணையில் பாணபத்திரன் அமர்ந்து கொண்டான்.

திண்டில் சாய்ந்து கொள்ளாமல் எழுந்து செல்லத் தயாராக இருக்கும் தோரணையில், அந்தத் திண்ணையில் பாணபத்திரன் அமர்ந்திருந்தான்.

4

சீர்மல்கும் திருவஞ்சைக்களம்

திருவஞ்சைக்களம். அலைகடல் சூழ்ந்த மலைநாடு சார்ந்த இடத்தில் உள்ள திருநகரம் அது.

'சேரநாட்டின் திருவளர் திருவஞ்சைக்களம்' என்றே மொழிவார்கள். அறத்தின் வலிவும், திருமகளின் பொலிவும், கலைமகளின் ஒளியும் பொருந்திய திருநகரம், அந்தத் திருவஞ்சைக்களம். சீர்மல்கும் திருவளர் நகரம் அது.

திருவஞ்சைக்களம் என்பதை, திருவஞ்சிக்களம் என்று அதனை சற்றே திரிபுடனும் அழைப்பார்கள்.

தமிழ்நாட்டில் கூட சிதம்பரத்திற்கு அருகாமையில் உள்ள இடம் திருவேட்களம் என்பதாகும். தேவாரப் பாடல் பெற்ற தலம் அது. இறைவனிடம் பாசுபதாஸ்திரம் பெற விரும்பிய அருச்சுனன் நீண்ட காலம் வேள்வி புரிந்த நல்லிடம் அது. நீண்டகாலம் அருச்சுனன் வேட்டகளம் என்பதால், வேட்களம் என்பது திருவேட்களமாயிற்று. (தற்காலம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் அமைந்துள்ள இடமே திருவேட்களம்.)

காலப்போக்கில், திருவேட்களம் சற்று மருவி, இன்று திருவக்குளம் என்றழைக்கப்படுகிறது. திருநாவுக்கரசர் பாடிய தலமான நெடுங்களம் கூட நெடுங்குளம் என

அழைக்கப்படுகிறது. அதேபோன்று, திருவஞ்சைக்களம் திருவஞ்சிக்களம் என்றும் திருவஞ்சிக்குளம் எனவும் அழைக்கப்பட்டு வந்தது. அந்தத் திருவஞ்சைக்களத்திற்குத் தான் பாணபத்திரன் வந்து சேர்ந்தான்.

திருஞ்சைக்களத் திருநகரின் சீர்கொண்ட சேரநாடு கொடுங்கோளிரினத்தவரை அரசர்களாகக் கொண்டு இலங்கிற்று. நாட்டின் தலைநகர் கொடுங்கோளூர் (கொடுங்கள்ளூர் என்பாருமுளர்) என்பது பற்றியே அரசர்களையும் அவ்வாறு அழைத்து வந்தனர்.

சேரமன்னன் செங்கோற் பொறையன் உலக இயல்புகளும், அரசியலும், நித்தியமல்ல என்றுணர்ந்து தாரணியைத் துறந்து, தவம் மேற்கொண்டான். தவம் சார்ந்த வாழ்வும், சிவம்பால் கொண்ட நோன்புமாக இருந்த மன்னன், செங்கோற்பொறையன் ஆட்சி பாரத்தைத் துறந்து விட்டான்.

அரசனின்றி நாடு அமைந்திருத்தல் சாலுமோ!

சிவப்பணியைச் சிறுவயது முதற்கொண்டே தவப்பணியாகக் கொண்டு மெய்ப்பணியாய்ப் புரிந்து வரும் பெருமாக் கோதையாரை அரசுப் பொறுப்பேற்குமாறு, அமைச்சர்கள் வேண்டிப் பணிந்தார்கள். சிவநேசச் செல்வரான பெருமாக் கோதையார், சேரமன்னராக ஆட்சிப் பொறுப்பேற்று அரசரானார்.

கொடுங்கோளூர் தலைநகரம் குதூகலம் கொண்டது. மக்கள் மகிழ்ச்சிப் பெருக்கில் திளைத்தார்கள். ஆனந்த ஆரவாரம் எங்கும் நிலவியது.

மன்னர், சேரமான் பெருமாள் என்று அழைக்கப்பட்டார். சேரநாடு, அந்நாளில் தமிழ்ப்பகுதியே.

செந்தமிழ் தான் சேரத்தின் மொழி என்பர். வஞ்சியும் சேரத்துத் திருநகரம்.

சேரநாட்டின் தலைநகரம் முசிரி. தலைநகரான முசிரி இருபாகங்கள் கொண்டதாக அமைந்திருந்தது. ஊர்ப்பகுதி கொடுங்கோளூர் என்று அழைக்கப்பட்டது. இன்னொரு பகுதி மகோதைப்பட்டினம் என்று அழைக்கப்பட்டது.

"கோவீற்றிருந்து முறை புரியும்
குலக்கோ மூதூர் கொடுங்கோளூர்"

என்பதாக, சேரமான் பெருமாள் நாயனார் புராணத்தில் பேசப்படுகிறது. மேலும்,

"மகோதைப் பட்டினத்தை
ஆர்க்கும் கடலங்கரைமேல் மகோதை"...

என்பதாக, சேரமான் பெருமாள் நாயனாரின் தோழரான சமயக்குரவர் சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரத்தில் பாடியுள்ளார்.

ஆக, கொடுங்கோளூர், மகோதைப்பட்டினம் இரண்டும் ஆதாரப்பூர்வமாக, பாட்டுவரிகளாக நின்று, பண்டையச் சிறப்பைச் செப்புகின்றன.

திருவஞ்சைக் களத்திற்கு தெய்வத் தனித் தன்மைகள் பல உண்டு. சைவமும், வைணவமும் தொடர்ந்த திருத்தலம் இது. இங்குதான் கௌஸ்துப மணி [கவுத்துவம் - விஷ்ணுவின் மார்பு மணி] அம்சமாக, குலசேகர ஆழ்வார் என்று பின்னாளில் புகழ்பெற்றவரான குலசேகரவர்மன் அவதரித்தார். திருவஞ்சைக்களத்துத் தூயதொண்டர் அவர்.

சேரநாட்டில் (கேரளத்தில்) பெருமாள் தலைமுறை என்பதாக வரலாற்று ஆசிரியர்கள் சொல்லும்

ராஜவம்சத்தை மகோதயபுரம் (கொடுங்களூர்) பட்டினத்தில் தோற்றுவித்தவரும் குலசேகரவர்மன் தான் என்பர்.

பட்டத்தில் இருந்து பரிபாலனம் புரிந்தவர் குலசேகரவர்மன். ஸம்ஸ்கிருதமும், செந்தமிழும் தெளிந்தவர். தெய்வீகச் சிந்தையர். அரியணையிலிருந்த காலையிலும், குலசேகரவர்மனின் பக்தியும் பரவசமான பான்மையும் வரலாற்றுச் சீர்மைகளாகும்.

ஒருசமயம், நிகழ்ச்சியொன்றில், பௌராணிகர் இராமபிரான் தனிமையில் நின்று கர தூஷணர்களுடன் யுத்தம் செய்த விதத்தை விவரித்துக் கொண்டிருந்தார். அதைச் செவியுற்ற குலசேகரவர்மன் அச்சம்பவத்தில் இதயத்தைப் பறிகொடுத்தவராக அப்போது தான் அந்த யுத்தம் நிகழ்ந்து கொண்டிருப்பதாக எண்ணி திடீரென்று பக்தி மேலீட்டால், உணர்ச்சிப் பிரவாஹமாகி,

"பிரானுக்குத் துணை புரிவேன்; சேனையுடன் வந்து இராமனுக்குத் துணை நின்று உதவுவேன்."

என மொழிந்தபடியே, தம் சேனையுடன் கிளம்பிவிட்டார். சமயச் சொற்பொழிவு நிகழ்த்தும் பெரியவர் என் செய்வார்! ஒருவாறாக, நிலைமையை மனத்திற்கொண்டு,

"அவர்களைக் கொன்றான்; பிரான் வென்றான்; இராமன் போரில் வென்றனனே."

என்று சமாளித்தபடி கூறியதுமே குலசேகரவர்மன் திரும்பினார் என அவரது வரலாறு கூறும். இராமர் பிறந்த புனர்பூச நக்ஷத்திரத்தில் பிறந்தவர் இவர். தெய்வீகத் திருக்கதைகளை பௌராணிகர்கள் சொல்லும் ரசனையில் தோய்ந்து விடுகிற இயல்பினர்.

பௌராணிகர்களிடம் மிகுந்த அன்பும், மரியாதையும் கொண்டவர். பாகவத உத்தமர்களுக்காகப் பரிந்து பேசும் பாங்கினர் இவர்.

அரியணையைத் துறந்து வைஷ்ணவத் தொண்டராகத் திகழ்ந்தார். தமிழ்மொழியில் இவர் இயற்றிய பெருமாள் திருமொழியும், ஸம்ஸ்கிருதத்தில் இவரது முகுந்த மாலையும் பிரசித்தமானவை. கண்ணனிடம் காதல் கொண்டவர். பத்து திருமொழிகள் தந்தவர்.

திருவேங்கட முடையானிடம் இவர் கொண்டிருந்த பக்திக்கு ஈடு எதுவும் கிடையாது. வேங்கடத்தில் படியாய்க் கிடந்து மகிழ விரும்பிய மகான் இவர். இந்நாளிலும் அங்கு படிகள் 'குலசேகரன் படிகள்' என்பது வழக்கிலுள்ளதைக் காணலாம்.

குலசேகர ஆழ்வார், "செந்தளிர்வாய் மலர்நகைசேர் செழுந்தண் சோலைத் தில்லைநகர்த் திருசித்ரகூடம்" எனப்பாடி உள்ளார்.

தில்லை நடராஜப் பெருமான் திருக்கோயிலில், ஆடவல்லானை திருச்சிற்றம்பலத்தில் நமச்சிவாய என்று சிவனையும், நாராயணா என்று திருமாலின் சயன தரிசனத்தை திருச்சித்திரகூடத்திலும் ஒரே இடத்தில் நின்று தரிசனம் செய்யலாம்.

"உன் சரணல்லால் சரணில்லை" என்று பாசுரம் பாடுகிறார்! கோழியர்கோன் குலசேகரன் சொன்ன" என்பதான முத்திரை பதித்த குலசேகரவர்மனான குலசேகர ஆழ்வார் பிறந்ததால் திருவஞ்சைக்களம், மேலும் தெய்வத்தன்மை பெற்றுத் திகழ்ந்தது.

சேரநாட்டில் தொடர்ந்து பட்டத்தில் அமர்ந்து ஆட்சி புரிந்தவர் சேரமான் பெருமாள் ஆவார். ஸம்ஸ்கிருதத்தில், செந்தமிழ் ஆகியவற்றில் வல்லுநர் இவர்.

சேரமான் பெருமாள் காலத்தில் சீர்பெற்றுத் திகழ்ந்த திருவஞ்சைக்களத்துத் திருக்கோயில், பாடல் பெற்ற தலமாகும். சேரமானின் தோழர் என்று அழைக்கப்படுகிற சமயக் குரவர் சுந்தர மூர்த்தி சுவாமிகள் பாடல்பெற்ற பெருமைக்குரிய சிவபதி இந்த திருவஞ்சைக்களம்.

சுந்தரர் திருவாரூரில் இருந்த காலத்தில் சேரமான் அங்கு அவருடன் வாசம் புரிந்து உள்ளார். சுந்தரருடன் சேரமான் பல இடங்களுக்கும் உடன் சென்று சிவத்தலங்களில் தரிசனம் பெற்றார்.

திருப்பூவணத்திலிருந்து சுந்தரருடன் மதுரைக்கு விஜயம் செய்த காலை, சோமசுந்தரக் கடவுளைத் தொழுது போற்றி உள்ளார். பாண்டிய, சோழ, சேர மன்னர்களின் சங்கமமாய் அமைந்து, அங்கு வரவேற்பு நிகழ்ந்தது.

'சீரின் மிகப் பொலியுந் திருப்பூவணமே' என்று சந்தரர், "பண்ணிசை யார்மொழி யார் பலர் பாடப் புண்ணியனொருமுறை பூவண மீதோ என்றும் பதிகம் பாடிய திருப்பூவணம் செந்தமிழ் வேந்தர்கள் சந்தித்த திருவிடம்.

திருஞான சம்பந்தர்மேலும் ஒருபடி மேலே சென்று, தமிழ் மூவேந்தர்கள் வணங்கும் செம்மை மிகுந்த திருப்பூவணம் என்பதை,

"முறையார் முடிசேர் தென்னரர் சேரர்
சோழர் தாம் வணங்கும்

திறையாரொளிசேர் செம்மை யோங்கும்
தென் திருப்பூவணமே”

எனப் பாடியும்,

“ஆரா அன்பில் தென்னர் சேரர்
சோழர்கள் போற்றிசைப்பத்
தேரார் வீதி மாடநீடுந்
தென்திருப்பூவணமே”

என்றும் பண்ணார் பாடல் பாடி, மூவேந்தர் சங்கமத்தைக் கண்முன்னே காட்டியுள்ளார்.

சுந்தரரை, சேரமான் திருவஞ்சைக்களம் வருமாறும் வேண்டிக்கொண்டதன் பயனாக, அத்தம்பிரான் தோழரான சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருஞ்சைக்களத்திற்கு விஜயம் செய்தார்.

சுந்தரருக்கு அது சமயம் சேரமான் அளித்த வரவேற்பு மகத்தானது. தமது அரசின் பட்டத்து யானையின் மேல் சுந்தரரை அமருமாறு பணித்து, ஊர்வலம் நிகழ்த்தி, நித்திலனின் தோழரொடு மகிழ்வுற்றார்.

சேரமான் சுந்தரரைத் தோழராக மட்டும் நெஞ்சில் கொண்டவரில்லை. சுந்தரரைச் சிவவடிவமாகக் கண்டு, இன்புறுகிறவர். தம்நாடு வந்த சுந்தரரின் பாதங்களை, சீருடைச் சிவபாதங்கள் எனப் போற்ற முற்பட்டு, சுந்தரரின் உள்ள இசைவுடன், சுந்தரர் பாதங்களுக்கு பூஜை புரிந்து, மனநிறைவு எய்தினார்.

சேரமான் - சுந்தரர் நட்பு ஒரு தனிப் பெருங்காவியமாகும். திருவாரூர் சென்றாலும், அந்தத் தியாகேசனின் திருவருளில் இருந்தாலும், சுந்தரருக்கு எப்பொழுதும் சேரமானின் நினைவும் தோழமையும் சிந்தையில் தவழும்.

சேரமான் கொடுங்கோளூரில் சுந்தரருக்கு அளித்த வரவேற்பு வரலாறு கண்டிராத ஒன்றாகும். திருவஞ்சைக்களத்துச் சிவபிரானிடம் சுந்தரர் நேராக நின்று பேசுவதே, பாடலாக அமைந்தது.

"தலைக்குத் தலைமாலை அணிந்த தென்னே
சடைமேல் கங்கை வெள்ளம் தரித்ததென்னே
அலைக்கும் புலித்தோல் கொண்டசைத்த தென்னே
அதன்மேல் கதநாகக்கச்சு ஆர்த்த தென்னே
மலைக்கு நிகர் ஒப்பனவன் திரைகள்
வலித்து எற்றி முழங்கிவலம் புரிகொண்டு
அலைக்கும் கடல் கரை மேல் மகோதை
அணியார் பொழில் அஞ்சைக் களத்து அப்பனே"

இவ்வாறு திருவஞ்சைக்களத்து சிவனுடன் ஒன்றியவர் சுந்தரர்.

அனைவருடைய உள்ளங்களிலும் உறைந்து, பக்தர்களிடமிருந்து உச்சாடனமாக பவனிவரும்

அணியார் பொழில்
அஞ்சைக்களத்து அப்பனே

என்று சுந்தரர் பாடிப் பரவிய பெருமைக்குரிய பத்துப் பாடல்களும் திருவஞ்சைக்களத்திற்கு தனிச்சிறப்புத் தருபவை.

யானைமீதேறி திருக்கயிலை செல்லும் வழியிலும் திருவஞ்சைக்களத்து ஈசனுக்கு அறிவிக்குமாறு கடலரையனுக்குக் கட்டளையிட்டு ஓதிய சுந்தரரின் பொன்நொடித்தான் மலை என்னும் திருக்கயிலாயமலை பதிகத்தில்,

"ஊழிதோ றூழிமுற்றும் உயர் பொன்நொடித்
தான்மலையைச்
சூழிசை யின்கரும்பின் சுவைநாவல வூரன் சொன்ன

ஏழிசை யின்தமிழால் இசைந்தேத்திய பத்தினையும்
ஆழி கடலரையா அஞ்சையப்பர்க் கறிவிப்பதே”

என்னும் பத்தாவது பாட்டு மூலம் ஈடில்லா பெருமை பெற்ற அந்தத் திருவஞ்சைக்களத்து வீதித் திண்ணையில் பாணபத்திரன் அமர்ந்திருந்தான்.

கங்கைபுனை ஈசனாக அங்கு தரிசனம் பெற்றுப் பாடி, சுந்தரர் மகிழ்ந்த, திருவஞ்சைக் களத்துத் திண்ணையில் அமர்ந்தபடியே பாணபத்திரன் சீட்டுக்கவியை உரியவரிடம் சேர்ப்பிக்க வேண்டுமே என்ற கவலையும் கருத்துமாக இருந்தான்.

உரியவரிடம் உடனே சேர்ப்பித்து விட பாணபத்திரன் மனம் பெரிதும் விரும்பியது. அந்த மனவுந்துதலுடன், சீட்டுக் கவி பற்றிய எண்ணத்துடன், திண்ணையில் அமர்ந்தும், அமராத நிலையுடையவனாக இருந்தான்.

பக்தி மிகுந்தவன் ஆதலால் பாணபத்திரன் பதற்றம் கொள்ளவில்லை. ஆனால், அடுத்துச் செய்ய வேண்டிய பணி பற்றிய உணர்வு அவனிடம் குடிகொண்டிருந்தது.

திருமுகப்பாசுரத்தைச் சேர்ப்பிக்க வேண்டுமே என்பதாலும் சேரமான் பெருமாள் என்னும் சேரமன்னனைக் காண வேண்டும் என்பதிலுமான சிந்தனையில் பாணபத்திரன் திண்ணையிலிருந்தபடியே மூழ்கியிருந்தான்.

5
சிவம் பெருக்கும் சேரமான்

சேரமன்னர்களின் சிறப்புக்கள் பலவாறாகப் புகழப்பட்டிருக்கின்றன. மூவேந்தர்களைப் பற்றிக்கூறும் போதும் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் என்று சேர்த்து சேர வேந்தரை முன்னிறுத்தியே மொழிவது வழக்கம்.

சேரநாட்டில், சேரமான் பெருமாள் சிவப்பணியின் செம்மையோடு, செங்கோல் பணியும் சீர்மை பெற்றுத் திகழ்ந்து வந்தது. அவரது ஆட்சியின் மாட்சி அறம் சேர்ந்து அன்பே சிவமாகி ஒளிர்ந்தது. அறம் செழித்தது, சிவம் தழைத்தது.

நாட்டு மாந்தரின் நலமே பெரிதென நாளும் பொழுதும் எண்ணிப் பணி புரிந்தார், சேரமான் பெருமாள். சிவம் பெருக்கும் சீலராக, செங்கோல் செலுத்தி வந்தார்.

மாந்தர் அனைவரையும் மனத்திற் கொண்டு மதித்தார். அனைவரையும் எப்பொழுதும் நினைத்தார். எல்லா உயிர்களிடத்தும் அன்பு சொரிந்தார். பிறர் நலம் பேணியும், பிறர் வளம் விழைந்தும், பிறர் உளப்பாங்கு கண்டறிந்தும் ஆட்சி நலம் செய்தார்.

நலம் எத்துணை புரிய முடியுமோ, அத்துணையும் புரிந்து, அவர் ஆட்சியை ஒரு தவமாக இயற்றினார். மக்களை நன்மக்கள் என்றே நவின்று வந்தார்.

விரிகடலும், மண்ணும், விண்ணும், மிகுதீயும், புனலெறி காற்றாகி எட்டுத் திசையானே என் பிரான் சிவனென்று சாதித்தே சேரமான் எப்போதும் வழிபடுவார்.

சிவனடியையே சந்ததமும் சிந்தித்து, சிவநாமம் செப்பியே எதனையும் தொடங்கி மேற்கொண்டு நிறைவு காண்பார். அதனால், எவ்வுயிருக்கும் பேசுவன புரியும் திறம் பெற்றார். “யாவும் யாரும் கழறினவும் அறிந்திடும்” உணர்வினையும், புரிந்து கொள்ளும் ஆற்றலையும் பெற்றார்.

சேரநாட்டரசர், பெருமாக் கோதையார், சேரமான் பெருமாள் என்றெல்லாம் அழைப்பதுடன் “கழறிற்றறிவார்” எனவும் இவரைச் சிறப்புடன் அழைக்கப் படுகிற தனிப்பெருமை படைத்தவராகவும் திகழ்ந்தார்.

தினந்தோறும், சேரமன்னரான சேரமான் பெருமாள், திருக்கோயிலில் சிவபிரானை தரிசித்து வருவது வழக்கம். ஒருநாள், தாம் வணங்கும் சிவபிரானைத் தொழுதிட திருக்கோயில் சென்று, ராஜபவனியாக அரச கோலத்தில், பரிவாரங்கள், பரிவட்டம் புடைசூழ வருகின்றார், சேரமான்.

அலங்கரிக்கப்பட்ட யானை மீதமர்ந்தவண்ணம், செஞ்சுடர்த்தேவன் போல், சேரமான் பெருமாள் திருவீதியில் வந்து கொண்டிருக்கிறார். திருநீற்று மேனியனின் திருத்தொண்டரான சேரமான் பெருமாள், திடீரென்று யானையினின்று கீழே இறங்குகிறார்.

பட்டத்து யானையைப் பின்தொடர்ந்து, பரிபாலனம் பண்ணுகிற பெருவேந்தனின் அடியொற்றி, நடந்து வந்த அனைவரும் அப்படியே நின்று விடுகிறார்கள். ஒருவருக்கும் ஒன்றும் புரியவில்லை. ஏன் என்றும் தெரியவில்லை.

ஆச்சரியமாக இருந்தது. வியப்பில் ஆழ்ந்த அனைவரும் நவிலவுமில்லை, நகரவுமில்லை. ஒருவர் விழியை மற்றவர் விழி பார்த்து, நின்றபடி, 'என்ன அதிசயம் இங்கு நிகழுமோ' என்றிருந்தனர்.

மன்னர் யானைமீதிருந்து கீழே இறங்கினார். எதிரே ஒருவன் வருவதைக் கண்ணுற்றதுமே, அவன் காட்சியைக் கண்டதுமே, சேரமான் சித்தம் நெகிழ்ந்து யானையின் மீதிருந்து கீழிறங்கி, எதிர்ப்பட்டவரின் பக்கமாக, நோக்கலானார், நடக்கலானார்.

அனைவரும் அதிசயமாய் பார்த்தபடி நின்றனர். ஒரே பரபரப்பு.

மழை நீரால் கரைந்த உவர்மண் உடலில் ஊறியிருந்ததால், வெளுத்த வண்ண வடிவினனான பொதி சுமந்த வண்ணான் தான் எதிரே கண்ணில் பட்டவன்.

"அரன் அடியார் தான் எதிர்பட்ட அவனோ' என ஒரு கணம் நினைத்தார், சேரமான் பெருமாள். திருநீற்று வெண்மை, சேரமானின் சிந்தையை அசைத்து, அவரது கவனத்தையும் கருத்தையும் அவன்பால் ஈர்த்திழுத்து விட்டது.

உள்ளம் உருகிட உடனே களிற்றின் மீதிருந்து கீழிறங்கி விட்டார். சௌலப்ய சித்தப்பாங்கு. எதிரில் வந்த

அவனை நோக்கி நடந்தார். அவனருகிலேயே நெருங்கினார்.

நடந்து, நெருங்கி வரும் போதே சேரமான் தம் இருகரம் கூப்பி அந்த வெண்ணிறம் தோன்ற நின்றானை (வண்ணானை) கைதொழுது நிற்க, வண்ணானோ பதறிப்போயினன். ஆம், பதறிப் போயினன் அந்தப் பாமரன்.

பவனி வந்து கொண்டிருக்கும் மாமன்னர், கைதொழுவது கண்டும், தம்பக்கம் வந்து குவிந்த கரமுடன் காட்சி தருவதைப் பார்த்தும் செய்வதறியாமல் அந்த வண்ணான் திகைத்து நின்றான்.

நின்றானா! இல்லை, இல்லை; மன்னர் முன் நிற்கவும் அஞ்சினான்.

"யாரென என்னை நினைத்து, தேவரீர், நீவிர் இப்படிச் செய்கின்றீர்கள். அடியேன் அடிவண்ணான். அடியேன் அடிவண்ணான்" என்று குரல் எழாமல், குரல் கம்மியவாறு கூறி, யானையையும், மன்னரையும் பார்த்துப் பார்த்து பயந்தபடி நின்றான். பதுங்கி நிற்கிற நிலைக்குத் தன்னை ஆட்படுத்தியபடி, தவிப்பும், தயக்கமும் ஒரு சேரப் பின்னே நகர்ந்து, மெல்ல பின்னே பின்னே, சென்றான்.

"அடிச்சேரன் அடியேன். திருநீற்றின் திருவேடம் நினைப்பித்தீர்; பணிந்திட வந்தேன்" என்று கனிந்த மொழியில் கூறி, "வருந்திடாது ஏகும்; வருந்திடாது ஏகும்" என்றவாறு உள்ளது உள்ளபடி மனம் திறந்து மன்னர் உரைத்தார். மன்னரின் பாங்கு அது.

'வருந்திடாது ஏகும்' என்ற சேரமானின் வார்த்தைகளில் மாந்தரிடம் 'மன்னர்பிரான்' கொண்டிருந்த வாஞ்சை வெளிப்பட்டது.

சைவத்திருமறைகளில் இடம்பெற்றுத் திகழும திருத்தொண்டர் திருவந்தாதி பாடல் வரிகளில், பதினாறு வரிகளில் சேரமானின் பெருமை பேசப்படுகிறது.

மன்னர் பிரான், தன்னர் பிரான், என்னர் பிரான், தென்னர் பிரான் என்று எதுகையில் ஏற்றம் பெற்ற பாட்டு வரி காட்டும் காட்சி இதோ,

"மன்னர் பிரான் எதிர் வண்ணான்
உடல் உவர் ஊறிநீறார்
தன்னர் பிரான் தமர் போல
வருதலுந் தான் வணங்க
என்னர் பிரான்அடி வண்ணான்
எனஅடிச் சேரன் என்னும்
தென்னர் பிரான்கழ றிற்றறி
வானெனுஞ் சேரலனே"

தொடர்ந்து மேலும் எட்டுவரிகளிலும் சேரற்கு, வீரற்கு, சூரற்கு என்றெல்லாம் சிறப்பிக்கப்பட்டுள்ளது.

சிவச் சிந்தனையின் மேலீடு பொங்கிட சேரமான் வருந்திடாது ஏகும் என்று செப்பிய வார்த்தைகள் சிவநாதமாக அங்கிருந்தவர்களின் செவிகளில் இசைத்தது.

"சிவபிரானின் திருநீறு என்றாலே, சேரமான் மேலிருந்து கீழிறங்கி வந்து விடுகிற சிந்தையர் என்று நாம் சொல்லவும் வேண்டுமோ" என மக்கள் அகமகிழ்வுடன் அளவளாவிக் கொண்டனர்.

சேரமான் பெருமாள் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராவர். அதனாலேயே, சேரமான்

பெருமாள் என்ற பெயருடன் 'நாயனார்' என்பதனையும் இணைத்தே அழைக்கப்பட்டு பிரசித்தமாகிப் புகழ்ந்தேற்றப்பட்டார்.

சைவத்திருமுறைகள் பன்னிரண்டில் பதினோறாம் திருமுறைப்பாடல் தொகுதியான பன்னிருவர் பாடியவையே 'பிரபந்தமாலை' என்று வழங்கப்பெறும்.

பதினோராம் திருமுறை பிரபந்தமாலையில் சேரமான் பெருமாள் நாயனார் பாடியருளிய பொன்வண்ணத் தந்தாதி அற்புதமானது. திருவாரூர் மும்மணிக்கோவை என்பது அகவல், வெண்பா, கட்டளைக் கலித்துறை ஆகிய மூன்று பாவினங்களால் ஆகிய படைப்பு. திருக்கயிலாய ஞான உலா தமிழின் முதலாவது உலா ஆகும். அதனால் அதனை ஆதிஉலா எனவும் கூறுவார்கள்.

திருக்கயிலாய ஞான உலா, பொற்கயிலை தன்னில் மின்னும் பரமனை பக்தர்கள் நெஞ்சங்களில் கொலுவேற்றும் பான்மையது. அந்தமிலா நாயகனுக்கு செந்தமிழ் வார்த்தைகள் சுந்தரத் தோரணமாய் அமைந்த சந்தமிகு கவிதை உலா அது.

“திருமாலும் நான்முகனும் தேர்ந்து உணராது அன்றங்கருமால் உற அழலாய் நின்ற பெருமான்” என்று தொடங்கி, 'ஊரேறு போந்தது உலா' என்று நிறைவு பெறுகிறது.

'பிறவாதே தோன்றினான், காணாதே காண்பான்' என்பார் சேரமான். 'ஆழாதே ஆழ்ந்தான், அகலாது அகலியான், ஓதாது உணர்ந்தான், நுணுகாது நுண்ணியான், யாதும் அணுகாது அணுகியான்', என்றெல்லாம் சிவபிரானை தரிசனம் காட்டுகிற சேரமானின் சிவபக்திக்கு ஈடு கிடையாது.

"அரியாகிக் காப்பான் அயனாய்ப் படைப்பான்
அரசனாய் அழிப்பவனும் தானே பரனாய
தேவர் அறியாத தோற்றத்தான் தேவரைத்தான்
மேவியவாறே விதித்தமைத்தான்—ஓவாதே
எவ்வுருவில் யாரொருவர் உள்குவார் உள்ளத்துள்
அவ்வுருவாய்த் தோன்றி அருள் கொடுப்பான்—எவ்வுருவும்
தானேயாய் நின்றளிப்பான் தன்னிற் பிறிதுருவம்
ஏனோர்க்குங் காண்பரிய எம்பெருமான்"

திருக்கோயில் உள்ளிருப்பர் என்று திருக்கயிலாய ஞான உலாவில் சேரமானின் சிவபக்தியும் செந்தமிழும் ஒன்றையொன்று முந்திக்கொண்டு முன் வந்து நிற்கும்.

"நந்தாவன மலரும் மந்தாகினித் தடம் சேர்
செந்தா மரைமலர் நூற்றாயிரத்தால்....!"

என்று படிக்கும் பொழுது பரவசம் ஏற்படாமல் இருக்குமோ.

"கற்பகம் ஈன்ற கமழ் பட்டினை உடுத்துப்
பொற்கழல்கள் கால்மேற் பொலிவித்து—விற்பகரும்
சூளாமணி சேர் முடிகவித்துச் சுட்டிசேர்
வாளார் நுதற்பட்டம் மன்னுவித்துத்—தோளா
மணி மகர குண்டலங்கள் காதுக் கணிதாங்கு
அணிவயிரக் கண்டிகை பொன்னாண்—பணிபெரிய
ஆரம் அவை பூண்டு அணிதிகழுஞ்சன்ன
வீரந் திருமார்பில் வில்லிலக..."

என்று அலங்கார அணி அழகின் திவ்யக் காட்சிகளும்,

"இமையோர் பெருமானே போற்றி எழில் சேர்
உமையாள் மணவாளா போற்றி—எமை ஆளும்
தீயாடி போற்றி சிவனே அடிபோற்றி
ஈசனே எந்தாய் இறைபோற்றி—தூயசீர்ச்
சங்கரனே போற்றி சடாமகுடத்தாய் போற்றி
பொங்கரவா பொன்னங்கழல் போற்றி..."

என்று அந்த வித்தகச் செஞ்சடை வெண்மதி சேர் மெய்ச்சடையன் அடிகளைப் போற்றிப் பணிகிற பாங்குகளும்,

"போற்றி எணப் பூமாரி பெய்து புலன் கலங்க
நாற்றிசையும் எங்கும் நலம் பெறுக—ஏற்றுக்
கொடியும் பதாகையும் கொற்றக் குடையும்
வடிவுடைய தொங்கலும் சூழ்க்—கடிகமழும்
பூமாண் கருங்குழலார் உள்ளம் புதிதுண்பான்
வாமான ஈசன் வரும் போழ்திற் சேமேலே"

என்று ரிஷபத்தின் மீது (சேமேலே) வருகிற சிவபெருமானை, சிந்தை மகிழத்தரிசனம் காட்டுகிற சேரமானின் சிவபக்தி, சமுத்திரத்தினிலும் மிகப் பரந்து விரிந்தது என்பார்கள்.

நாள் தோறும் சிவபூஜை செய்கிறவர் சேரமான் பெருமாள்.

ஒருநாள், பூஜை நிறைவுறும் சமயத்தில், வழக்கமாக எழும் சிலம்பொலியைக் கேட்காததால், சேரமான் பெருமாள் நாயனார் சித்தம் கலங்கினார்.

பொய்யேதுமில்லாத மெய்யன்தன்னை, புண்ணியனை, பல்லுயிர்க்குத் துணையானை, ஆதிமூர்த்தியை, அமரர் தலைவன், அந்த அம்பலத்தானின் பொன்னடிகளிலேயே ஒன்றியவராய்,

"அடியேன், என்னோ பிழைத்தது" என்றறைந்து, தம் உடைவாள் உருவி, மார்புதனில் குத்திக் கொள்ள முயன்றபோது சிலம்பொலியைக் காதாரக் கேட்டுச் சிலிர்த்தவர், சேரமான்.

"அன்பன் சுந்தரன் பதிகம் பாடுதலால் நின்று கேட்டுவரத் தாழ்ந்தோம்" என்று ஓர் அசரீர்ச்

சொற்களைக் கேட்டதும் தாமதியாமல் சிதம்பரத்திற்குச் சென்றார். அங்கே தான், பொன் வண்ணத் தந்தாதி பாடினார், சேரமான் பெருமாள் நாயனார்.

சுந்தரர் திருவாரூர் சென்றிருந்ததால், சேரமான் திருவாரூர் சென்று சுந்தரரை தரிசித்தார். மனம் களித்து, திருவாரூர் மும்மணிக்கோவை பாடினார். சுந்தரருடன் தோழமை கொண்டார். ஆரூரர் தம் அன்பினில் திளைத்தார். சுந்தரரும் திருவஞ்சைக்களம் விஜயம் செய்து சேரமானுடன் நட்பு பாராட்டி பலவாறு அளவளாவித் திரும்பினார்.

சமயக்குரவர்களான நால்வரின் தொண்டும் பக்தியும் என்றும் மாறாமல் நிலைத்திருப்பவை.

சமயக்குரவர்கள் என்கிற போது சிவபக்தர்களுக்கு சந்தானக்குரவர்களின் நினைவு வராமல் போகாது. திருநந்தி தேவர், சனற்குமாரர், முதலாவது மெய் கண்டார், பரஞ்சோதி முனிவர் ஆகியோர் சந்தானக் குரவர்கள். இவர்களை அகச் சந்தானக் குரவர்கள் என்பார்கள்.

அகச் சந்தானக் குரவர்கள் என்றதும் புறச் சந்தானக் குரவர்களான மெய்க்கண்டார் (2), அருணந்திசிவம், மறைஞானசம்பந்தர், உமாபதிசிவம் ஆகியோர் நினைவும் நெஞ்சில் எழும்.

இறைவனிடம் ஞானசம்பந்தர் பிள்ளை நிலையிலும், மாணிக்க வாசகர் மாணவர் நிலையிலும், திருநாவுக்கரசர் தொண்டர் நிலையிலும், தொடர்பு கொண்டு பக்தி பூண்ட பாங்கினோடு சுந்தரர் இறைவனிடம் தோழர் நிலையில் தொடர்பு கொண்டு பக்திபூண்ட பான்மையை எண்ணும் போது, சுந்தரர் சேரமானிடமும் தோழமை

கொண்டவர் என்னும் பாங்கினால், சேரமான் பெருமாள் நாயனாரின் சிறப்பு, தனிச்சிறப்புப் பெற்று மிளிர்கிறது.

சிவனருளால் பெற்ற திருமுகப்பாசுரத்தை இத்தகைய சேரமான் பெருமாள் நாயனாரிடம் சென்று சேர்ப்பிக்க வேண்டுமே என்ற தளராத நம்பிக்கையும் அயராத ஆர்வமும் கொண்டவனாக பாணபத்திரன், திருவஞ்சைக்களத்துத் திண்ணையில் அமர்ந்திருந்தான்.

6
பாணனின் சித்தமெல்லாம் சிவமயம்

சிவநெறிச் சீர்மையிலும், சிவபாத சேவையிலுமே தம்மை அர்ப்பணித்துக் கொண்டு செங்கோலோச்சும் சேரமான் பெருமாள் நாயனார் என்னும் மன்னனைக் காண்பதற்காகவே கையிலே திருமுகப்பாசுரத்துடன் பாணபத்திரன் திருவஞ்சைக்களத்திற்கு வந்தான்.

திருவாலவாய்த் திருநகரை விட்டு திருவஞ்சைக்களம் வந்த அவன் களைப்புத் தீர திண்ணையில் அமர்ந்தான்.

அரண்மனை சென்று அரசனை பார்க்க வேண்டும். சிவபிரான் கருணை கொண்டு அருள்பாலித்து அளித்துள்ள திருமுகப் பாசுரம் என்கிற சீர்படைத்த சீட்டுக்கவியை சேரமன்னரிடம் அளிக்க வேண்டும். அதன் பொருட்டே, பாணபத்திரன் பாண்டிய நாட்டு மதுரையம்பதியை விட்டுக் கிளம்பி இங்கே வந்துள்ளான்.

அந்தத் திருவாலவாயுடையார் அருளிய திருமுகப்பாசுரம் தன்னிடமுள்ள தோல்கொள்கலத்தில் (பையில்) பத்திரமாக இருக்கிறதா என்று ஒருமுறைக்கு இருமுறையாகப் பார்த்துக் கொண்டான்.

திருவஞ்சைக்களத்து திண்ணையைக் கண்டான்; அமர்ந்தான்; சாய்ந்து களைப்பாற்றிக் கொண்டு எழுந்தான்.

திண்டில் சாய்ந்த சுகமும், திண்ணையில் அமர்ந்தபோது கிட்டிய சௌக்கியமும், அவன் நெஞ்சில் நிற்கவில்லை.

திண்ணையை விட்டுக் கீழே இறங்கியவன், சுற்றும்முற்றும் பார்த்தவனாக, அருகாமையிலேயே, அங்குமிங்குமாக நடந்த வண்ணமாக இருந்தான்.

சிந்தனையைச் சுமந்தவனாக, ஆனால் பாரம் எதுவும் இல்லாதவன் போல் காணப்பட்டான் பாணபத்திரன்.

எங்கும் எல்லாமாக விளங்குகிற சிவசக்தியைக் கண்டின்புற்றவன் போல் 'கண்டேன் அவன் திருப்பதம்' என்று மனத்திற்குள் ஒரு வாசகத்தை வருவித்துக் கொண்டான்.

அந்த வாசகத்தின் ஓசையில் ஈசன் உறைந்திருப்பதாக உணர்ந்து உணர்ந்து களி கொண்டான். சங்கரனாம், செந்தாமரை வண்ணன் தீர்த்தச்சடையான் சரணார விந்தங்களை அங்கரம் கூப்பித் தொழுதான்.

மெய்யிலே மீண்டும் பளிச்சென்று திருநீறு தரித்துக் கொண்டான்.

தேவாதி தேவன், அந்தச் சிவன் தன் சிந்தையில் சேர்ந்ததாகக் கருதினான்.

மதுரைத் திருநகரத்து திருவாலவாயுடையார், செந்நிற வாய் கொண்ட உமையவளைத் தம்மொடு இடந்தனில் உடையவருக்கு உரித்தான திருநீறு அது. வானவர்கள் பூசிக்கொள்கிறதும் மந்திரமகிமை பெற்றதும், துதித்தும் போற்றி அழகுடையதென தரித்துக் கொள்வதும் திருநீறுதான். சைவநெறி காட்டும் சிவக்கோலச் சின்னமே திருநீறு.

பாணபத்திரன் தான் தரித்துக் கொண்ட திருநீறு தன் உடலில் சரியாகப் பதிந்து காட்சி தருகிறதா என்று மேலும் கீழுமாகப் தன்னையே பார்த்துக் கொண்டான்.

அந்தப் பார்வையில்,

"மந்திரம் ஆவது நீறு வானவர் மேலது நீறு,
சுந்தரம் ஆவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரம் ஆவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாய் உமைபங்கன் திருவாலவாயான் திருநீறே"

என்ற திருவாலவாய் திருநீற்றுப் பதிக வரிகள் எதிரொலித்தன. முக்தி தருவதும், முனிவர்கள் அணிவதும் அந்தத் திருநீறு. அதுவே சத்யமானது; சிவச்சீராளர்கள் போற்றுவது. எண்வகை சித்தி தரும் அது. ஆலவாய் அப்பனின் மேனி திகழ் வெண்ணீறு அது என்பன போன்ற எண்ண அலைகளை பவனிவரச் செய்கிற மாதிரி காற்றலைகள் பாணன் முன்பு வீசின.

திருநீறு தரித்துக் கொண்ட போது, பாணனின் உதடுகள் சிவநாம உச்சாடனத்தில் அசைந்த நளினம், பொற்புடன் நடம் செய்தருளும் பூங்கழலனின் அசைவுகள் போலிருந்தது.

பிறர் செவிகளுக்குக் கேட்காத வண்ணம் தவம்போல், சிவநாம உச்சாடனம்; ஆனால், பாணபத்திரனின் பக்தி மிகுந்த இதய புண்டரீகத்திலிருந்து எழுந்து வந்து சிவநாம உச்சாடன சப்த ஒலி காற்றலை வீச்சுடன் இழைந்தே மதுரமாகக் கேட்டது.

அந்த மகேசனின் திருநாமத்தின் ஒலி, சங்கீதம் போல, மெல்லிய, இனிய குரலில் காற்றோடு காற்றாக ரீங்காரம் செய்தது.

அந்தக் காற்றின் ரீங்காரத்தில் சப்தங்கள் எழுந்தன. இசையுடன் ஒன்றிய கீதம் மிதந்து வந்தது. அந்தக் கீதத்தின் வார்த்தைகள் நாதமாக,

"வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது
நாதன் நாமம் நமச்சிவாயவே"

என்று நமச்சிவாயத் திருப்பதிகத்தை திருஞான சம்பந்தரே, திருவாய் மலர்ந்தருளியதாக இருந்தது.

சிவபெருமான் எழுந்தருளியுள்ள கோயில்களை ஈச்சுரம் என்று அழைப்பது வழக்கம். ஈசன் எனப் போற்றப்படுகிறவன் உறையும் இடம் ஈச்சுரம். இந்த மண்ணில் ஈச்சுரங்கள் பல உண்டு.

"நாடகமாடிடம் நந்திகேச்சுரம் மாகாளேச்சுரம்
நாகேச்சுரம், நாகளேச்சுரம், நன்காண
கோடீச்சுரம், கொண்டீச்சுரம், திண்டீச்சுரம்
குக்குடேச்சுரம் அக்கீச்சுரம்"

என்று திருப்பாசுரமாக திருநாவுக்கரசர் தரிசனம் காட்டும் ஈச்சுரங்களுடன்,

"ஆடகேச்சுரம் அகத்தீச்சுரம், அயனீச்சுரம்
அத்தீச்சுரம் சித்தீச்சுரம், அந்தணகானல்
ஈடுதிரை இராமேச்சுரம் என்றென்றேத்தி"

என்று பாடிய அதே நாவுக்கரசர் இன்னும் இதுபோல் ஈசனின் கோயில்கள் பல உள்ளன என்பதை,

"இறைவன் உறை சுரம் பலவும் இயம்புவோமே"

என்று ஒவ்வொன்றாகக் காட்டுகிறார்.

"பக்திமை பாடல் அறாத ஆவூர்ப்
பசுபதி ஈச்சுரம் பாடு நாவே"

என்று திருஞானசம்பந்தர் அருளியுள்ளார். பசு, பதி, பாசம் என்கிற சைவ சித்தாந்தம் தெளிவானது.

பசுக்களாகிய உயிர்களுக்கு பதியாகிய ஈசன் உறையுமிடம் பசுபதீச்சுரம் தானே!

பெண்ணையாற்றங்கரையில் ஒரு சிவாலயம் அமைந்திருக்கிறது. அங்குள்ள ஈசனை சிவலோகன் என்றே நாவுக்கரசர் பணிந்தேத்துகிறார்.

"திரிந்துலவு திருமுண்டீச் சுரத்து மேய
சிவலோகன் காண் அவன் என் சிந்தையானே"

செந்தமிழ்நாட்டு மூவேந்தர்களும் சிவநெறிச் செல்வர்கள் என்பதனை,

"சீரினால் அங்கொளிர் தென்னவன்
செம்பியன் வல்லவன்
சேரும் முக்கீச்சுரத் தடிகள்
செய்கின்றதோர் செம்மையே"

ஞானசம்பந்தப் பெருமான் பாடிக்களித்து, தென்னவனான பாண்டியன், செம்பியனான சோழன், வில்லவனான சேரன் என மூவேந்தர் சேர்ந்து வழிபட்ட முக்கீச்சுரத்தை கண்முன்னே நிறுத்துகிறார்.

திருபாண்டீச்சுரம் என்று ஒருசிவத்தலம் இருக்கிறது. மதுரைக்கருகில் சிவாலயம் உள்ள இடம் பஞ்சவனீச்சுரம் என்று அழைக்கப்படுகிறது.

"வெள்ளியம் பலம் நள்ளாறிந்திரை
பஞ்சவனீச்சுரம் அஞ்செழுத்தாலமைந்த
சென்னிமாபுரம் சேரன் திருத்தளி"

என்று கல்லாடத்தில் காணலாம்.

மூவேந்தர்கள் எழுப்பிய ஈச்சுரங்கள் பாணனின் நெஞ்சில் தரிசனமாகத் தெரிந்தன.

பல்லவ மன்னர்களின் காலத்திலும் ஈச்சுரங்கள் திகழ்ந்தொளிர்ந்தன. பல்லவ மன்னர், காவிரிப்

பூம்பட்டினத்தில் எழுப்பிய சிவாலயம் உள்ள இடமே பல்லவனீச்சுரம் என்பதாகப் பாடப் பெற்றிருக்கிறது.

குணதரன் என்கிற மகேந்திரவர்ம பல்லவன் காலத்தில் சமணம் சிறந்திருந்தது. நாவுக்கரசரால் சிவநெறிப்பட்ட பல்லவ மன்னன், பாடலிபுரத்தில் இருந்த பாழிகள், பள்ளிகளை பெயர்த்து திருவதிகைத் திருநகரில் சிவபெருமானுக்கு எடுப்பித்ததே குணதரஈச்சுரம் ஆகும்.

காஞ்சியில் சிற்ப எழிலுடன் விளங்கும் கயிலாசநாதர் கோவிலை எடுப்பித்த மன்னன் இராச சிம்ம பல்லவன். க்ஷத்திரிய சிகாமணி என்று விருது பெற்ற மன்னன் அவன். அக்கோயிலே இராஜசிம்மேச்சுரம். "காடவர் கோன் கச்சிக் கற்றளி எடுத்து முற்ற மாடமெல்லாம் சிவனுக்காகப் பெருஞ் செல்வம் வகுத்தல் செய்வான்" எனப் பாட்டு வரிகள் சான்று பகரும். மாமல்லபுரத்தில் உள்ள சிவாலயங்கள் ராஜசிம்ம பல்லவேச்சுரம் எனவும் க்ஷத்திரிய சிம்ம பல்லவேச்சுரம் எனவும் விளங்குகின்றன.

சிவபெருமானாம் ஈசன் உறையும் ஈச்சுரங்கள் யாவும் பாணனின் சிந்தையில் உலா வருவது போன்று இருந்தது.

சிந்தித்து என்றும் நினைந்திடுவார்க்கு சிந்தையிலே திகழும் சிவபெருமானே என்பது போல் ஈச்சுரங்கள் ஒவ்வொன்றாக வருவதாகத் தோன்றியது.

சீலத்தால் சிறந்த செம்பியன் மாதேவியின் சிவப்பணிகள் பலவாகும். சிவஞான கண்டராதித்தர் என்றே சாசனச் சிறப்புப் பெற்ற செம்பியன் மாதேவியின் கணவரை, "காரார் சோலைக் கோழிவேந்தன்

தஞ்சையின் கோன் கலந்த ஆராஇன்சொல் கண்டராதித்தன்" என்பார்கள்.

திருவிசைப்பா பாடி, திருமுறை ஆசிரியர்களில் ஒருவராகத் திகழும் கண்டராதித்தரின் மனைவி செம்பியன் மாதேவி, திருநல்லச் சடையாருக்கு எடுப்பித்த சிவாலயத் தலத்தை ஆதித்தேச்சுரம் என்றும், அழைப்பார்கள். மேலும்,

கற்றார்கள் ஏத்தும் கபாலீச்சுரம் என்றும், கண்ணார் மயிலை கபாலீச்சுரம் என்றும் ஈச்சுரங்கள் எத்தனை எத்தனையோ, அத்தனையும் பாணபத்திரனின் முன்னாலே தரிசனமாக வந்து நிற்பன போன்று இருந்தன. அப்படி ஒரு பிரமிப்பு.

பாணபத்திரன் ஈசன் உறையும் ஈச்சுரங்களை மனத்திற்குள்ளேயே தரிசனம் செய்து பக்திப் பரவசத்தில் ஆழ்ந்தான். அவனிடம் உள்ள அந்த சீட்டுக்கவியே சிவசொரூபம் உள்ளதாக பாணனுக்குத் தோன்றியதால், அச்சீட்டுக்கவியுள்ள இடமாகிய தோல்கொள்கலமும் ஒரு ஈச்சுரம் தானோ!

பாணபத்திரன் அவ்வாறெல்லாம் எண்ணினானோ, எண்ணவில்லையோ. ஆனால் பாணபத்திரனின் மனநிலை மிகுதியும் பக்திப் பரவசத்தில் இருந்தது. சிவப்பொக்கிஷமாகக் கருதி, தன்னிடம் வைத்துக் கொண்டிருக்கும் சீட்டுக் கவியை, சிவப்பிரஸாதம், சிவசொரூபம் போன்று கண்களில் ஒற்றிக்கொண்டான்.

'சிவப்பிரஸாதம் போன்று' கண்களில் ஒற்றிக் கொண்டானா?

இல்லை, இல்லை அப்படி அவன் நினைத்துக் கண்களில் ஒற்றிக்கொள்ளவில்லை. அந்தச் சீட்டுக்கவியே

பாணபத்திரனுக்கு சிவப்பிரஸாதம் தானே. பின், அவன் ஏன் சிவப்பிரஸாதம் போன்று ஒற்றிக் கொள்ள வேண்டும்.

சீட்டுக்கவியை சிவப்பிரஸாதமாகவே தன்னிரு நயனங்களிலும், பதிய வைத்தபடி ஒற்றிக்கொண்டான்.

சிவபெருமானின் திருவடியையே காண்கிறவன் பாணன். வேறு ஒன்றும் அவன் கண்களுக்குக் காட்சியாகப்படுவது கிடையாது. 'கழல் அடியே கை தொழுவான்' அந்த பாணபத்திரன். அந்தக் கழல் அடி சிவனின் கழலடிகளே.

நின்றாலும், நடந்தாலும், அந்த நீள்சடை நிமலனின் நினைவுகளும் அவன் அருளிய சீட்டுக்கவியுமே சிந்தையில் மாறி மாறி வலம் வந்து கொண்டிருந்தன.

சேரமன்னரிடம் சீட்டுக்கவியை வழங்கப் போகிறோம் என்ற பெருமித உணர்வில் பாணபத்திரன் திளைத்திருந்தான். அவன் நெஞ்சக்கடலில், ஆனந்தத் தோணி பக்தி அலைகளுக்கிடையே எந்தவித சரிவுகளும் இல்லாமல் தவழ்ந்து தவழ்ந்து மேலே மேலே சென்று கொண்டிருந்தது.

அங்குமிங்குமாக அவன் நடமாடும் போது, திண்ணையைப் பார்த்தும் அந்தத் தண்ணீர்ப் பந்தலை நோக்கியும், அவற்றுடன் கொஞ்ச நேரமே, தான் உறவு கொண்ட பரிச்சயத்தையும் நினைத்துக் கொண்டான்.

பாணபத்திரன், நெஞ்சில் நிலவிய எண்ண அலைகள் அவற்றோடு பகிர்ந்து கொள்கிற மாதிரி மனத்திற்குள்ளேயே ஏதேதோ பேசிக் கொண்டான். உள்ளத்துள்ளேயே உரத்த சிந்தனை!

அந்தத் திண்ணையும் திண்டும் அங்கே, அந்த வீட்டு வாசலில் அமைத்திருப்பவர்கள் சிவபக்தி உடையவர்களாகத் தான் இருந்திருப்பார்கள் என்று எண்ணிக் கொண்டான்.

அன்பே சிவம் தானே! அகிலமே சிவம் தானே!

அனேகமாக, எல்லா வீடுகளிலும் முன்புறம் திண்ணை இருக்கிறதே!

அப்படியானால் எல்லோருமே சிவபக்தர்களாகத்தான் இருக்க வேண்டும். அப்படியொரு நினைப்பு பாணபத்திரனுக்கு.

இந்த நினைவும் அதே நினைவின் சுழற்சியும் அவனை சுற்றி வட்டமிட்டன. திண்ணையும் திண்டும் கூட உயிர் பெற்று எழுந்து வந்து, தன்னுள் நெருங்கி உரையாடுவது போன்று அவனுக்கு ஒரு பிரமை!

சிவப் பித்து பாணபத்திரனை அவ்வாறெல்லாம் எண்ணும்படி செய்தது. தம் கைவசம் உள்ள சீட்டுக்கவி பட்டுக்குள் சுற்றி வைக்கப்பட்டிருப்பது அப்படியே இருக்கிறதா என்று பார்க்க விழைந்தான். ஒரு முறைக்கு இருமுறையாக முன்பே பார்த்துக் கொண்டு விட்டது ஞாபகத்திற்கு வந்தது. இருந்தாலும் மீண்டும் ஒருமுறை பார்த்துக் கொண்டான். அவன் உள்ளம் அந்த சீட்டுக்கவியுடன் உறைந்து விட்டது!

சீட்டுக்கவி பாணபத்திரனிடம் பத்திரமாக இருக்கிறது. விரைவிலேயே, அது சேரமன்னர் கரங்களைச் சென்று அடைந்துவிடும் என்கிற சிலிர்ப்பும், சிந்தனையும் பாணபத்திரனிடம் இனம் புரியாத ஓர் ஆனந்த நிலையை உருவாக்கிற்று. அது, அவனுக்கு ஒரு மோன

மஹானந்தமாகப் பட்டது. அதுவே பரமோன மஹானந்தமாகியது.

அந்தபரமோன மஹானந்த ஆனந்தக் களிப்பு, அன்று மதுரையம்பதியில் பாண்டியன் அரசவை மண்டபத்தில் தான் நின்று கொண்டிருந்ததை நினைவு அலைகளால் உந்தப்பட்டு, பாணபத்திரன் சிந்தனையைப் பின்நோக்கி நடை போட வைத்தது. சிந்தனையில் எழுந்த எண்ணம் காந்தம் போல் முந்தைய நிகழ்வுகளை ஆகர்ஷித்துக் கொண்டு வந்து அவன் கண் முன் நிறுத்தியது.

பாண்டிய மன்னன் அரசவையில் இசைப் போட்டி ஒன்று நிகழ இருக்கிறது. அப்போட்டியில் பாண்டிய நாட்டு இசைவாணனாகக் கலந்து கொள்ளுமாறு பாணபத்திரனுக்கு கட்டளையிட்டு வரகுணபாண்டிய மன்னன் விடுத்த அழைப்பின் பேரில் பாணபத்திரன் அச்சபையில் வந்து நிற்கிறான்.

திருவெண்ணீற்றுத் திருமேனியனாம் சோமசுந்தரக் கடவுளையே முக்காலமும், பாடிப் பணியும் பாணபத்திரன் திண்ணையில் அமர்ந்திருக்க அவன் மனக்கண் முன் அரசவைச் சிம்மாசனத்தில் மன்னன் வரகுண பாண்டியன் கொலுவீற்றிருக்கும் காட்சி.

7
மதுரையை உருவாக்கிய மாமன்னன்

வரகுணபாண்டிய மன்னன் அரசர்களுக்கு அரசனாவான்.

“மற்போரில் வல்ல பெருந்தோளன்” என்று சிவபெருமானால் திருவாய் மலர்ந்தருளப்பட்ட திருவருட் செல்வன். அவன் மனம், மொழி, மெய் சேர்ந்திட முக்கரணங்களாலும் சோமசுந்தரக் கடவுளை வழிபட்டு வருகிறவன்.

கதிரவனின் ஒளியெனக் காட்சி தருபவன். கலைகளை நேசித்து ஓம்பிடும் கலாபிமானி. கலை வளர்க்கும் வள்ளல் அவன்.

சித்தமெல்லாம் சிவமயமாகியதால், அக அழகுப் பூரணத்தில் பொலிந்து பிரகாசிப்பான். மன்மதனை விட பேரழகு படைத்த மன்னன் வரகுணபாண்டியன்.

வேள்விகள் நூறு புரிந்து, வேத நூல் ஓம்பி, அன்பு தழுவி, அறம் வழுவாது ஆட்சி புரிந்து மாட்சியுடன் விளங்கியவன்.

பாணபத்திரனை இசைப்போட்டிக்காக அரசவைக்கு வருமாறு கட்டளை பிறப்பித்து, அழைப்பு விடுத்துள்ள வரகுணபாண்டியன் யார் தெரியுமா?

அம்மாமன்னன் யார்தெரியுமா?

நூறு ஆயிரம் ஆண்டுகள் தொடங்கியே செந்தமிழின் பெருமையும் இலக்கிய வளமும் உண்டென்பர் ஆய்வாளர்கள். கலியுகத்திற்கு முன்பே இந்த காலகட்டத்தில் ஊழிப் பெருவெள்ளம் போன்ற பெருமாற்றங்கள்- கடல்கோள்கள் நான்கைந்து முறை நிகழ்ந்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

குமரிக்கோடு பஃறுளியாறு குமரிக்கண்டம் இருந்ததும் லெமூரியாக் கண்டத்து மக்கள் லிங்க வடிவில் சிவனை வழிபட்டதும் சிவ வழிபாடு தொன்மையானதென்பதும் வரலாற்று உண்மைகள். தமிழ்ச் சங்கங்கள் பல இருந்தன எனவும் சான்றுகள் பகர்கின்றன. எல்லாம் கடல்கோள்களால் கடல் கொண்டவைகளாகியதை வரலாறு கூறுகிறது. கபாடபுரத்தை தலைநகராகக் கொண்டவர்கள் பாண்டிய மன்னர்கள். பண்டையச் சிறப்புடையவர்கள் பாண்டியர்கள். பண்டையர்களே பாண்டியர்களாவர்.

"வாழ்க எம்கோ; மன்னவர் பெருந்தகை; ஊழி தொறு ஊழிதொறு உலகங்காக்க" என்னும் சிலப்பதிகார வரிகளைத் தொடர்ந்து,

"வடிவேல் எறிந்த வான்பகை பொறாது
பஃறுளியாற்றுடன் பன்மலையடுக்கத்து
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு
தென்திசை ஆண்ட தென்னவன் வாழி"

என்று கூறும், 'தென்னவன்' பாண்டிய மன்னனே!

தன் வலிமையை வேற்றரசர்க்கு உணர்த்திய பெருமையுடையவன் வடிம்பலம்ப நின்ற மன்னன்

தான் அந்தத் தென்னவன். நெடியோன் நிலம் தரு திருவீரபாண்டியன் என்றும் அழைப்பார்கள்.

அத்தகைய பாண்டிய மன்னர்களின் பழமைக்கும் பழமையான மரபில் வந்தவன் தான்- வழிவழியாக எண்ணற்ற பாண்டியர்களைத் தொடர்ந்து ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்பு வந்தவன் தான் வரகுண பாண்டியன்.

சிவபக்தி தோய, சிவநேச செல்வர்களாக, சிவனருள் பொலியப்பொலிய வழிவழியாய் செந்தமிழ் நாட்டை நற்பாலனம் செய்து, அரசோச்சிய பாண்டிய மன்னர்களின் மரபில் வந்தவன் வரகுண பாண்டியன்.

''ஈண்டு நலந்தருதல் வேண்டி பாண்டியன் பாடுதமிழ் வளர்த்த கூடல்'' என்ற புறத்திரட்டு புகழ் மாலைக் கிணங்க கூடல் மாநகராம் மதுரையை ஆண்ட மன்னர் மரபில் வந்தவன்.

அந்தப் பாண்டிய மன்னர்களின் நெடிய மரபு என்றுமே அழியாத நான்மாடக் கூடலாம் மதுரையம்பதியுடன் பிணைந்தொன்றியதாகும்.

கடம்பவனக் காடாக இருந்த இடத்தை மதுரைத் திருநகரமாக நிர்மாணித்த பாண்டிய குல விளக்கு குலசேகர மன்னன். கடம்ப வனத்தின் கிழக்குத் திசையிலமைந்திருந்த மணவூரிலிருந்து மாட்சியுடன் ஆட்சிபுரிந்த மன்னன் அவன்.

கடம்பவனக் காட்டில், நள்ளிரவுப் பொழுதில், தேவர்களுக்கு தரிசனம் தந்திட சோமவாரத்தில் எழுந்தருளிய சோமசுந்தரக் கடவுள் அங்கேயே இருந்து விட்டார். சிவனடியான் தனஞ்செயன் மூலம்

செய்தியறிந்த குலசேகர பாண்டியன் மகிழ்ந்தான்; நெகிழ்ந்தான்; மெய்ச் சிலிர்த்தான்.

தேவர்கள் தரிசனம் பெற்றுத் திரும்பிவிட்டார்கள். தனஞ்செயன் மாத்திரம் சிவதரிசனத்திலேயே லயித்து அதிலேயே தோய்ந்திருந்தான். தொழுதபடியே, இருந்த அவனுக்கு, பொழுது புலர்ந்தது கூடத் தெரியவில்லை. பொற்காலை புலர்ந்து பொற்கோழி கூவி, பொன்னிறக் கதிரவனின் செந்நிறக் கதிர்கள் கீழ்வானில் எழுந்தது கூட அவனுக்குத் தெரியவில்லை.

பிறகு தான் அவனுக்குத் தெரிந்தது. தேவர்கள் அவ்விடம் விட்டு ஏகிவிட்டதைக் கண்டான். ஆனாலும், அவன் கண்ட காட்சி அவனை அதிசயத்தில் ஆழ்த்திற்று.

ஆம், கொம்புகள் நான்குடன் கூடிய எட்டு யானைகள் தாங்கிய விமானத்தில் பேரொளிப் பிரகசாமாய் சொக்கலிங்க மூர்த்தி எழுந்தருளி, தரிசனம் தந்து கொண்டிருந்த திருக்காட்சி தனஞ்செயனை, பக்திப் பரவசத்தில் நிலைக்கச் செய்து விட்டது.

பாண்டிய மன்னனுக்கு, அன்றிரவு சித்தர் ஒலியாக, “பாண்டிய மன்னா, இறைவன் உறைந்து விட்ட இந்தக் கடம்பவனக் காட்டினை, கவின் பெறும் நகரமாக நிர்மாணிப்பாயாக” என்ற கட்டளை மன்னனின் செவிகளில் பாய்ந்தது.

பாண்டிய மன்னனும் சற்றும் தாமதம் செய்யாமல் அமைச்சர் பெருமக்களுடன் கூடி, கடம்பவனம் சென்று, அங்கே அந்த தெய்வக் காட்சியைக் கண்களால் கண்டு, அகமகிழ்ந்து, உளம் பூரித்தான். திவ்யமான ஆனந்தப் பெருவெள்ளத்தில் நீந்தினான்.

பாண்டிய மன்னனுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லாமல் இருந்தது. பரமனிடம் பாண்டியர்கள் கொண்டிருந்த பக்தியின் பான்மை சொல்லும் தரமன்று. பரவசத்தில் திளைத்த மன்னன், சொக்கலிங்க மூர்த்தியின் சுடர்மிகுந்த திருவடிகளில் பணிந்தான். பணிந்து பணிந்து, வணங்கினான். மண்ணில் மெய்ப்பட வீழ்ந்து வணங்கிய மன்னனுக்கு மீண்டும் ஒரு முறை வணங்கிட வேண்டும் போல் உள்மனம் அறிவுறுத்தியது. கணப்பொழுதில், பலமுறை பணிந்தான் பாண்டியன்.

கடம்பவனத்தைத் திருத்தியமைக்க, கட்டளை பிறப்பித்தான். அரண்யமான அந்த நிலம் அழகொளிரும் அரண்மனைக்களமாக அற்புதமாக மாறியது. தொழிலாளர்கள் நகர் நிர்மாணப் பணிகளில் முனைந்து ஈடுபட்டார்கள்.

கொல்லர்கள் தம் பணியை சீக்கிரமே முடிக்கத் துணிந்தார்கள். தச்சர்கள் தங்கள் வேலையை துரிதமாக நிறைவேற்றிடத் துடித்தார்கள். கொத்து வேலையாட்களும், சிற்றேவல் பணியாளர்களும் நகர நிர்மாணப் பணியிலேயே நாளும் பொழுதும் கவனமாக இருந்தார்கள். எல்லோரும் அவரவர்களின் சொந்த வேலை போன்று சுறுசுறுப்புடனும் கருத்தூன்றிய வண்ணமும் செயல்பட்டதெல்லாம் பாண்டியனுக்கு இருந்த பக்தியை மேலும் பன்மடங்காக ஆக்கியது.

கங்குல் மறைந்து கிழக்கு வெளுத்தது. மங்களமான மஞ்சள் வண்ணமும், வேள்வி ஜ்வாலையின் செவ்வண்ணத்தில் கலந்தொன்றிய கலவையின் புதுவண்ணமாக கீழ்த்திசை காட்சி தந்தது.

அடிவானம் அருணோதயத்தின் அருள் வீச்சில் அதிகாலையைத் தந்து கொண்டிருந்தது. அந்தச் செங்கதிரின் சௌந்தர்யம் சீர் மிகுந்து சுடரொளி பரப்பிக் கொண்டிருந்தது.

விடியல் செவ்வதனம் போல் தெரிந்தது. விரிகதிரின் இளமஞ்சள் அங்கிருந்து பொன் வண்ணத்தைப் பரப்பிக் கொண்டிருந்தது. உதயராகமாக, தெய்வகீதம் காற்றலைகளாக உலா வரத் தொடங்கியது.

காலைக் கதிரழகு எங்கும் வியாபித்தது. கடம்பவனக் காடு கதிரொளி வீசும், கலை எழில் மாடங்களாக கூடங்களாக மாறிக் காட்சியளித்தன.

ஆலயங்கள் எடுப்பித்தான் அரசன். மண்டபங்கள் சமைத்தான் மாமன்னன். திருவீதிகள் பெரியனவாகவும், சிறியனவாகவும் உருவாக்கினான், தென்னவன். நீண்ட வீதிகளின் இருபுறமும் ஒன்றுடன் ஒன்று ஒட்டினாற் போல் வீடுகள் உருவாகின.

திக்குகள் தோறும் காவல் தெய்வங்கள், மடங்கள், மாடங்கள், கட்டிடங்கள், பீடங்கள், மேடைகள், பெரும்சாலைகள், கல்விச் சாலைகள், மருத்துவ சாலைகள் என எழும்பின. அறம்பரப்பும் அறச்சாலைகள் அமைந்தன. கிணறு, குளம், ஏரிகள் தோன்றின. எழிற்சோலைகளும், நந்தவனங்களும், புதிய பொழில்களுமாக, இடைஇடையே ஓடைகளும், சிற்றருவிகளும் ஏற்பட்டன.

திருமதில்களும், சுற்றுமதில்களும், அகழிகளும், கோட்டை கொத்தளம் என மாநகர்க்குரிய எல்லாமே அமைத்து மதுரைத் திருநகரை நிர்மாணித்தான், பாண்டிய மன்னன் குலசேகரன்.

திருவைந்தெழுத்து ஓதும் சீராளன் குலசேகர மன்னன், நகரம் சாந்தி பெற்றிட விழைந்தான். சிவன்பதம் நினைந்தொழுகும் குலசேகரன், அகநெஞ்சில் அவாவியதை திருச்சடைவள்ளல் தம் சந்திரகலையினின்று அமுதமென அருளினான். நிமிடப்போதில் முழுநகரமும் சுத்தீகரணம் செய்யப்பட்ட தூய்மையாகிய தெய்வக்கலை துலங்கிற்று.

கங்கைபுனை ஈசன் அருளிய திருவமுதம் மதுரமானது.

"அது மதுர நன்மயமான தன்மை உடையதால் மதுராநகர் என உரைத்தனர் நாமம்"

மூர்த்தியின் வலது பக்கம் அம்மை மீனாக்ஷிக்கு அற்புதக் கோயில் எழுப்பினான். ஆதிசைவர்களுடன் காசிப் புலவர்களையும் வரவழைத்து, மதுரை நகரில் நிரந்தரமாகக் குடியிருக்கச் செய்தான்.

மாந்தர் நலம் பேணிக் காத்து, மதுரை மாநகருக்குப் பல சிறப்புகள் சேர்த்து, குலசேகர பாண்டிய மன்னன் கோலோச்சி வந்தான்.

8
தடாதகைப் பிராட்டியின் திருமணம்

குலசேகர பாண்டிய மன்னனை அடுத்து அவன் மகன் மலயத்துவச பாண்டியன் அரியணை ஏறினான்.

மனுதர்ம சாத்திர நெறி அறிந்து, தேர்ந்து தெளிந்து அரசாண்டவன் மலயத்துவச மாமன்னன். செந்தமி ழிலும், ஸம்ஸ்கிருதத்திலும் பெரும் புலமை பெற்று விளங்கினான்.

'சிவனை ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை' என்ற சித்தாந்தமுடையவன்.

'அவனொடு ஒப்பர் இங்கு யாருமில்லை' என்று முக்காலும் மொழிபவன்.

'புவனம் கடந்தன்று பொன்னொளி மின்னும் தவனச் சடைமுடித் தாமரையானே' என்று சிவன் பதம் பணிகிற சிந்தையன், மலயத்துவச பாண்டியன்.

மலயத்துவச மன்னனின் மனைவி, சோழமன்னர் சூரசேனனின் செல்வி காஞ்சனமாலை என்பவள். அவர்களுக்கு அரசாளப் பிள்ளைப் பேறு இல்லாதது பெரும் குறையாக இருந்தது.

பட்டமேற்று, பாண்டிய அரசினை, பாலனம் புரிந்திட பிள்ளைப் பேற்றிற்காக, யாகம் புரிந்தான் மன்னன்.

மலயத்துவச மன்னன் தொண்ணூற்று ஒன்பது முறை அஸ்வமேத யாகம் செய்திருந்த நிலையில், மேலும் ஒன்று செய்து, நூறு யாகம் நிறைவாகிவிட்டால், மலயத்வசனுக்கு 'இந்திர பதவி' கிட்டிவிடும் என்பதால், இந்திரன் அதை நிறுத்திவிட எண்ணினான். விண்ணிலிருந்து மண்ணுக்கு வந்து, மலயத்துவசன் நடத்தும் நூறாவது அஸ்வமேத யாகத்தை நிறுத்தினான்.

"பிள்ளை பெறுவதற்கு புத்திரகாமேஷ்டியாகம் புரிந்திடு" என்று இந்திரன் தந்திரமாக மொழிந்தான்.

அதன்படி அரசன் நியமங்களுடன் நெறிமுறைகள் தவறாமல், அரசியுடன் அமர்ந்து யாகம் புரிந்தான். ஆம். புத்திர காமேஷ்டி யாகம் புரிந்தான்.

உமாதேவியாரே மழலையாகி காஞ்சன மாலையின் மடிதனில் வந்தமர்ந்ததும் மலயத்வசன் மகிழ்வு கொண்டான். என்றாலும், மகனாக இல்லாமல் மகளாக வந்ததை எண்ணி, சற்றே மனம் வருந்தினான்.

சிவனையே தொழுதிடும் திண்ணிய நெஞ்சமுடைய மலயத்வசனின் மனக்கவலையைக் கண்டு கொண்ட ஈசன், அருள் சுரந்தான்.

மழலைச் செல்வி வளர்ந்தாள். ஆகாசத்தினின்று இசைத்த திருவாக்கிற்கிணங்க, 'தடாதகை' எனத் திருநாமம் சூட்டினார்கள். பாண்டிய நாட்டில் பெண்ணரசியாகத் திகழ்ந்து செங்கோல் செலுத்தி வந்தாள். எந்த உவமையும் கூறவொண்ணாவகையில் மற்றவர்க்கெல்லாம் வழிகாட்டுகிற விதமான பெருநாடு பாண்டித்திருநாடு என்று புகழ்க்கொடி பறந்திட, தடாதகைப் பிராட்டியார் ஆட்சி செலுத்தி வந்தார்.

காலச்சக்கரம் சுழன்று கொண்டேயிருந்தது பொழுதுகளும், பருவங்களும் மாறின. ஆண்டுகள் உருண்டோடின.

மகளுக்குத் திருமணம் நடக்கவில்லையே என்ற குறை காஞ்சனமாலைக்கு உள்ளத்தை வருத்தியது.

தடாதகைப் பிராட்டியோ, தாயின் மனக்குறையை அறிந்தவளாய் "குறை தீரும்" என்றனள். புவனமெல்லாம் சென்று, பெரும்பவனி வந்து அவனியை வெற்றி கொள்வேன்" எனப் பகர்ந்து, தாயின் மனத்திற்குப் பெருமிதம் உண்டாகுமாறு நல்வார்த்தைகள் நவின்றாள்.

வடபுலத்து அரசர்களை எதிர்த்துப் போரிட்டாள். அவர்களோ, எதிர்த்து நிற்க வலுவில்லாமல் அடிபணிந்தனர். மண்ணகம் மட்டுமின்றி, விண்ணகமும் சென்று, அந்தவானத்துச் சந்திரன் போல் ரதத்தின் மீது பவனி வந்தாள்.

தடாதகைப் பிராட்டியின் வீரபவனியால் மீனக் கொடியும், புலிக் கொடியும் விற்கொடியும் வீறுடன் அசைந்தாடின. வடதேசத்துக் கொடிகள் பிராட்டியின் வீரதீரப் பராக்கிரமத்திற்கு வணக்கம் செலுத்துவது போல், தாழ்ந்து பணிந்து, அசைந்தாடின— எங்கும் வெற்றி!

எங்கும் வெற்றி! எதனிலும் வெற்றி! திக்கெல்லாம் ஜெயித்தார், தடாதகைப் பிராட்டியார்.

வெற்றிகளைக் குவித்த வண்ணம், இந்திரலோகம் தாண்டியும் தடாதகைப் பிராட்டி சென்றார். வெள்ளையானை, வெள்ளைக்குதிரை, கற்பகம், காமதேனு, சிந்தாமணி என யாவற்றையும் தமதாக்கி தடாதகைப் பிராட்டி முன்னேறினார்.

எங்கு நோக்கினும் வெற்றி! வாய் மொழிக்கு எங்கணும் வெற்றி! எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி! பிராட்டி வருகையே வெற்றி! வெற்றி மற்றாங்கே எதனிலும் வெற்றி!

"சடசட சட்டென்று உடைபடு தாளங்கொட்டி, அங்கே எத்திக்கினிலும் விழியனல் போய் எட்டித்தானே எரியும் கோலம் கண்டே" தடாதகைப் பிராட்டிக்கு எங்கணும் வெற்றி! எதனிலும் வெற்றி! செருக்களம் கண்ட திசைகள் தோறும் தடாதகைப் பிராட்டி ஜெயமே கொண்டார்.

கயிலை வந்து சேர்ந்தார். நான்கு வகைச் சேனைகளுடன், தடாதகைப் பிராட்டி வெள்ளியம்பலத்தை நெருங்கினார். அலகில் சோதியான், அந்த அம்பலத்தானோ அகிலத்து நாயகி தம்மிடத்து வந்து விட்டதை வரவேற்கும் பாணியில் சிறுநகை புரிந்து, இன்முகம் காட்டினார்.

"முன்னையொப்பாயுள்ள மூவர்க்கும் மூத்தவன்" அந்த ஈசன் 'தாயினும் நல்லன், சேயினும் நல்லன்' 'அல்லும், பகலும் அருள்கின்ற வல்லவன் அவன்,' 'கடந்து நின்றான், எங்கும் கண்டுநின்றான்' அந்த இறைவன்—

"ஆதியுமாய், அரனாய் உடலுள் நின்ற
வேதியுமாய் விரிந்தார்ந்திருந் தான் அருட்
சோதியுமாய்ச் சுருங்காததோர் தன்மையுள்
நீதியுமாய் நித்தமாகி நின்றானே"

என்ற பாட்டு வரிகளின்படி பிரபஞ்சங்களிடத்து நிறைந்திருக்கிற நித்தமாகி, நின்றவன் அவன்.

ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்
நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந்தான் ஐந்து
வென்றானை ஆறு விரிந்தனன் ஏழும்பர்ச்
சென்றனன் தானுணர்ந்த தெட்டே"

என்று எண்ணலங்காரமாகி நிற்கும், பரமசிவன் ஒன்றாயும், ஒன்றுக்கு மேலாயும், எண் குணங்களை உணர்ந்திருந்தான் என்பதாகப் புலவோர் சாற்றியுள்ள பெற்றியான், அந்த வெள்ளியம்பலத்து ஈசன்.

பிராட்டியைப் பிரான் பார்த்தார்.

“வானார் கயிலை மலையான் மகள் தன்னை நீத்துப் போனாள் வந்தாள்” என்கிற பாட்டுவரிகள், பர்வதராஜன் திருமகள் கயிலைக்கு வந்ததை கவினுறக் காட்சிப் படுத்துகிறது.

திருக்கயிலாயம் முழுவதும் போர் ஒலி பேரொலிக்க எழுந்து, சங்கொலியும் பேரிகை நாதமும் போர் முழக்கம் நாற்றிசையும் பரவிப் படர்ந்தது.

சிவபெருமான் கட்டளைக் கூற்றின்படி, நந்தி தேவர் பூதகணங்களை ஏவிவிட, போர் தீவிரப்பட்டது. சிவகணங்கள் போரிட்டன. வெற்றியைக் காண முடியாமல் தவித்தன. தடாதகைப் பிராட்டியாரின் படைமுன்பு ஒன்றும் செய்ய இயலவில்லை.

சிவபிரானே செருக்களம் புகுந்தார். “யாமே வருவோம்” என்றிசைத்த வண்ணம், சமர்புரிந்திட, திருவெண்ணீறு தரித்த திருமார்புடைய மகேசனே எதிரில் வந்து நின்றார்.

மாதேவி தடாகைப் பிராட்டி முன்னே, மாதேவன் அந்த செஞ்சடைத் தேவனான ஈசனே வந்து நின்றான்.

போர் எனில் இது போர்! புண்ணியத் திருப்போர்!

“எப்போர்க்கும் சளைத்துவிடமாட்டேன்” என்ற சபதக்குரல் சக்தி பொங்கி எழுவது போன்று லோகமாதாவாம் பிராட்டியாரின் திருவதனம்

செவ்வதனச் சிந்தூரப் பொலிவுடன், பிரகாசமுடன் திவ்யமாக மின்னியது.

பிரான், பிராட்டியின் அருகே நெருங்கி வந்தார்; மிக அருகிலேயே வந்து நின்றார்.

சிவபிரான் தடாதகைப் பிராட்டியைப் பார்த்தார். பிராட்டியும் பிரானைப் பார்த்தார். கண்களின் பார்வை கண்களின் மீதே கவனமாயிருந்தன. பூர்வ பந்தப் பிணைப்பு! பார்வைகள் ஒன்றிக் கலந்தன.

கணநேரத்தில் நிகழ்ந்த அவை மின்னலின் வேக ஒளிக் கீற்றினும் துரித வேகத்தில் பிரகாசத்துடன் ஒன்றிய உணர்வுளை மெய்மறக்கச் செய்தது. சக்தியும் சிவமும்-

அமைச்சர் பழைய நினைவுகளை மனத்தில் பதிய வைத்தார்.

“ஆதிப் பரம்பொருளான இந்த அகிலாண்ட ஈசுவரனே தங்கள் மணவாளன்”

பிராட்டியின் கருணை இதயம் இளகியது; நெஞ்சம் நெகிழ்ந்தது; மனம் கசிந்தது.

கருணை வெள்ளம் பிரவாஹித்தது. தடாதகைப் பிராட்டியார், நெகிழ்ச்சியில் ஆழ்ந்து விட்டார்.

பரவசப்பட்டு இருந்த பிராட்டியாரிடம் பரமன் பகர்ந்தான்.

“திக்விஜயம் தொடங்கிய அக்கணம் முதற்கொண்டே நாமும் மதுரையம்பதியிலிருந்து நின்னைத் தொடர்ந்த படியே வருகின்றோம்.”

“மறைகள் கூறிடும் வகையில் வருகின்ற சோமவாரம் நல்முகூர்த்தம்; அன்றே யாம் உம்மைத் திருமணம் செய்து கொள்வோம்.”

“மதுரைக்கு நீ, செல்வாயாக இனி”

இறைவன் அருளிய வார்த்தைகள் அவை. ஈடேறும் வல்லமை மிக்க வரம் நிகர்த்த வார்த்தைகளல்லவோ அவை!

அரண்மனைக்கு எழுந்தருளிய சிவபெருமானை காஞ்சனமாலை வேண்டிக் கொண்டாள்.

“தடாதகைப் பிராட்டியாரைத் திருமணம் செய்து கொண்டு, பாண்டியத் திருநாட்டை சிவபெருமான் செங்கோல் புரிந்தருள வேண்டும்.”

தடாதகைப் பிராட்டியார் பொன்னணி பூண்டு, புன்னகை தவழ மணப் பெண்ணாகக் காட்சி தந்தார். வேத ஒலிகள் எழுந்திட, சிவபிரான் திருமண மண்டபம் வந்துற்று, ஆசனத்தில் அமர்ந்து மணநாயகனாகப் பொலிவுடன் காட்சி தந்தார்.

ஒளிவீசும், செவ்வண்ணம் கூடிய பொன்மணி முத்துக்களால் ஆகிய தவிசு அதனில் பிரானுடன் பிராட்டியும் அமர்ந்து திருமணக் கோலத்தில் காட்சி தந்தனர்.

மணக்கோல மகத்துவத்தை எவ்வாறு வர்ணிப்பது—

எவ்வண்ணமான வர்ணனைகளுக்கும் அப்பாற்பட்ட சுந்தரமான திவ்யத் திருக்கோல தெய்வீக அருட்கோலமது. அருளும், அழகும் ஒன்றிய சீலமது. சர்வலோகமும் அங்கே சங்கமமாகியிருந்தது.

சிவனாரின் செம்மை சார்ந்த திருக்கரங்களில் திருமால் புனிதமிகு நீர் வார்த்தார்; கரம் இரண்டினையும் கனத்த வேதகோஷ மெழுப்பி, ஒன்று சேர்த்தார்.

பொன்வானப் பூமழையும், விண்ணின் திருப்பேரொலியும் நிகழ்ந்தது. மண்ணின் பாவாணர் பாட்டு மழையும் சேர்ந்தது.

படைப்பிற்கு இறையவன், பண்ணவர் நாயகன், அந்த நான்முகப் பிரம்மன் முன்னின்று திருமணச் சடங்குகளை நிறைவேற்றினார்.

சிவாகமப்படி திருமணம் செம்மையாக நடந்தேறியது. திருமாங்கல்ய நாணைப்பூட்டி, தடாதகைப் பிராட்டியின் திருக்கரம் பற்றினார், சீர்மல்கிடும் சிவபிரான்.

"அம்மையும், அப்பனும் அருள்வினையால் ஒருங்கு கூடினர்."

மதுரை நகர் எங்கும் மகிழ்ச்சி வெள்ளம் தான். தடாதகைப் பிராட்டி சிவபிரான் திருமணத்தில் மாந்தர் களித்தனர். பாணர்கள் பாடிப் பரவசமூட்டினர். மணப்பரிசுகள் மலையெனக் குவிந்தன.

அந்தணர்களும், அடியார்களும் உரியன புரிந்து உற்சாகம் கொண்டனர். எங்கும் களி, யாவரும் உவகையால் ஆடிப் பாடினர்; பாடி மகிழ்ந்தனர்.

திருமணத்திற்கு வருகை புரிந்த அனைவரும் அமுதுண்டு வயிறார மனம் நிறைந்தார்கள். வந்தவர்கள் எல்லோரும் வயிறார உணவு உட்கொண்ட பிறகும் உணவு அங்கே அதிகமாக எஞ்சி இருந்த நிலையை மடப்பணியாளர்கள் பிராட்டியாரிடம் தெரிவித்தனர்.

பிராட்டியார் பிரானிடம் கூறிட, சிவனார் திருவிளையாடல் புரியலானார்.

குண்டோதரனை வரவழைத்து உண்ணச் செய்தார். பூதகணமான குண்டோதரன் உண்டு உண்டு வயிறு

நிறைந்த பின் தாகத்திற்காக நீர் தேடினான். நீர் வழங்கினார்கள். போதவில்லை.

தாகம் தணியவில்லை அவனுக்கு.

கிணறு, குளம், ஏரி என நீர் நிலைகளில் எல்லாம் நிறைந்திருந்த நீரைக் குடித்த பிறகும் குண்டோதரனின் தாகம் தணிந்த பாடில்லை.

தாகம் தணிந்திட என் செய்ய!

கங்கையைத் தம் சடையில் தாங்கி உள்ள சிவபெருமான்,

"கங்கையே, நல் நங்கையே வந்திடுக; நீர்த்தாகம் தணித்திட, மதுரை நகர் வழியே மாநதியாகப் பாய்ந்து வந்திடுக" என்று கங்கையினை ஈசன் ஆணையிட்டு அருள் சுரந்தார்.

பகீரதன் நிமித்தமாக, அந்நாளில் காசி மாநகரில் கங்கையாகப் பாயச் செய்த பரமேஸ்வரரான கயிலை நாதன் இந்நாளில் மதுரைநகரில் கங்கையைப் பாய்ந்தோடப் பணித்தார்.

விண்ணகம் விட்டு மண்ணகம் வந்த அந்த கங்கைக்குரிய புண்ணிய மகிமைகளுடன் மதுரையிலும் அதற்கு நிகராக்கிட வேண்டினாள், கங்கை.

கணநேரத்தில், ஆகாசத்தினின்று கங்காதேவி நதி உருவாகி, விரைவாகப் பாய்ந்து வந்தாள். வைகையென மதுரையில் பாய்ந்து நடந்தாள்.

குண்டோதரன் வைகை நீரைப் பருகி, தாகம் தீர்த்துக் கொண்டான்.

வைகை நதியை,

"புனல்யாறு அன்று; இது பூம்புனல்யாறு" என்பர். "தவத்தை நீராடுதல் நீயுரைத்தி வையை நதி" எனவும் போற்றுவர்.

வைகை நதியை, மதுரையும், தமிழும், பாண்டியரும் சங்கமித்துக் கொள்கிற செந்தமிழ்த் திரிவேணி சங்கமம் என்று கூறலாம். கூடவே, சோமசுந்தரரின் திருவருளால் கூடிய தெய்வத் திரிவேணி சங்கமம் என்றும் சிறப்பித்துச் சொல்லலாம்.

"புலவர் நாவிற் பொருந்திய பூங்கொடி
வையை நதி என்ற பொய்யாக் குலக்கொடி"

என்று புலவர்களின் பூங்கொடியாகவும், பொய்க்காத சத்தியமான குலக்கொடியாகவும் வையை நதி கொண்டாடப்படுகிற புனித நதி ஆகும்.

திருமணக் கோலத்தின்படி சிவபெருமான் சிங்காதனம் வந்தமர்ந்தார். கண்ணிமை கொட்டாமல், அனைவரும் கண்டு களித்தனர்.

செங்கோல் தாங்கி, தடாதகைப் பிராட்டி உடன் சேர, அரசாட்சி புரிந்து சிவநெறியே சத்திய நெறி எனக் காட்டி அருளினார்.

எல்லாம் வல்ல பரம்பொருள் நாயகன் பாண்டிய நாட்டின் மன்னராக பட்டத்தை ஏற்று பரிபாலனம் செய்து வந்தார்.

மாமதுரைத் திருநகரில், சோமசுந்தரக் கடவுள், சுந்தரபாண்டிய மன்னராக செங்கோல் நடத்திப் பல காலம் ஆண்டுவந்தார்.

சுந்தரபாண்டியன் மெய்யருள் பாலித்து, மாந்தர் நலம் கருதி, ஆட்சி புரிந்து, சந்திரக்குலத்துப் பாண்டியர் குடி தழைத்தோங்கச் செய்தார்.

9
ஆனந்த நடமிடும் அம்பலவாணன்

கயிலை நாதனான அம்பலத்தாடும் அரசு, இறைவடிவான சுந்தரபாண்டியன் ஆட்சிபுரிந்து வந்தார்.

திருக்கயிலையில் ஈசன் ஆடிய தாண்டவத்தை வியாக்கிரபாத முனிவரும், பதஞ்சலி முனிவரும் காணும் பொருட்டு தில்லைச் சிதம்பரம் வந்தார்கள். தில்லைக் கூத்தனின் தரிசனம் பெற்றதைப் போன்றே அடியார்களுக்கு நிருத்த கோலங்களில் தரிசனம் தந்தார் சிவபெருமான்.

சிவபெருமானின் திருக்கூத்து நூற்று எட்டு என மொழிவர்.

"நூற்றெட்டாம் நுதல் வழியோர்க்கே" என்றும் சிவபிரானியற்றிய கூத்தே கூத்திற் சிறந்தது என்றும் கூத்த நூல் கூறும்.

"கூத்திற் சிறந்தது கூத்தின் கூத்து" என்பார்கள்.

"மால்பாடும் பாட்டினையும் வார்சடையோன் கூத்தினையும்" என்பதும் வழக்கு.

சிவபிரான் ஆடிய நடனம் தாண்டவம் எனப்படும். உமாதேவியாரின் நடனத்தை 'லாஸ்யம்' என்பார்கள்.

(லலிதா ஸஹஸ்ரநாம தோத்திரத்தில் அம்பாளை லாஸ்யப்பிரியா என்ற வார்த்தையால் அர்ச்சிப்பார்கள்)

சிருங்கார ரஸம் லாஸ்யம் பற்றியதாகும். பாடலில் லாஸ்யம் சேர்ந்தால் கேயபதம் என்றும், நாட்டியத்தில் லாஸ்யம் சேர்ந்தால் அபிநயபதம் என்றும் இயம்புவார்கள்.

பிரானின் தாண்டவமும், பிராட்டியின் லாஸ்யமும் இரண்டிரண்டு வகைப்படும். இவை ஒவ்வொன்றும் மார்க்கம், தேசி என்று வகைப்படும்.

லாஸ்யம் என்பது லலிதம் எனவும் அழைக்கப்படும். மென்மையாக ஆடும் கூத்துகள் இவை. லாஸ்ய தாண்டவத்தை வழங்கி அருளியவர் பரதேவதையாகிய பார்வதி தேவி. இந்த லாஸ்யத்திலும், சுத்த லாஸ்யம், தேசி லாஸ்யம், பிரேரணா லாஸ்யம், பிரேங்கணா லாஸ்யம், குண்டலி லாஸ்யம், தண்டிகா லாஸ்யம், கலச லாஸ்யம் என ஏழு வகை உண்டு.

ஏழு உலகங்களும் ஐம்பத்தாறு தேசங்களும் ஆடுகின்ற இவற்றின் மாயா தத்துவங்களும் ஆடுகின்றன என்பார்கள். எல்லாம் ஆட, அவன் ஆடுகிறான், அவன் ஆடவல்லான், அம்பலவாணன் அல்லவா!

திருநாவுக்கரசராம் அப்பர் சுவாமிகளின் தேவாரத்தில் “கழலோடு திருவிரலால் கரணம் செய்து” என்ற வரிகள் சிவபிரானின் கரணங்களை நினைவுபடுத்தும்.

பிரானும், பிராட்டியும் மேற்கொண்ட புனிதக் கலை இது. முனிவர்கள் இதனை வேள்வியாக மதித்துள்ளார்கள்.

இவ்வாறான சிவதாண்டவங்களில் சிதம்பரம், திருச்சிற்றம்பலத்தில் பொன்னம்பலத்தில் (கனக சபை) ஆனந்த தாண்டவம்.

திருவாலங்காட்டில் மணியம்பலத்தில் (ரத்தின சபை) சம்ஹார தாண்டவம்.

திருக்குற்றாலத்தில் சித்திர சபையில் திரிபுர தாண்டவம்.

திருநெல்வேலி தாமிர சபையில் முனிதாண்டவம்.

மதுரையம்பதியில் வெள்ளியம்பலத்தில் (ரஜதசபை) சந்த்யா தாண்டவம்.

திருப்பத்தூரில் கௌரி தாண்டவமும், பேரூரில் ஊர்த்தவ தாண்டவும், என ஐந்துடன் சேர்த்து ஆகமப்படி ஏழுதாண்டவம் என்றும் கூறுவதுண்டு.

அம்பலத் தாடுவான் என்றும் அம்பலவாணன் என்றும் சிவபிரானைத் தோத்தரித்துப் பணிவார்கள்.

தில்லைச் சிற்றம்பலம் என்றதுமே ஆனந்த தாண்டவும், கூத்தனின் முகத்தொளிரும் குமிழ் சிரிப்பும் கண்கொள்ளாக் காட்சியாக எதிரில் தெரியும்.

"சிரித்த முகங் கண்ட கண்கொண்டு
மாற்றினிக் காண்பதென்னே"

என்று அப்பர் சுவாமிகள் அருளியது அக்காட்சிக்கு உரைகல்லாக அமைந்திருக்கிற நயமான பாடல் வரிகளாகும். ஐந்தொழிலையும் ஒன்றெனப் புரிவதால், பஞ்சகிருத்திய தாண்டவம் என்றும் நாமமிட்டு அழைப்பார்கள்.

காவிரிக் கரையில் 64 சிவாலயங்கள் எடுப்பித்தவன் ஆதித்த சோழன். ஆனந்த தாண்டவமாடிய

திருச்சிற்றம்பலத்தில் பொன் வேய்ந்த மன்னன் முதல் பராந்தகன். ஆதித்த சோழனின் திரு மகனான இவன் பொன் வேய்ந்து அம்பலவாணனை வழிபட்ட சோழமன்னன். இம்மன்னனைத் தொடர்ந்து இரண்டாம் பராந்தகன் ஆனந்தக் கூத்தனுக்கு நிபந்தங்கள் ஏற்படுத்தி ஈசனைத் தொழுதேத்திய வீரமன்னன்.

நெல் அளக்கும் கோலுக்கு சிற்றம்பலக் கோல் என்று பெயரிட்டழைத்தவரும், நெல் அளக்கும் மரக்கால் பெயரினை 'ஆடவல்லான்' என்றே பெயர் சூட்டி வழக்காக ஆக்கியவரும் சிவபக்தி கொண்ட சோழமன்னருள் ஒருவரே.

சோழமன்னர்களின் சிவபக்தியும், சிவத்தொண்டும் சான்றோர்களால் பாடிப் புகழப்பட்டிருக்கிறது. காவிரியில் நீராடுகையில் சோழமன்னனிடமிருந்து கழன்று விழுந்தது மணியாரம். அதனை சோழமன்னன் சிவார்ப்பணம் செய்தான். அந்த மணியாரமே திருமஞ்சனக் குடத்தினுள் சென்று, திருவானைக்கா உடையார்க்கு அணியாக ஆயிற்று என்பதனை சுந்தரமூர்த்தி நாயனார்.

"தாரமாகிய பொன்னித்
தாரை துறையாடி விழுந்தும்
நீரின் நின்றபடி போற்றி
நின்மலர் கொள்ளென ஆங்கே
ஆரங்கொண்ட எம்மானைக்கா
உடை ஆதியை"

என்று தேவாரத்தில் பாடி, சோழரின் சிவபக்தியைத் தெரிவிக்கிறார்.

சோழநாட்டை ஆண்ட மன்னன் செங்கணான் என்பவர். சிவபெருமானுக்கு, அம்மன்னன் கட்டிய கோயிலை,

"அரிசிலம் பொருபுனல் அம்பர் மாநகர்க்
குரிசில் செங்கண்ணவன் கோயில் சேர்வரே"

என்று தேவாரப் பாடல் கூறுகிறது.

"ஈசன் கழல் ஏத்தும் செல்வமே செல்வம் என வாழ்ந்த சோழமன்னர் சிவஞான கண்டராதித்தன் என்றே வரலாறு புகழ்ந்து பேசும். சைவத்திருமுறைகளில் ஒன்பதாம் திருமுறையில் சேர்த்துப் பாடப்படுகிற திருவிசைப்பா இச்சோழ மன்னர் பாடியதெனப் போற்றுவார்.

"காரார்க் சோலைக் கோழி வேந்தன்
தஞ்சையர் கோன் கலந்த
ஆரா இன்சொற் கண்டராதித்தன்"

என்ற பாடல் வரிகள் சான்றாக நின்று சோழர்களின் சிவப்பற்றைச் சித்தரிக்கிறது.

பிற்காலத்திலும் 'சிவபாத சேகரன்' எனப் புகழ்பெற்ற சோழமன்னர் சிவனடி பணியும் செல்வமே செல்வம் என்று வாழ்ந்ததும், செந்தமிழ் நாட்டு மன்னர்களின் சிவம் பெருக்கும் சீலத்தை எடுத்துக் காட்டுவதாகும்.

சோழமன்னன் ஒருவனின் சிவபக்தி அம்மன்னனை 'திருநீற்றுச் சோழன்' என்று அழைப்பதிலிருந்தே நன்கு புலனாகும்.

செந்தமிழ் நாட்டின் தொன்மை 'சிவம்' என்பதிலே தொடங்குகிறது என்பர்.

சேரமன்னர்களும், பாண்டிய மன்னர்களும், சோழமன்னர்களும் சிவநெறியில் நின்றும், சிவாலயங்கள்

எடுப்பித்தும் செந்தமிழ்த் திருநாட்டை சிவமயமாக்கிய பாங்கெல்லாம் பைந்தமிழின் பொற்காவியமாகும்.

அநாதி நித்தியமான இறைவன் முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளாவான். அவன் பாடுவான். அவன் ஆடுவான். எங்கும் அவன்தான்.

எங்கும் சிதம்பரம், எங்கும் திருநடம் என்று பாடி ஆனந்தக் கூத்தனிடம் அளப்பரிய ஈடுபாடு கொண்டவர்கள் மன்னர்கள் மட்டுமில்லை மாந்தருமாவார்.

"தத்தூம் ஆடச் சதாசிவம் ஆட
சித்தமும் ஆடச் சிவசக்தி தானாட
வைத்த சராசரம் ஆட மறை ஆட
அத்தனும் ஆடினான் ஆனந்தக் கூத்தே"

என்பதால் ஆனந்தக் கூத்தின் அழகிலும், அதனுடைய அகில அசைவும் தெற்றெனத் தெரியும்.

திருச்சிற்றம்பலமாகிய பொன்னம்பலம் கனகசபை என்று அமைந்துள்ளது. பொன்னம்பலம் சிதம்பரம் என்றால் வெள்ளியம்பலம் அமைந்தது மதுரையில்.

"அதிராச் சிறப்பின் மதுரை மூதூர்க்
கொன்றையஞ் சடைமுடி மறைப் பொதியில்
வெள்ளியம்பலத்து நன்னிருட் கிடந்தோன்"

என்று சிலப்பதிகாரத்தில் சொல்லப்படுகிறது.

தமிழ்நாட்டு பஞ்ச சபைகளாக திருநெல்வேலியில் தாமிரசபை, திருக்குற்றாலத்தில் சித்திரசபை, திருவாலங்காட்டில் ரத்தின சபை, சிதம்பரமாகிய திருச்சிற்றம்பலத்தில் பொற்சபை (கனகசபை), மதுரையம்பதியில் வெள்ளியம்பல ராஜத சபை என இவ்வைந்தும் போற்றப்படுபவை.

மதுரையம்பதி வெள்ளியம்பலத்தில் ஆடிய கூத்தனின் திருவருள் மகத்துவம் நிறைந்ததாகும்.

சந்தியா தாண்டவம், இறைவன் மகிழ்ச்சி நிரம்பப் பெற்றவராய் ஆடியதாகும். மாலைப் பொழுதில் மாதவன் ஆடிய இது பிரதோஷ நடனம் என்றும் சொல்லப்படுவதுண்டு.

கால்மாறியாடிய ஆனந்த தாண்டவம் மாமதுரை மன்னர் குல சேகர பாண்டியனின் வேண்டுகோளை நிறைவேற்ற கால்மாறியாடிய திருவிளையாடல் ஆகும். சித்திரை மாதத்தில் பூரணை நாளில் விரதமிருந்து மாலைப்பொழுதின் திருநடனமாகிய சந்தியா தாண்டவ தரிசனம் பெறுபவர் நன்மைகள் அடையப் பெறுவர் என்பது சாத்திரம்.

ஆனந்த தாண்டவ மூர்த்தியாகிய சிற்சபாநாயகன் சிவபெருமான் ஆடியவற்றை ஐவகைத் தாண்டவம், எழுவகைத் தாண்டவம், பத்துத் தாண்டவம், பதினாறு தாண்டவம், நூற்றெட்டுத் தாண்டவம் என விரித்தும் வகைப்படுத்தியும் விளக்கமாகக் கூறுவார்கள்.

பரமானந்த தரிசனம் வழங்கி, பிரபஞ்ச வாழ்வின் பேருண்மையை இறைவனின் ஆனந்த நடனம் தெரிவிக்கிறது. நமச்சிவாய நாதனின் நாதாந்த நடனம் அந்த ஆடவல்லான், அம்பலவாணனின் திருவடிகளையே பற்றச் செய்கின்றது.

மதுரையில் சுந்தர பாண்டியன் ஆடியருளியது அற்புதமானது.

10

பாண்டிய மன்னர்களின் பரம்பரை

அண்ட பகிரண்டமாளும், அம்பலக் கூத்தன், இறைவடிவான சுந்தர பாண்டியன் மதுரை வெள்ளியம்பலத்தில் ஆடியருளிய காட்சியை

அடியரேம் பொருட்டு
வெள்ளியம்பலத் தாடல் போற்றி
பொடியடித் தடந்தோள் போற்றி
கடியவிழ் மலர்பொன் கூந்தர்
கயல்விழி பாகம் போற்றி
நெய்தற் பரமானந்த
நிருத்தனே போற்றி

என்பதாகப் பதஞ்சலி முனிபுங்கவர் போற்றியுள்ளார். தொடர்ந்து, அவர் விரும்பியதற்கிணங்க, செந்தமிழின் நிலைக்களமான, கன்னிவள நாடாம் பாண்டியப் பெருநாடு புரிந்த தவம்- அந்த வெள்ளியம்பலத்தே இறைவன் எழுந்தருளி எப்பொழுதும் நின்றருள் செய்தார்.

அறங்கூறும் வழி நின்று அரசாண்ட சுந்தர பாண்டியனின் திருக்குமாரன் உக்கிரவர்மன் என்னும் உக்கிரபாண்டியன் ஆவான். சூரிய குலத்து சோமசேகரன் புதல்வியான காந்திமதியை மணந்தான், உக்கிர பாண்டியன்.

சுந்தரபாண்டியன், சந்திரனின் வழித்தோன்றல்— சோமசேகரன் சூரியனின் வழித் தோன்றல். சூரிய சந்திரர்களின் செல்வங்கள் ஒன்றாயினர். உக்கிரகுமார பாண்டியன் தந்தையிடமிருந்து வளை, வேல், செண்டு, ஆகிய முப்படைக் களங்களையும் பெற்று ஆட்சி செலுத்தினார்.

உக்கிர குமார பாண்டியன் உலகெலாம் போற்றிட தந்தை வழி அரசாண்டார்.

இந்திரனுடன் போரிட்டு, மழைவளம் பாண்டி நாட்டில் செழிக்கச் செய்த மன்னன் இவனே. சோமவார விரதம் கடைபிடிக்கும் சிவநேசன் உக்கிரபாண்டியன். மேருவை செண்டால் சாடிய வீரன். பொன் திகழும் மேருமலைப் பொற்குவியலைப் பெற்ற பேராளன், இந்த மன்னன்.

உக்கிரவழுதி, 'ஆரம் பூண்ட பாண்டியன்' என்றெல்லாம் அழைக்கப்பட்டு வந்த உக்கிர பாண்டியன், தன் மகன் வீரபாண்டியனை ஆட்சிப் பொறுப்பிலமர்த்தி, பட்டாபிஷேகம் செய்தான்.

வீரபாண்டியனின் ஆட்சிக்காலம் நிறைவுற்றதும் அவன் மகன் அரியணை ஏறினான். வணிகராக வந்து, நவமணிகள் அளித்து மணிமகுடம் செய்து, முடிசூடச் செய்த சோமசுந்தரக் கடவுளின் அருளினால் அவன் அபிஷேக பாண்டியன் என்னும் திருநாமம் பெற்றான்.

மதுரை நகரைக் கடல் அழிக்க வந்தபோது, நீர்வற்றிடுமாறு செய்திட்ட சிவவல்லமை கொண்டவன், இந்த அபிஷேக பாண்டியன்.

வருண மேகங்களைத் தடுத்து, சிவ மேகங்கள் நான்கும் மலையென, நெடிதுயர்ந்து, நான்கு மலைகளாய்

உயர்ந்ததால், 'நான் மாடக்கூடல்' ஆயிற்று மதுரை. என்றும் அழியாத நான்மாடக் கூடல் கண்ட நல்வேந்தனாக அரசோச்சினான். கல் யானைக்கு கரும்பருத்தியது இவன் காலத்தே நிகழ்ந்தது தான்.

அபிஷேக பாண்டியன், சிவனருளால் பெற்ற தவமகனே விக்கிரம பாண்டியன். விக்கிரம பாண்டியன் தமது காலத்தில் புத்த, சமண, பிறசமயப் போக்குகளை அகற்றி, வேதமும், சைவமும் ஓங்கச் செய்தான். திருக்கோயில் எடுப்பித்தான். பதினாறு தூண்களுடன் அட்டாலை மண்டபமும் கட்டிய வீரவரலாறு படைத்தவன், விக்கிரமபாண்டிய மன்னன் ஆவான்.

விக்கிரம பாண்டியனின் மகன் இராசசேகரன் தொடர்ந்து பட்டத்திற்கு வந்து ஆட்சி புரிந்தான். கலைகளில் வல்லானாக இருந்தும், பரதம் கற்றானில்லை. ஆலவாயனின் ஆனந்த நடனத்தின் மீது கொண்ட மெய்யன்பு காரணத்தால் அவன் பரதம் கற்கவில்லை.

சோழப் பேரரசன் கரிகால் பெருவளத்தான், இம்மன்னனை இழித்துரைத்த காலை, அக்கூற்றை மாற்ற விழைந்த இராசசேகர பாண்டியன் பரதக்கலையைக் கற்றான்; பயின்றான்; தேர்ந்தான்.

வெள்ளி மன்றிடை மாறியாடிய திருக்கூத்தை, இறைவன் கால்மாறி ஆடிய திருக்கோலம் கொண்டவராக சோமசுந்தரரை காலகாலமும் கண்டு களிக்கும்படி செய்த பாண்டிய மன்னர் இவரே.

இராசசேகர பாண்டிய மன்னரை அடுத்து, குலோத்துங்க பாண்டியன் ஆட்சி பாரம் ஏற்றான். சோம சுந்தரரைத் துதித்து, 'பரதேசிக் காவலர்' எனக்கொண்டாடப்பட்ட மன்னர் குலோத்துங்கராவர்.

குடிமக்கள் நலமே கோடி நன்மை பயக்கும் என இவர் அரசாண்டார். பாண்டிய மண்ணில் சிவப்பயிர் மேலும் தழைத்தது. எங்கும் சிவமயமாகக் காணப்பட்டது. குலோத்துங்க பாண்டியன், தன் மகன் அனந்தகுண பாண்டியனை அரசுக்கட்டிலில் அமர்த்தினான்.

அனந்தகுண பாண்டியன் அரசனானான். திருநீறு, திருவைந்தெழுத்து, திருஉத்திராக்ஷம், மூன்றுமே மெய்ப்பொருள் எனக்கொண்டு, பக்தியில் சிறந்த பாண்டி நந்நாட்டைப் பழுதின்றி, இருள் நீக்கி, அரசு முறை செய்து வந்தார். இம்மன்னரின் காலத்தில்தான் மதுரைத் திருநகரம் மகோன்னதமாகத் திகழ்ந்தது. ஈடு இணையற்ற சிவநேசராக விளங்கிய அனந்த குண பாண்டிய மன்னன் 'சமணத்தை விரட்டிய திண்ணிய தோளர்' என்று மக்கள் அனைவராலும் ஒருமித்து புகழ்ந்து ஏற்றப்பட்டார்.

அனந்த குண பாண்டிய மன்னருக்குப் பிறந்த நன்மகன் குலபூஷணபாண்டியன். நல்லரசுக்கு ஒரு நாயகனாகத் தோன்றியவன் குலபூஷணன்.

வெற்றிகள் பெற்ற காலை, சேனைத் தலைவனைப் பார்த்து, 'எனக்கு நீயே சிவபெருமான் ஆவாய்' என்று நவிலும் நற்சிந்தையர் இந்த மன்னர்.

கொடுக்கக் கொடுக்கக் குறைந்திடாத 'உலவாக்கிழி' என்னும் பொற்கிழியை சிவபெருமான் அருளால் பெற்ற சிவநெறி வழுவாப் பாண்டியக் கோமான் குலபூஷணன் என்று மக்கள் கொண்டாடினார்கள். திருக்கோயில்கள் சமைத்து, கோபுரமெழுப்பி திருப்பணியாற்றிய பாண்டியச் செம்மல் இவர்.

வேத விற்பன்னர்கள், உபநிஷத், ஸ்ம்ருதி, வியாகரண, நியாய தத்துவார்த்த மேதைகளை ஆதரித்தும் சிவாகமச்

சித்தாந்த நுண்ணறிவாளர்களை வளர்த்தும், பாண்டிய குலப்பெருமை மங்கிடாமல், குலபூஷண பாண்டியன் ஆட்சி நடந்தேறியது.

குலபூஷண பாண்டியன் காலத்திற்குப்பின், இராசேந்திர பாண்டியன் மணிமகுடம் தரித்தான். ராஜ்ய பாரத்தை அந்த ஆலவாய்த் திருவடிவினன் இட்ட கட்டளையாகக் கருத்திற் கொண்டு, கடமை வழுவாது ஆற்றி வந்தான். இம்மன்னன் "காடு வெட்டிய சோழனுக்குக் கருணை காட்டிய வள்ளல்" என்று சிறப்புடன் போற்றப்பட்ட மன்னன் ஆவான்.

இராசேந்திர பாண்டியன் செங்கோல் செலுத்திய பிறகு, இராசகம்பீர பாண்டியனும், அம்மன்னனைத் தொடர்ந்து, பாண்டி வாங்கிய தீபன், புரந்தரசித்து, பாண்டி வாங்கிய பதாகன் ஆகியோரது ஆட்சிக் காலங்கள் செவ்வனே நடைபெற்றன.

பாண்டி வாங்கிய பதாகனின் மைந்தன், சுந்தரேச பாத சேகரன். மதுரையம்பதி மாதேவனின் திருத்தொண்டன் என்று தம்மை எப்போதும் எண்ணிக் கொண்டே சுந்தரேச பாத சேகர பாண்டியன், குறுநில மன்னர்களை வென்று, வீரத்திரு உருவாய், வெற்றியின் வடிவமாய், விளங்கிய பாண்டிய மன்னன் ஆவான். வணிகச் சிறுவன் ஒருவனுக்கு வாழ்வாங்கு வாழ, பொன்னும் மணியும் வழங்கிய கருணை வள்ளல், இந்தப் பாண்டிய அரசர்.

மதுராபுரிச் சோமசுந்தரருக்கு 'முடிகண்டிகை' போன்ற விலைமதிக்க வொண்ணா பொன்மணி இரத்தின நகைகள் சார்த்தி உளம் மகிழ்ந்தவர் இவர். சோமசுந்தரர் திருக்கோயிலை பொன்னாலாக்கிப் புதுப்பித்து சிவப் பணி புரிந்தவர் சுந்தரேச பாத சேகர பாண்டிய மன்னர்.

பாண்டிய மன்னர்களின் பரம்பரை தொடர் சங்கிலி போன்று பக்திவழி நின்று, பெருமை காத்து, பண்பு பேணி, பாண்டிய மன்னர்களின் பரம்பரையின் பரிபாலனம் பார் வியக்க நிகழ்ந்து வந்தது.

சுந்தரேச பாத சேகர பாண்டியனின் நன்மகன், வரகுணன். தந்தையைப் போன்றே சிவநெறியில் நின்று, சிம்மாதனம் ஏறியவன். மதுரையம்பதியின் மேலக் கோபுரத்தை நிர்மாணித்த மாமன்னர். மதுரேசரின் மீது மாறாத பக்தி உடையவர்.

உலகங்களில் மேம்பட்டது சிவலோகம்; அச்சிவலோகம் காண அவாவிய வரகுண பாண்டிய மன்னருக்கு,

"நாம் இன்றைக்கு அச்சிவ லோகத்தை இவ்வுலகத்தில் வருவித்து இவ்வன்பருக்குக் காட்டுவோம்." என்று சோமசுந்தரர் திருவுளம் கொண்டு, வரகுணபாண்டியரின் மெய்மை பூண்ட பக்தியை மெச்சி, சிவலோகத்தைப் பூலோகத்தில் காட்டியருளினார்.

அத்தகைய சிவம் என்னும் செம்பொருளாம் திருவருள் பேறு பெற்ற வரகுண பாண்டிய மன்னர் அவையிலே, தான் நின்று கொண்டிருக்கிற காட்சி, பாணபத்திரன் மனத்திலே தோன்றி நினைப்பில் வட்டமிட்டுப் பளிச்சிட்டது.

திருவஞ்சைக் களத்துத் திண்ணையில் அமர்ந்து இருந்த பாணபத்திரன் மனக்கண்முன், வரகுண பாண்டியனின் சிறப்பும், அரசவைக் காட்சிகளும் அப்படியே, தத்ரூபமாக, ஒன்றன்பின் ஒன்றாக, வரிசையாக வந்து நின்றன.

11

வரகுண பாண்டியன் அவையில், பாணனுக்குச் சோதனை

பூலோகத்தில் சிவலோகத்தை, சிவபெருமான் அருளால் கண்ட மாமன்னன் அவன். அறநெறியை வாழ்வின் முதல் நெறியாய்க் கொண்டவன்.

பேர் படைத்த வரகுண பாண்டியனின் சீர், சொல்லும் தரமென்று. ஊர் புகழும், உலகு போற்றும் தனிப்பெரும் பாண்டிய மன்னன் அவன்.

"வரகுணனாம் தென்னவன் ஏத்து சிற்றம்பலத்தான்" என்று மாணிக்கவாசகர் பாட்டாலே மகுடம் சூட்டியுள்ள மன்னன் அவன்.

"கொற்றவர்கள் தொழுகழற்கால் கோ வரகுண மகாராசன்" என்று சின்ன மனூர்ச் செப்பேடுகளில் வரகுண பாண்டிய மன்னனின் பெருமை தெரிகிறது.

"போரில் எதிரிகள் எய்த கணைகள் வரகுண தேவன் பாதத்தை வணங்கின" என்பது நம்பியாண்டார் நம்பி மொழிந்தது.

வரகுண மகராசன் என்றே சிறப்பிக்கப்பட்ட இம்மன்னன் கயிலை மகாராசன், அந்த கௌரி நாயகனையே போற்றிப் பணிகிறவன்.

"தேவ தேவ திருவடைமருத" என்று நேரிசை ஆசிரியப்பாவில் பாடிப்பணிகின்ற பட்டினத்துப் பிள்ளைார் பாடுகிறார்:

கைலாய வாண, கௌரி நாயக நின்னை வணங்கிப் பொன்னடி புகழ்ந்து பெரும்பதம் பிழையா வரம்பல பெற்றோர் யார் யார் தெரியுமோ என்று கேட்கிறார். கேட்டுவிட்டு, அவரே பதிலும் பட்டியலாகச் சொல்கிறார்.

உமையவளும், அவளுடைய இனிய மைந்தன் கணபதி, குமாரனும், திருமால், பிரமன், தக்ஷன்பெண், பூமாதேவி, ஸரஸ்வதி தேவி என்றெல்லாம் விவரிக்கிறார்.

இவர்கள் மாத்திரமா! வானோர் தலைவன், கோடி உருத்திரர், அயிராவதம், துவாதசாதித்தர் என்றெல்லாம் காட்டுகிற பாட்டு வரிகள் பரவசப்படுத்தும். சில இதோ.

"இமையா நெடுங்கண் உமையாள் நங்கை"

"அமரர்த்தாங்கும் குமரவேளும்"

"அரிசங்கேந்திய திருநெடுமாலும்
வான்முறை படைத்த நான்முகத் தொருவனும்
தாரகற் செற்ற வீரக்கன்னியும்
பூவின் கிழத்தியும், நாவின் மடந்தையும்

என்றெல்லாம் பொன்னடி புகழ்ந்து பெரும்பதம், பிழையா வரம் பல பெற்றவர்களைப் படம்பிடித்துக் காட்டி,

சந்திரன் ஒருவனும் செந்தீக் கடவுளும்
நிருதியும் சமனும் சுருதிகள் நான்கும்
வருணனும், வாயுவும் இருநிதிக் கிழவனும்

என்று பன்னிரு சூரியர்கள், சந்திரன், வருணன், வாயுவுடன், அக்னி காலதேவனும், ஞாலத்தின் நான்கு சுருதிகளும் என மொழிந்து சங்கநிதி, பதுமநிதி, வழங்கும் குபேரனை இருநிதிக் கிழவன் என்றும், மேலே மேலே பாடி உள்ள வரிகள் படித்துப் படித்து இன்புற வேண்டியவை.

எட்டு நாகங்கள், அஷ்ட வசுக்கள், மூன்று கோடி முனிவர்கள், வசிஷ்டன், கபிலன், அகத்தியன், தும்புரு, நாரதர் எனத் தொடர்ந்து, ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்று சைவமதம் வளர்த்த நால்வரையும் சொல்லி, இவ்வாறே பக்தி பூண்ட பரமனடி தொழுது எண்ணிலாப் புண்ணியச் சீலர்களின் சிறப்புடைய பேர் மொழிந்து.

"பெரிய அன்பின் வரகுண தேவரும்
இளைய தன்மையர் எண்ணிறந்தோரே"

என்று பதினோராம் திருமுறையில் பட்டினத்துப் பிள்ளையார் போற்றி ஏற்றுகிற கைலாயவாணனின் வரம் பெற்றவர்களின் நீண்ட வரிசையில் நிறைவான இடம் பெற்றவர் வரகுண பாண்டிய மன்னர் ஆவார்.

வரகுணன் பாண்டிய மன்னன் தான். பாண்டியனை, தென்னவன், செழியன் என்றழைப்பார்கள். மீனவன், மாறன் என்றாலும் பாண்டியனையே குறிக்கும்.

"செழியன் கூடற்கோமன் தென்னவனை,
வழுதி மீனவன் பஞ்சவன், மாறன்..."

என்று பிங்கல நிகண்டுவில் காணலாம்.

பூழியன் என்பது சேரமன்னனை குறித்தாலும், பாண்டிய மன்னனையும், பூழியன் என்று அழைப்பார்கள்.

இத்தனை பெயர்கள் இருந்தாலும், பதினோராம் திருமறையில் பட்டினத்துப் பிள்ளையார் 'பெரிய அன்பின் வரகுண தேவராம்!' என்ற பாட்டு வரிகளால் வரகுண பாண்டிய மன்னனை, வரகுண 'தேவர்' என்று சிறப்பித்திருக்கிற பான்மை கருத்தூன்றி நோக்கி உணர்வதற்குரியதாகும்.

சிவனருள் பெற்றவர்களில் தேவ தேவர்களின் வரிசையில், வரகுண பாண்டியன் நின்று அணியெனத் திகழ்கிறதை என்னென்று நினைத்து அளவிலா ஆனந்தம் அடைவது!

அத்தகைய "தேவர்" திருவருள் புரிவது போல் வரகுணபாண்டியன் ஆட்சியும், அவன் அரசவையும் பாணன் கண்களுக்குப் பட்டது.

நாற்பத்து மூன்று ஆண்டுகள் செங்கோலோச்சிய சிவனெறிச் சீராளர் வரகுண பாண்டிய மன்னர். சிவமயமாகப் பாண்டியப் பேரரசு திகழ்ந்தது.

வரகுண பாண்டிய மன்னன் அவைக்கு வடதேசத்திலிருந்து, யாழ்ப்புலவன் ஒருவன் வந்து, மன்னனை வணங்கி, யாழிசை பாடி அவைக்களத்தை இசைக்களமாக்கினான்.

"பாண்டிய மன்னன் அந்த யாழிசையில் மகிழ்ச்சியுற்று அந்த யாழ் வாணன் ஏமநாதன் என்பார்க்கு பொன்னும், பொருளும் வழங்கினான். உணவும், உடைகளும் அளித்து, தங்குவதற்கு பெரியதொரு மாளிகையும் தந்து மதுரையில் இருந்திடப் பணித்தான்.

இவ்வாறு, வரிசைகள் பலவும் பெற்ற ஏமநாதன், பலநாட்டு மன்னர்களிடமிருந்து விருதும் பொருளும் பெற்ற யாழ்ப் புலவராவர். அதன் காரணமாக, பெருமை கொண்டிருந்த அவனிடம் செருக்கும் சேர்ந்திருந்தது. 'தனக்கு நிக'ரான யாழ்வல்லர் யாருமிலர் என்ற மமதையும் அவனிடம் நாளுக்கு நாள் மிகுந்திருந்தது.

மதுரை நகர் வந்து, வரகுண பாண்டிய மன்னனிட மிருந்து சிறப்புக்களைப் பெற்றதும் ஏமநாதனின் செருக்கு முன்னைவிடப் பன்மடங்காகப் பெருகிவிட்டது. இந்தச் செய்தியின் விபரங்கள் சின்னாளில் வரகுண பாண்டிய அரசர் செவிகளுக்கும் எட்டியது.

பாண்டிய நாட்டுக்கு வந்து சிறப்புக்கள் பெற்ற ஏமநாதன், இவ்வாறு செருக்குற்று இருப்பதை மன்னர் அறிந்ததும், அவனுக்கு ஒரு பாடம் கற்பிக்கவே எண்ணினார்.

பாணபத்திரன், பாண்டி நாட்டு யாழ்ப்புலவன், திருவாலவாயுடையாரின் திருத்தொண்டன். பாட்டும், பணிவும், நாட்டுப்பற்றும் நல்லுணர்வும் மிக்கவன் அவன். பரமனடி தொழுது இசைபாடும் பக்தன், பாணபத்திரன் என்பது பாண்டியன் அறிந்ததே.

வரகுண பாண்டிய மன்னர் பாணபத்திரனை அரசவைக்கு வருகை தருமாறு அழைப்பு விடுத்தார். அரசரின் ஆணையாக ஏவலாளர் மூலம் அந்த அழைப்பு அவனுக்கு வந்தது. பக்தியால் பண்புடன் வளர்ந்த பாணபத்திரன், உடனே அரசவைக்கு வந்தான். பாண்டிய ராஜனைப் பணிந்தபடி வணங்கி நின்றான்.

பாணபத்திரனைக் கண்டதும், வரகுணன் மனத்திற்குள் ஒருவித மகிழ்ச்சி அலை புரண்டு ஓடியது.

அருகில் வருமாறு அழைத்து பாணனிடம் “நீ யாழிசை வல்லவன், இசை வல்லான். தனக்கு நிகர் யாரு மில்லை என இருமாந்திருக்கும் வடதேசத்து ஏமநாதனுடன் பாடும் திறமையுடையவனா” என்று நேரடியாகவே கேட்டார்.

கேட்டதுமே, பாணனிடமிருந்து, “திறமையுடையவன் தான்; நான் பாடுகிறேன்” என்று பதிலையும் எதிர்பார்க்கும் பாவனையில் மன்னர் காட்சியளித்தார்.

பணிவையே பெரும் அணியாகக் கொண்ட பாணபத்திரன் சொன்னான்:

“அடி வணங்குகிறேன் மன்னா. தென்னவன் கோவே, திருவே, உமது இதயம் விரும்புகின்ற விதம் மதுரை மாதேவன் சோமசுந்தரர் திருவருளும் சேர்ந்திடும் முயற்சியுடன் பாடுவதற்கு சித்தமாகிறேன். ஏமநாதருக்குச் செருக்கிருப்பின், திருவாலவுடையார் சமன் செய்திடுவார். மன்னர் ஆணையேற்று, இசைக்கிறேன். பாண்டியர் பெருமை வளர்ந்திடும்.”

பாணபத்திரன் பக்தியுடையவன் ஆதலால் செய்கையனைத்திலும் செம்மை பிறந்திடும். சித்தந் தெளிவுற உள்ளதனால் வித்தைகள் மேன்மையுறும் என்று அவையோர்கள் ஒரே கருத்தில் எண்ணங்களைப் பரிமாற்றம் செய்து கொண்டனர். அந்த பரிமாற்றக் குரல்கள், பாண்டியன் காதுகள் வரை சென்றனவோ, அல்லவோ!

பாணபத்திரனின் அடக்கம் குடிகொண்டிருந்த வாசகங்களை மனதாரக் கேட்டு, மகிழ்ச்சித் திளைப்பில் மூழ்கியவாறே, மன்னன் பாணனை நோக்கிக் கூறினான்:

“இன்று செல்க; நாளை வந்து பாடுக!”

கட்டளைக் குரலாக இல்லாமல், அது அன்பின் இழையோட்டமாக அமைந்திருந்தது.

'வல்லவன் யாருமில்லை'' என்ற ஏமநாதனின், கர்வத்தை அடக்கிக் காட்டவே, பாணபத்திரனை மன்னர் அவைக்கு அழைத்து, போட்டிக்கு நாளும் குறித்து யாழிசைப்பண் முழக்கக் கட்டளையும் பிறப்பித்தார்.

மெல்ல மெல்ல, பின் நடந்து, பாணபத்திரன் அரசவை விட்டு நகர்ந்து சென்றான். எக்காலமும் சிவனையே தொழுது, முக்காலமும் சோமசுந்தரனையே பாடிப் பணிந்து பக்தி செய்யும் பாணபத்திரன் திகைத்தான்.

மன்னரின் கட்டளை! கட்டளையா அது! கருணையும், அன்பும் உறவாடும் பாண்டி நாட்டுப் பற்றுக்கு, தான் ஆற்ற வேண்டிய கடமை அல்லவா அது! இவ்வாறு கருதிக் கருதி, அதிலேயே ஆழ்ந்தான், பாணபத்திரன்.

அரசரின் ஆணையை அடக்கத்துடன் ஏற்றுக் கொண்டு அவன், ஆலவாய்த் தலைவனின் சந்நிதி சென்று முறையிட்டு வேண்டினான். நடந்தவற்றை நடந்தவண்ணம் ஒப்பிலாத் தேவன் முன்பு ஒப்புவித்தான். தேவகானமாய் இசைக்கும் பாணன், செருக்கு, கர்வம், இறுமாப்பு எல்லாம் இன்னவென்றே அறியாத இயல்பினன்.

'எனக்கு என்ன தெரியும்' என்பான். எளியன் நானொன்றும் பாடுகிறேனில்லை என மொழிவான். பரமன் பணிக்கிறான். பாடுவது என் கடன் என்றும் இறைவன் தந்த மடிப்பிச்சை அது என்றும் சதா சொல்லிச் சொல்லி 'அவன் தாளிணை' எப்பொழுதும்

வணங்குகிற பண்புடையவன் என்பது அவனைப் பார்த்ததும் தெரியும்.

ஏமநாதனை வென்று காட்டவேண்டியது அரசரின் ஆசை. ஆணையும் கூட. அருள்பாலிக்க வேண்டுவதோ ஆலவாயழகனின் திருவுள்ளம் என்று பொழுதெல்லாம் நெகிழ்ந்துருகிச் சிவனையே சித்தத்திலேற்றிக் கொண்டிருந்தான், பாணபத்திரன்.

ஏமநாதனின் மாணவர்களுடைய இசைத்திறம் கண்டே வியந்தவன் பாணபத்திரன். திறமை தனக்கிருந்தாலும் எளிமையின் காரணத்தால் சற்றுத் தயங்குகிற சுபாவத்தான் பாணன். மாத்திரையளவு மாறாமல் பாடும் வல்லமை சீடர்க்கே இருக்கிறதென்றால், ஏமநாதனின் திறம் எம்மட்டோ! ஏமநாதனை எவ்வாறு வெல்வதோ! இந்தவிதமாக பாணபத்திரன் நினைவோட்டமாக நடந்து வந்தான்.

அரசவையினின்று அம்பலவாணன் ஆலயம் சென்று கரம் குவித்தான். கும்பிட்டான்.

"சோமசுந்தரரே, நின் துணையே அடியேனைக் காத்திடல் வேண்டும்"

அயராத பக்தியின் சிகரத்திலிருந்து பாணபத்திரன் மனமுருகினான்; பணிந்தான், போற்றிப் போற்றிப் பணிந்தான்.

ஒருவாறாக மனந்தேர்ந்து பாணபத்திரன் தன் இல்லம் ஏகினான். மனப்பாரத்தை மகாதேவன் முன் சமர்ப்பித்து விட்ட பிறகு, பாணன் சுமை குறைந்தவனாகி, வேகமாக, கம்பீரமாக நடந்து இல்லத்தை அடைந்தான்.

பொற் கோழி கூவிற்று. பொழுது புலர்ந்தது; எங்கனும் பூபாளம் பரவியது. காலை எழுந்து கதிரழகு வந்தது.

போட்டிநாள். யாழிசையின் வல்லமையை, பாண்டியன் அவை காண்கிற நாள்.

ஏமநாதனுக்கு மன்னர் ஏவலாள் மூலம் செய்தி அனுப்பினார். போட்டிக்கு வந்து கலந்து கொள்ளும் ஏமநாதனை எதிர்பார்த்திருந்தனர் மன்னரும், மற்றவர்களும்.

பாணபத்திரன், குறிப்பிட்ட நேரத்தில் அவைக்கு வந்தாயிற்று... போட்டிக்கான எல்லா ஏற்பாடுகளும் தயாராகி, மண்டபம் முழுவதும், ஆவலோடு காத்திருந்தது.

'ஏமநாதன் வரவில்லையா இன்னும்' என்ற குரல் வரகுண பாண்டியனிடமிருந்து எழுந்தது. மன்னருக்கே உரிய கம்பீரமான குரலது. பாணபத்திரன் தன் இருக்கையிலிருந்து எழுந்திருக்க யத்தனித்தபோது, அருகிலிருந்தோர், அவனை அமரச் செய்து விட்டனர்.

மன்னர், ஏமநாதன் வராமல் இருப்பது கண்டு, மனம் கலங்கிய நிலைப்பட்டிருப்பதைக் கண்ணுற்ற பாணன், இரண்டாம் முறை எழுந்து ஏதோ சொல்ல முனைந்த சமயத்திலும் அருகிலிருந்தவர்கள், பாணனை அமரப் பணித்து, "நீங்கள் ஒன்றும் கவலைப்படாதீர்கள்" என்று அமைதிப்படுத்தினார்கள். பாணனிடம் அவர்களுக்கு ஒரு தனி அன்பு.

பாணபத்திரன், எதுவும் சொல்ல இயலாத சூழல். பாண்டியனுக்கு ஏமநாதன் குறித்தபடி அவைக்கு வராமல் இருப்பதின் காரணம் பிடிபடவில்லை. ஏவலாளர்கள் மட்டும் அப்போது திரும்பி வந்தார்கள்.

மன்னன் சீற்றம் கொண்ட தோரணையில் சிம்மாசனத்தில் நிலைகொள்ளாமல் வீற்றிருந்தான்.

"கிழப்பருவத்தில் விறகு சுமந்து விற்பவன் ஒருவனின் இசையைக்கேட்டு, நகரைவிட்டு முன்னிரவே ஏமநாதன் ஓடிவிட்டதாக, தாங்கள் அறிந்து வந்த செய்தியை, சேவகர்கள் விபரமாக, ஆனால் நடுங்கியவர்களாக பதற்றத்துடன் தெரிவித்து பணிந்து பின்னே சென்றனர்.

வரகுணன் அதிர்ச்சியடைந்தான். "என்ன இது விந்தையாக உள்ளதே" என்று உள்ளுக்குள்ளேயே சொல்லிக்கொண்டான். மன்னன் மனத்திற்குள் எண்ணிக்கொண்டதை உதடுகள் முணுமுணுத்தன போன்று சற்றே அசைந்தன. இறுமாப்பு உடைய ஏமநாதன், பயந்தோடிவிட்டதில் ஒருபக்கம் பாண்டியனுக்கு நகைப்பும், திகைப்புமாக இருந்தது என்றாலும், போட்டி நிகழ்ந்து பாணன் வென்று இருந்தால் இன்னும் பெருமையன்றோ" என எண்ணி சிறிதே ஏக்கம் தோய முகப்பொலிவு குறைந்த மாதிரித் தோற்றமளித்தான்.

எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்த பாணபத்திரனை மன்னர் விசாரித்தார். மன்னரின் அழைப்பைச் செவியுற்ற மாத்திரத்திலேயே பாணன் விரைந்தெழுந்து, "மன்னர் மன்னா மாதேவன் அருளால்- என்று தழுதழுத்தபடி மெல்லிய குரலில் விநயமுடன் நின்றபடி தெரிவிக்கலானான்.

"நேற்று அரசவை விட்டு நீ சென்றதும் நடந்ததென்ன" என்று வரகுணபாண்டியன் வினவு முன்பாகவே, பாணன் மனந்திறந்து சிவபெருமானிடம் முறையிட்டுக் கொண்டதையும், சோமசுந்தரர் விருத்தனாகி விறகு விற்ற படலத்தையும் விவரித்தான்.

இறைவன் விறகு சுமந்து ஏமநாதனை ஓடச்செய்து தன்பொருட்டு கருணை சுரந்ததாகத்தான் கண்ட கனவும்

அதுவே" என்று பாணபத்திரன் பரவசத்துடன் கூறினான். அந்தச் சுந்தரக் கனவு மெய்யாகி நனவாகி விட்டதை இப்போது விபரமாக நவின்றான்.

விறகு விற்பவனாய் விருத்தன் வேடம் தரித்து, சோமசுந்தரக் கடவுள் ஏமநாதன் மாளிகைமுன் சென்று சாமவேதம் பாடும் சாதாரிப் பண்ணாகிய தேவகானம் பாடினார்.

பண்ணின் கோடிவகை இன்பம் பயப்பது போன்றிருந்தது. சாதாரிப்பண்ணில் வெளிப்படுவன ஒலிக்குரியனவும், வண்ணமும், உண்மையும் கூடியிருந்தது. திசைகள் எட்டையும் தன்மயமாக்கியது. பிரபஞ்சமே சோமசுந்தரரின் சாதாரிப் பண்ணில் ஒன்றியது. சோமசுந்தரர் விறகு சுமப்பவனாக வந்து பாடிய பாட்டின் பண் கேட்டு ஏமநாதன் அயர்ந்து போனான். விறகுக் கட்டைகளை கீழே வைத்துவிட்டு, ஏமநாதன் வீட்டுத் திண்ணையில் அமர்ந்து அந்த விருத்தர் பாடினார். இசை கேட்டு அந்த நாத நயத்தில் லயித்த ஏமநாதர் இசை பாடுபவர் யாரென்று கேட்டறிந்தார்.

"யாழ்வல்லான் பாணபத்திரனின் சீடன். வயது முதிர்ந்ததால் இசைக்கேற்றவன் அல்லன் எனத் தள்ளப்பட்டவன். அதனால் விறகு விற்று பிழைக்கிறேன்" என்றார் கிழப்பருவத்து விறகு விற்கும் வேடமேற்ற இறைவன்.

இந்த வார்த்தைகள் ஏமநாதனைத் திடுக்கிட வைத்தன. சிறிது நேரம் தலை சுற்றுவது போல் தோன்றியது, ஏமநாதனுக்கு. பெரியவரான விறகு விற்பவரின் வார்த்தைகளை இன்னொரு முறை நினைத்துப்

பார்த்தான். "அடேயப்பா அப்படியா சேதி" என மீண்டும் திடுக்குற்ற நிலைக்கு ஆளானான் ஏமநாதன்.

பாணபத்திரனின் சீடனே விருத்த நிலையிலும், தசைகளெல்லாம் ஒடுங்கிய நிலையிலும், இத்திறம் கொண்டு பாடுகின்றான் எனில், பாணபத்திரன் பாத்திறம் எத்துணை சிறப்புடைத்ததோ! என்று கலங்கிக் கலங்கி செய்வது தெரியாது திணறினான்.

வயதான பருவத்திலும் சீடனின், இசையே தேவகானம் என்றால், பாணபத்திரன் முன் தன் நிலை என்னாகிடுமோ, என்று பீதியுற்று, பயந்து பின் வாங்கியது ஏமநாதனின் மனம். உடனே, அங்கிருந்து கிளம்பிச் சென்று விடுவதே நல்லது என்று திட்டமிட்டு, ஓடோடிவிட்ட ஏமநாதனின் கதை முழுவதும் மன்னருக்குத் தெரிந்தது.

மன்னர் மெய்ச் சிலிர்த்தார். சத்தியத் தடத்தில் சிவப்பணிபுரியும் பாணபத்திரனின் அயராத பக்தியின் விளைவைக் கண்டு அதிலே தன்னையே சில நிமி டங்கள் மறந்தார்.

பாணபத்திரனுக்கு வரகுண பாண்டிய மன்னர் பற்பல வரிசைகள் புரிந்தார். யானை மீதேற்றி, திருவீதி உலா வரச்செய்தார். பொன்மணி, திரவியங்கள் வாரி வழங்கினார். அரசவையில் தினமும் பாடுமாறு பணித்து பாண்டியநாட்டு அரசவையின் கௌரவம் வழங்கினார். அரசவைப் பாடகனாக்கினார்.

பரிசில் பல பெற்று பாணபத்திரன் வளமுடன் வாழ்ந்தான். தான தருமம் செய்து சுற்றம், நட்பு பேணி வாழ்ந்து வந்தான்.

அரசவைப் பாடகனாக இருந்தாலும், அவனிடம் மனநிறைவு இல்லாமல் இருந்தது. சிவபிரானின் கருணையில் மிதந்த அவனால், சிவனிசை தவிர மற்றவற்றை பாடியும் அவற்றில் மகிழ்ந்திடவும் மனம் இயலாதவனாக ஆகிவிட்டான். இறைபக்தியே அவனை ஆட்கொண்டிருந்தது. சிவனொளியே அவனை வழி நடத்திற்று.

அரசவையில் பாடுவதை நிறுத்திவிட்டான். அம்பலவாணன் அடிகளே வாழ்வு என்று நினைத்து அவ்வாறே வாழலானான். அரச வருவாய் நின்று விடுமே என்று எண்ணினானில்லை. வருவாயும் நின்று போயிற்று. பரமன்டியே போதுமென்று இருந்தான். அந்தப் பொன்னடிகளே அவனுக்குப் பிரகாசமாய்த் தோன்றிற்று.

பாணபத்திரனுக்கு உலகியல் வாழ்வில் வருமான மில்லாத நிலை உருவாகியது. பொருள் இன்றி, வாழ்வு வறுமைப்பட்டது. மன்னர் முன் பாடுவதினும், மகேசன் முன் பாடுவதிலேயே பாணன் தலைப்பட்டான். அதுவே தலையாய பணியெனவும் மனத்திற் திடமாகக் கொண்டுவிட்டான்.

அரசவை செல்வதை அறவே நிறுத்திவிட்டான். தன்பொருட்டு உதவிய அகிலாண்ட முதல்வனுக்கே அடிபணிந்து ஏத்தினான். அயரா அன்புடைமை கொண்டான்.

“பனிமதி மருமான் கோயிற்
பாணிசைக் கிழமை நீத்துக்
குனிமதி மிலைந்த நாதன்
கோயில் முப்போதும் எய்திக்
கனிமதி அன்பின் பாடும்
கடப்படு நியமம் பூண்டான்”

12

சிவபெருமான் திருமுகப்பாசுரம் அருளலும் பாணனின் சேரநாட்டுப் பயணமும்

பாணபத்திரன் அயரா அன்பு கொண்டு ஆலவாயழகனிடமே அடைக்கலமாகி விட்டதால், வருவாய் பற்றிக் கவலை கொண்டானில்லை. எனினும் அன்றாட வாழ்வு நடந்தேற வேண்டுமன்றோ!

சோமசுந்தரக் கடவுள் பாணபத்திரனின் சிந்தையை அறியாதவரா! அன்பு பூண்டார்க்கு அருளுகின்ற அப்பனல்லவா அவன்! அல்லல் அறுத்து அடியாரை ஆண்டருளுபவன் அல்லவா அவன்!

ஏழிசை வல்ல பாணபத்திரனின் சீடன் என்று விறகு விற்கும் விருத்தனாக வந்து உதவிய சோமசுந்தரர் பாணபத்திரனின் இந்த நிலையைக் கண்டு பொறுத்திடுவரோ!

பாண்டிய மன்னன் பொன்னறைக் கருவூலத்திலிருந்து நாள்தோறும் பாணனுக்குப் பொருள் அளித்து வந்தார் சோமசுந்தரர். பாண்டியன் கருவூலத்துப் பொன் பாணனுக்கு அவ்வப்போது பரமன் மூலம் கிடைத்துக் கொண்டிருந்தது. என்றாலும், பாணபத்திரனுக்கு

நிரந்தரமான ஓர் உதவிபுரிய சிவபெருமான் திருவுளம் கொண்டார்.

பாணபத்திரனின் முன்பு தேவாதி தேவன் சிவபெருமான் தோன்றினார்.

"அன்பனே, நின்னைப் போன்றே நம்மிடம் மாறாத பக்தி கொண்டுள்ள சேரமான் உமக்கு உதவுவான். சேரமானுக்கு நாம் இன்றே, இப்பொழுதே, இக்கணமே ஓர் ஓலை எழுதித் தருவோம். அந்த ஓலையைச் சேரமானிடம் சேர்ப்பித்திட அங்கு போகக் கடவாய்"!

இவ்வாறு, சோமசுந்தரக் கடவுளாக அந்த ஆலவாயின் அண்ணல் திருவாய் மலர்ந்து செம்மொழி நல்கினார். "ஓலைத் தூக்கு" அருளி ஓம்பினார்.

மறைக்கு ஈடான மாதேவன், வேதநாயகன் தம்முடைய மலர்க்கரங்களால் மாகவிதையொன்று, இயற்றி அருளினார். கூடல் ஆலவாய் அழகன் கோதிலாக் கவிதையொன்று, காவிய வண்ணமாய் இயற்றி அருள் பாலித்தார், பாணபத்திரனிடம்.

தெய்வீகக் கவிதை அது. செந்தமிழ்த் தேவன், சுந்தரன் முருகப் பெருமானின் தந்தையல்லவா ஈசன். அங்கயற்கண்ணி, தன்னொடும் அமர்ந்த ஆலவாயன் ஆக்கிய அற்புதக் கவிதை அது! பாண்டி நன்னாடு உடையான் பாடியருளிய கவிதை அது!

ஆதியும், அந்தமும் இல்லாதவன், அன்பினில் ஒளிர்ந்த கவிதை அது!

உய்ய நெறி காட்டுவித்து, ஓங்காரத்து உட்பொருளை அருள்கின்றவன் அமைத்த கவிதை அது.

ஆடவல்லான், அகிலத்தை ஆட்டுவிப்பவன் கூட்டுவித்த பாட்டுப் பட்டயக் கவிதை அது!

சடையில் கங்கையைத் தரித்த சங்கரன் செய்த சுந்தரக் கவிதை அது! தக்கன் வேள்வியைத் தளரச் சாடிய செஞ்சடைத் தேவன் தந்தது.

பிறை சூடிய அந்தப் பொன்னார் மேனியன் பிறப்பித்த பொற் கவிதை அது! பொன்னம்பலத் துறைப் புண்ணியனளித்தது அது.

அடியார் பரவும் அமரர் பிரான் அருளொடு நயந்த அர்த்தப் பொலிவு பொருந்திய அழகுக் கவிதை அது!

அண்டமுதலான் அரன் எழுதிய அருட் கவிதை அது!

அங்கம் குளிர்ந்துபுனல் ஆடும் அப்பன் அருளியது அது!

திருவாலவாயுடையார் திருவருளிச் செய்த திருமுகப் பாசுரம் அது. ஆம்; சோமசுந்தரச் சிவபெருமான் யாத்த செந்தமிழ்க் கவிதை அது!

கடிதமொன்றை, கவிதை நடையில் கடவுள் எழுதியதே அந்தத் திருமுகப்பாசுரம்.

மதுரைச் சொக்கலிங்கப் பெருமான் மனமுவந்து வழங்கிய பாசுரப்பாட்டு என்னும் சீட்டுக்கவி அது! முடங்கல் முறைக்குத் தடம் அமைத்துத் தந்த முத்தான தமிழ்க் கவிதை அது!

அத்தகைய திருமுகப்பாசுரத்தைப் பெற்றுக்கொண்ட பாணபத்திரன் தன்னிலை கடந்தான். எல்லையற்ற கருணாமூர்த்தியான ஈசனின் இணையிலா அருளுக்கு பாத்திரனாகியதை எண்ணி எண்ணி, களி கொண்டான்.

தொடர்ந்து, எந்நாளும் தனக்கு அந்த ஆலவாயழகன் பேருதவி புரிந்து வருவதை உளம் நினைந்ததும், ஆனந்தக்

கண்ணீர் தானாகவே கசிந்தது. பாணபத்திரன் நயனங்களிலிருந்து பேரானந்தக் கண்ணீர் பெருகியது.

பாணபத்திரன் அந்தத் திருமுகப்பாசுரத்தைப் பெற்றுக் கொண்ட தன்னுடைய கரங்கள் "என்ன பாக்யம் செய்தனவோ" என்று பெருமிதம் அடைந்தான்; பூரித்தான்.

சிவபெருமான் அருளிய திருமுகப்பாசுரத்தைக் கையில் பெற்றுக்கொண்ட பாணன் அதனைக் கண்களில் ஒற்றிக் கொண்டான். அவன் திருப்தி பெற்றானில்லை. மீண்டும் பன்முறை கண்களில் பதியவைத்தபடி நன்றாக ஒற்றிக்கொண்டான். பக்திக்குப் பரமன் கொடுத்த பரிசு அது. ஒரு வரப்பிரஸாதமென்று மனத்தில் வகுத்துக்கொண்டான்.

பட்டாடைக்குள்ளே சுற்றி, மிக பத்திரமாக அந்தத் திருமுகப்பாசுரத்தை, பொன்னே போல் கருதினான். பட்டுக்குள் வைத்து, பட்டைச் சுற்றி மடித்தும், கையில் வைத்துக் கொண்டு களிப்பில் ஆழ்ந்தான்.

சாம்பசிவன் அருளிச் செய்த பாசுரம் அது என்று சிந்தித்துக் கொண்டே கோயிலைப் பன்முறை வலம் வந்தான். வலம் வந்து வலம் வந்து, எல்லாம் வல்ல சிவனை மூலஸ்தானம் சென்று வழிபட்டான். திருவாலவாயன் அருகிருந்து தேவாராதனை புரிந்தான்.

பரமபக்தனான பாணன், பக்தி மேலீட்டால் சீட்டுக்கவியை வைத்து சுற்றியுள்ள பட்டாடையின் மீது பணிவுடன் தன் பார்வையைச் செலுத்தி, இறைவனை வழிபடுதல் போல் அதனை வழிபட்டான்.

பக்தியைத் தவம் எனச் செய்யும் பாணபத்திரன் அவம் நீக்க வந்த சிவப்பேறு பொதிந்த நவமான பாசுரம்

அல்லவா அது! அந்தப் பட்டாடைக்குள் இருக்கும் சீட்டுக்கவி, பாணனுக்கு வெறும் சீட்டுக்கவி மட்டுமா!

இல்லை, இல்லை. அது, சிவதரிசனம் தந்திடும் அவனுக்கு! பட்டாடையின் பளபளப்புப் பிரகாசம், "சூர்ய கோடி ஸமப்பிரபம்" என்கிற ஆகமத்தின் பிரகாரம் கோடி சூர்யர்களைப் போன்ற ஜோதியாக விளங்குகிற 'சொரூப சிவமாக' பாணபத்திரனின் கண்களுக்குப் பட்டது.

சோதியும், நீதியும், நித்தமுமாக நிற்கும், சொரூப சிவமாகத் தெரிந்தது. தூய திருமேனி தாங்கிய சதாசிவமாக, அந்தத் திருமுகப்பாசுரம் என்னும் சீட்டுக்கவி, சுடரொளியெனத் தெரிந்தது.

சிவபெருமானின் சுடரொளி காட்டும் தடத்தில் கருத்தும், காலும் பதித்து நடக்கும் பாணபத்திரன் மலை நாடு நோக்கிப் பயணத்தை மேற்கொண்டான். பாண்டிய நாடு விட்டு சேரநாடு செல்லலானான்.

தோலினால் செய்யப்பட்ட தோல்கொள் கலத்தினுள் பட்டாடையால் சுற்றப்பட்ட சீட்டுக்கவியுடன் பயணத்திற்குத் தேவையான மற்றவற்றையும் எடுத்துக்கொண்டான்.

வலதுபுறத் தோளின் மீது மாட்டிக்கொண்டான். மாமதுரையை ஒருமுறை பரிவுடனும், பக்தி மீதூறிடவும் பார்த்தான்.

அந்த மாமதுரை தான் திருவாலவாய். 'வேதியா, வேதகீதா, விண்ணவரண்ணா, என்றன் சோதியே, மலர்கள் தூவியொருங்கி நின்கழல்கள் காணப் பாதியோர் பெண்ணை வைத்தாய், படர்சடை மதியஞ்சூடும் ஆதியே, ஆலவாயில் அப்பனே, அருள்செ

யாயே' என்று நாவுக்கரசர் அடிபணிந்த ஆலவாயன் திருநகரம் அம்மதுரை.

'அன்பனே, ஐயனே, ஆண்டனே, அழகனே அறிவனே' என்றெல்லாம் அழைத்து அழைத்து அடிபணிந்த அப்பர்பிரானின் ஆலவாயப்பனின் உறைவிடம் அம்மதுரை.

பாணபத்திரனின் சிந்தையுள் உறைந்த சோமசுந்தரக் கடவுளின் திருவிடம் விட்டு அவன் புறப்பட்டான்.

'அங்கயற்கண்ணி தன்னொடுமமர்ந்த ஆலவாயாவது மிதுவே, என்ற சம்பந்தரின் பதிகப்பண்ணொலி கேட்க, பாணன் புறப்பட்டான். சிவனுறைகின்ற ஆலவாய்; அந்திவான் மதிசேர் சடைமுடியண்ணல் ஆலவாய்; இப்படி ஆலவாய், ஆலவாய் என்ற சீர்கொண்ட தென்மதுரையம்பதி விட்டு பாணன் பயணமானான்.

அருந்தெறல் கடவுள்
அகன்பெரும் கோயிலும்
பெரும்பெயர் மன்னவன்
போர்இசைக் கோயிலும்
பால்கெழு சிறப்பின் பல்இயம் சிறந்த
காலைமுரசுக் கனைகுரல் ஓதையும்
நான்மறை அந்தணர் நவின்ற ஓதையும்
மாதவர் ஓதிமலிந்த ஓதையும்

இளங்கோவடிகள் யாத்த காப்பிய வரிகளின் நயமான சந்தக் கவிதை முரசொலித்துக் கொண்டிருப்பது போல் பாணன் செவிகளுக்குப்பட்டது.

ஏற்றமும் எடுப்புமிக்க மதுரை செந்தமிழ் இலக்கியத்தில் இணைந்துள்ள மாட்சிகளை நினைவு கூர்ந்தான்.

சேரநாடு செல்லும் பாணபத்திரன், தான் எங்கிருந்து புறப்படுகிறோம் என்றெண்ணிப் பார்த்தான்.

தென்கூடல் திருவாலவாய்ச் சிவன் வதியும் திருநகரம் மதுரையம்பதியிலிருந்து புறப்பட்டான்.

"தென்தமிழ் நன்நாட்டு தீதுதீர் மதுரை" என்றும் "மதுரைத் தென்றல் வந்தது காணீர்" என்றும் இலக்கிய வரிகள் சாற்றுவதைப் போல, அந்தத்தீதிலா மதுரையிலிருந்து தெய்வத் தென்றலாக சீட்டுக்கவியுடன் பாணபத்திரன் அங்கிருந்து கிளம்பினான்.

சாத்தனார் போற்றுகின்ற 'தென்தமிழ் மதுரை' விட்டு, சிவபக்தன் பாணன் புறப்பட்டான்.

"தமிழ்நிலை பெற்றதாங் கருமரபின்
மகிழ்நனை மறுகின் மதுரை"

என்று சிறு பாணாற்றுப்படை செப்புகிற சீருடையது மதுரை.

"தண்டமிழ் வேலித் தமிழ் நாட்டகமெல்லாம்
நின்றுநிலை இப்புகழ் பூத்தல் அல்லது
குன்றுதல் உண்டோ மதுரை"

என்று தமிழ்ப் பயிர்வளர வேலியாய் அமைந்த மதுரை எனப் பரிபாடல் மூலம் பாராட்டுப் பெற்ற அம்மதுரை பாணபத்திரன் வாழ்ந்த பாண்டியத் தலைநகரம்.

"உலகமொடு நிறையாத் தானோர் நிறையாப்
புலவர் புலக் கோலாற்றூக்க—வுலகனைத்தும்
தாள்விட, வாடாத தன்மைத்தே தென்னவன்
நான் மாடக் கூடல்"

என்னும் பாட்டுவரிக்கேற்ப வாடாமல் வளர்ந்தோங்கும் வழிசெய்யும் நான்மாடக்கூடல்.

நற்றமிழ் வளர்த்த நல்நகரம்

அம்மட்டோ!

சோமசுந்தரக் கடவுளின் பக்தியெனும் அன்பினால் தோய்ந்த அடியார்கள் வாழும் நகரம்.

"ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாய் உறையும் எம் ஆதியே"

என்று திருஞானசம்பந்தர் பாட்டாலே போற்றிப் பரமசிவனைப் பாடியே பணிந்த திருநகரம் மதுரை. அங்கேயிருந்து பாணபத்திரன் புறப்பட்டான்.

"மடுவார் தென்மதுரை நகர் ஆலவாயில்
மறிகடல் சூழ்புனல் வாயில் மாடநீடு
குணவாயில் குடவாயில் ஆனவெல்லாம்
புகுவாரைக் கொருவினைகள் கூடாவென்றே"

என்பதாக திருநாவுக்கரசர் பாடிச் சிறப்பித்தது மதுரையம்பதி. அந்தப் பதிவிட்டு பாணன் பயணமானான்.

பாரதநாட்டின் தென்பால் திகழும் தமிழ்நாடு தொன்மையானதும் தெய்வீகச் சீர்மல்குவதும் ஆகும். சேர, சோழ, பாண்டிய மன்னர்களால் ஆட்சி செலுத்தப்பட்ட நிலமாகும், தமிழ்நாடு.

தமிழகத்தில் கீழ்நாட்டில் சோழரும், தென்னாட்டில் பாண்டியரும், மேல்நாட்டில் சேரரும் என மூவேந்தர்கள் ஆண்ட முத்தமிழ் நிலமாகும்.

தமிழ்ப் பெருங்குடி மக்கள் இறைமையோடு இசையையும் இயற்கையையும் பிணைத்தபடி வாழும் பண்பாளர்கள். நிலத்தையும், பருவப்பொழுதுகளையும் இயற்கையுடன் கண்டு மனித வாழ்வில் இலக்கிய ஏற்றங்களைப் படைத்த பெருமை கொண்டவர் தமிழர்கள்.

அந்த வகையில் அவை திணை இலக்கியம் என்று வழங்கப்படுபவை. திணை இலக்கியத்தை, அகம் புறம் எனக் கண்டு, அந்த இரண்டையும் பலபிரிவுகளாகப் பாகுபடுத்தியுள்ளனர். இரு திணைகளிலும் ஏழு ஏழு பாகுபாடுகளாக்கியுள்ளதை,

"கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்
முற்படக்கிளந்த எழுதிணையென்ப"

என்று தொல்காப்பியத்தில் காணலாம். மேலும் திணைக்கேற்றபடி நிலத்தைப் பாகுபடுத்துவதும் அதுபோதும் முதற்பொருளாய் நிலம் என்றும், பொழுது என்றும் இருவகையாக்ப் பிரித்திடுவார்கள்.

"முதல் எனப்படுவது நிலம் பொழுதிரண்டின்
இயல்பென் மொழிப இயல்புணந்தோரே"

என்றும் தொல்வரிகள் நீளும்.

காலநிலைகளை பலகூறுகளாகக் கண்டவர்கள் பகல், இரவு என இரண்டாகப் பிரித்ததுடன் மேலும் அதனை அளவிட்டுக் காட்டலாயினர். சிறுபொழுதினை, வைகறை, விடியல், எற்பாடு, நண்பகல், மாலை, யாமம் எனப் பிரித்தும் பெரும் பொழுதினை இளவேனில், முதுவேனில், கார்காலம், கூதிர்காலம், முன்பனிக்காலம், பின்பனிக்காலம் என்றும் காலப்பாகுபாட்டை பலகூறுகளாக அமைத்திருந்தனர்.

திணையும், பருவநிலைப் பொழுதுகள் என பெரும்பொழுது ஆறும், சிறுபொழுது ஆறும் தமிழ் நாட்டின் நிலவகைகளுக்கேற்ப அமைக்கப்பட்டுள்ளன.

மக்கள், தங்களுடைய வாழ்வினோடு ஒன்றியதாக திணையையும், பொழுதுகளையும் கொண்டிருந்ததே போன்று நிலத்தையும் தொடர்பு படுத்திக் கொண்டிருந்தனர்.

தமிழ்மண்ணில் நால்வகைப்பட்ட நிலம் உண்டு.

"முல்லையும் குறிஞ்சியும் மருதல் நெய்தல் என
சொல்லிய முறையிற் சொல்லவும் படுமே"

என்றபடி, காடும் காடுசார்ந்த இடத்தையும் முல்லை என்றழைத்தனர். மலையும், மலை சார்ந்த இடமும் குறிஞ்சி என வழங்கப்பட்டது. வயலும், வயல் சார்ந்த இடத்தையும் மருதம் என்று சொல்வார்கள். கடலும், கடல் சார்ந்த இடத்தையும் நெய்தல் என்று பெயரிட்டு அழைத்தார்கள்.

நான்கு வகையான நிலங்களை உடைய தமிழ்நாடு, நானிலம் என்றே அழைக்கப்பட்டு வந்தது.

"நளன் என்பான் மேனிலத்தும் நானிலத்தும் மிக்கான்"

என்பது நளவெண்பா கூறும் செய்தியாகும்.

பின்னாளில், பாலையும், மணலும், மணல் சார்ந்த இடமும் ஒரு நிலமாகக் கொள்ளப்பட்டது. அதனை,

"முல்லையும் குறிஞ்சியும் முறையின்றிரிந்து
நல்லியல் பழிந்து நடுங்குது யருஞுற்றும்
பாலை என்பதோர் படிவம் கொள்ளும்"

என்று தொல்வரிகள் தெரிவிக்கிறது.

இயற்கை அமைப்பின் அடிப்படையில் நிலத்தைப் பிரித்திருந்தபடியே, நிலங்களுக்குரிய தெய்வங்கள் எனவும்,

மாயோன் மேய காடுறை யுலகமும்
சேயோன் மேய மைவரை யுலகமும்
வேந்தன் மேய தீம்புன லுலகமும்
வருணன் மேய பெருமண லுலகமும்"

என்று வகுத்துத் தெய்வ வழிபாடு நிகழ்த்துவதும் மரபாக இருந்து வந்தது.

இறைவனை இசை வடிவில் வழிபடுவது பண்டைய காலத்தே உண்டு. பைந்தமிழ் நாட்டினர் பண்ணிசைத்துப் பரம்பொருளைப் பணிந்திடும் பண்பு உடையவர்கள்.

இசை வழியிலும், நானிலத் தன்மையை பின்பற்றிய நாகரிகச் செழுமையை இலக்கியங்கள் அறிவிக்கின்றன.

முல்லை நிலத்தின் பண்ணாக, கோவலர் ஊதும் பாணியும், குறிஞ்சி நிலத்தின் பண்ணாக குறத்தியர் பாடிய குறிஞ்சிப் பாணியும், மருத நிலத்தின் பண்ணாக, தொடுப்பு ஏர் உழவர் ஓதைப் பாணியும், நெய்தல் நிலத்துப் பண்ணாக, அஞ்சொற் கிளவியர் அம்தீம் பாணியும், என்பதாக வகுத்துள்ள பழமைப் பண்பாடு தெரிகிறது.

பாணபத்திரன் இசைவாணன், நிலங்கள் தோறும் மாறி மாறி இசை எழுந்து வரும் பண்ணின் பல் இன்பங்களை ரசித்தபடியே பயணமாகிக் கொண்டிருந்தான்.

வைகறையின் வனப்புக்களை ரசித்தான். விடியலில் புள்ளினத்தின் கலகலத்வனி கேட்டபடியே பயணத்தைத் தொடர்ந்தான்.

முல்லை நிலத்தைக் கடந்தான். குறிஞ்சி நிலத்தைத் தாண்டிச் சென்றான். பாலை நிலத்து வழிநடந்து வளம் கூடிய மலை நாடாம் சேரநாடு நெருங்கினான்.

பாணபத்திரனின் தோளின் மீது தொங்கியபடி இருந்த அந்த தோல்கொள்கலம் அவனுடைய வயிறு, மார்பு இவற்றின் பக்கவாட்டுப் பக்கமாக, முன்னும் பின்னுமாக ஊஞ்சல் போன்று ஆடி அசைந்தது. அசைவின் வீச்சு, அதிமாகும் போது, பாணன் யாழ் மீட்டும் தன் கைவிரல்களால், அதனை அணைத்துக் கொள்வான்.

சிவநாமத்தை உச்சாடனம் பண்ணிக் கொண்டே, பாணனின் பயணம் நடந்தது. சேரநாடு நெருங்கிவிட்டது என்பதை வழிப்போக்கர்களின் வாயிலாக அறிந்து, தன் நடையில் ஆர்வம் காட்டினான்.

தோளின் மீது இருந்த அந்த தோல்கொள்கலம் அவனுக்கு ஒரு அணிபோல் அமைந்திருந்தது.

பொன்னூஞ்சல் போல, பாணனின் நடைக்கேற்ப, மெல்லவும், வேகமாகவும் மாறி மாறி அது தோளிலிருந்தபடியே அசைந்தாடிக்கொண்டிருந்த அழகு, தனிப்பொலிவாக இருந்தது.

அந்தப்பொலிவே, தன்னை வழிநடத்தி வந்திருப்பதாக பாணபத்திரன் நினைத்துக் கொண்டே ஊர்ப்புறம் வந்து விட்டோமோ என்று அருகில் வந்தவர் ஒருவரிடம் கேட்டறிந்து கொண்டான்.

'திருவஞ்சைக்களம் வந்தாயிற்று' என்ற குரல் கேட்டதும் பாணன் உள்மனம் துள்ளிக் குதித்தது. அந்த மனத்துள்ளல் மெதுவாக அவனுடைய தோள்களைப் பாதித்தது. வலது தோளின் மீது உள்ள தோல்கொள்களமும் சற்றே துள்ளித் துள்ளி, தோளின் தடத்தில் நிலைத்தது.

அந்தத் திருவஞ்சைக் களத்திற்கு வந்து சேர்ந்தான்.

தண்மை உறைந்த நல்நகரம் அது. சோலைகள் சூழ்ந்த திருநகரம், திருவஞ்சைக்களம்.

சேரநாட்டில் அழகும் குளிர்ச்சியும் கொண்ட கடற்கரையில் உள்ளது மகோதைப் பட்டினம். அந்த மகோதையில் அமைந்துள்ள கோயிலும், ஊரும் பாடல்பெற்ற திருத்தலம்.

ஊரினுள் வந்ததுமே, கண்களில் பட்ட பெருவீதி யொன்றை நோக்கினான். அந்த வீதியில் உள்ள ஒரு வீடு. அந்த வீட்டுத் திண்ணையைப் பார்த்தான். பார்த்ததுமே அவனிடம் சேர்ந்திருந்த களைப்பெல்லாம் தீர்ந்தது போல் கருதினான். திண்ணையில் நேராக வந்து அமர்ந்து கொண்டான், பாணபத்திரன்.

ஓய்வு எடுத்துக்கொண்டான். களைப்பாறியதும் எழுந்தான்.

சுற்றுமுற்றும் திருவீதியைக் கண்ணுற்று விட்டு, திண்டில் சாய்ந்தபடி அமர்ந்து சிந்தனையில் ஆழ்ந்தான். நினைவுகள் பின்னோட்டமாகி, நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றாக மனக்கண்முன் வந்து நின்றன.

தான் கொண்டு வந்திருந்த தோல்கொள்கலத்துடன் திண்ணையை விட்டு எழுந்தான்.

திருவஞ்சைக் களத்துத் திண்ணையை விட்டுக் கீழே இறங்கிய பாணபத்திரன், திண்ணையை விட்டு நான்கு அடிகள் எடுத்து வைத்து முன்னே நடந்து, வீதியை நோக்கிய வண்ணமாக, அந்த வீட்டு வாயிலில் நின்று கொண்டிருந்தான்.

சிந்தனையெல்லாம் சேரமாமன்னரின் அரண்மனை செல்லவேண்டும்; சிவபெருமான் அருளிச் செய்த திருமுகப்பாசுரத்தை, சேரமான் பெருமாள் மன்னரிடம் வழங்க வேண்டும் என்பதாகவே இருந்தது.

13

பொன்வண்ணம் பாடிய சேரமான், பாணனைக் கண்டு பரவசம்

"குமரியொடு வடவிமயத்து ஒரு மொழிவைத்து உலகாண்ட சேரலாதற்கு" என்று சிலப்பதிகார வரிகள் சிறப்பிக்கும் சேரநாடு, செந்தமிழ் கொண்டு செங்கோல் புரிந்த நாடாகத் திகழ்ந்தது.

"மாந்தரல் சேரமன்னன் வாழ்க" என்பார்கள். பண்டைக்காலச் சேரநாட்டு நகரம் 'மாந்தை' என்பதையே அது குறிக்கும். பழமையின் மாண்பைக் காட்டுகிறது. அது தமிழ்மறைகளில் தேர்ந்த வல்லுநர்களுக்கும், மெய்ப்பாடுடையவர்களுக்கும், புலவோர்க்கும் பொன்னை வானளாவ வாரி வழங்குகிற கொடைக்குணம் கொண்டவர்களான நெடுவேலுடன் வளமுடைய சேரலர்களின் இயல்பறிந்து, அத்தகைய சேரனைக் காண்போம் என்பதாக,

> "குலவு வேற் சேரன் கொடைத்திறம் கேட்டு
> வண்டமிழ் மறையோற்கு வானுறை கொடுத்த
> திண்டிறல் நெடுவேற் சேரலன் காண்கு..."

பாட்டு வரிகள் சேர அரசனின் சீரிய பண்பை பறை சாற்றுகின்றன.

பாரதப்போர் நிகழ்ந்த போதே, இரு தரப்பில் உள்ள பெரும் சேனைகளுக்கும் உணவளித்து, சேரமன்னர் ஆற்றிய பணிகாரணமாக, சேரலாதன் உதியஞ்சேரல் என்னும் மன்னனை "பெருஞ் சோற்று உதியன்" என்று சிறப்பித்து தனி அடைமொழியிட்டும் புகழ்ந்துரைத் துள்ளனர். முரஞ்சியூர் முடி நாகராயர் எனும் செந்தமிழ்ப்புலவர் இதுபற்றி எழுதிப் போற்றி உள்ளார்.

தமிழினம் சார்ந்த சேரமன்னர்களின் பல்திறப்பட்ட கொடைத்திறனைப் பாங்குடன் பதிற்றுப்பத்து தெரிவிக்கிறது.

நெடுஞ்சேரலாதன் இரண்டாம் பத்துப்பாடிய குமட்டூர் கண்ணனாருக்கு 500 ஊர்களையும், உம்பர் காட்டையும் இறையிலி நிலமாக (வரி நீக்கப்பட்ட நிலமாக) வழங்கிய மன்னராவர்.

சேரர்களுக்கு வில்வித்தை குலவித்தையாகும். வில்லவன் என்பது சேரமன்னருக்குரிய குடிப்பெயர். யானைச் செல்வமுடைய சேரநாட்டின் படைகளில் யானைப்படை வலுவானது.

பல்யானை செங்கெழுகுட்டுவன் என்றே சேரமன்னனை பாலைக் கௌதமனார் பாடியுள்ளார். அந்தப் புலவருக்கு வேள்விகள் புரியப் பேருதவி புரிந்த மன்னர் செங்கெழுகுட்டுவன் ஆவான்.

காப்பியாற்று காப்பியனார் என்னும் புலவருக்கு, களங்காய்க் கண்ணி என்ற சிறப்புடைய நார்முடிச் சேரல் நாற்பது நூறாயிரம் பொன் வழங்கிய வரலாற்றுப் பெருமை உடையவர்கள் சேரமன்னர்கள்.

கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன் பாணருக்குப் பெரும்பொன் அளித்துப் போற்றினான். ஆருகோட்

பாட்டுச் சேரலாதனிடம் காக்கைப் பாடினியார், நச்செள்ளையார், பொற்குவியல் பெற்றிருக்கிறார்கள்.

செல்வக் கடுங்கோ வாழியாதான் புலவருக்கு ஈவதில் வல்லான். கபிலர் என்னும் புலவர், நல்லிசை வாய்மொழிக் கபிலர், பொய்யா நூலின் கபிலன் என்று புகழ் பெற்றவர். பரணரின் தோழர் இவர் என்பதால், கபில பரணர் என்பார்கள். கபிலருக்கு சேரமன்னன் செல்வக் கடுங்கோ நூறாயிரம் பொன் கொடுத்தான். அத்துடன், நன்றோ என்ற குன்றேறி அதன்மீது நின்று, கண்ணுக்கெட்டிய தூரம் உள்ள நாடு வரை வழங்கினான்.

புலவர்களைப் போற்றும் பண்பு, சேரமன்னரின், கொடைத்திறத்திற்கு சிகரம் காட்டுகிறதல்லவா!

செல்வக் கடுங்கோ வாழியாதான். பதுமன் தேவி ஆகியோரின் மகன் பெருஞ்சேரல் இரும்பொறை 'தகடூர் எறிந்த' சிறப்புப் பெயருடையவன். அரிசில் கிழார் என்னும் புலவர் பெருமானுக்கு பொன்னை வாரி வாரி வழங்கியவன் இந்தப் பெருஞ்சேரல் இரும்பொறை மன்னனே.

மற்றொரு சேரமன்னனான குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறை என்பவன். புலவர் பெருங்குன்றூர் கிழாருக்கு பல்லாயிரம் பொன் கொடுத்துப் போற்றினான்.

சேரன் செங்குட்டுவன், அவன் தந்தை இமயவரம்பன் என சேரமன்னர்களின் பெருமை நீண்டதொரு வரலாற்றுச் சீர் படைத்ததாகும்.

வழி வழியாய் மாண்புடைய சேர மன்னர்களின் கொடைத் திறத்தின் வழி வந்தவர் சேரமான் பெருமாள்.

சிவநெறி பற்றி வாழ்வதும், அவரது சிவ நேசமும் தரணி அறிந்த ஒன்றே.

"திருநெறி யாம் சிவமா நெறி கூடும்
ஒருநெறி ஒன்றாக வேதாந்தம் ஓதும்"

என்பதன் விளக்கமாக வாழ்கிற மன்னர் சேரமான். திருநெறியே சிவநெறி என்பது வேதாந்தத்தின் முடிவு. இதனுடன் ஒருங்கு வைத்து எண்ணத்தக்கதான நெறி வேறு ஒன்றும் இல்லை என்பதை வேதாந்தம் தெளிவாகச் செப்பும்.

சிவபிரானின் செம்பொன்னடி வண்ணங்களே சேரமானுக்கு வாழ்வாகும். மொழிப்புலமையும், பாத்திறமும் அமையப் பெற்றவரான சேரமானுக்கு இசையிலும் ஈடுபாடுண்டு.

இசைப் பாவகைகளில் ஒன்று வண்ணம். அந்த வண்ண வகைப்பாட்டை சிறுவண்ணம் பெருவண்ணம் என்பார்கள். அதனுள்ளும் பல பிரிவுகள் உண்டு.

பத்திய வண்ணம், ஆம்பல் வண்ணம், பாத்திப வண்ணம், குவளை வண்ணம், இவற்றில் சித்திர வண்ணம் முக்கியமான ஒன்று.

இந்த சித்திர வண்ணம் என்பது ஐந்தாய், அந்தாதி எழுவாயடியும், ஈற்றடியும், மண்டிலங்க கொள்ளப் பாடிப் புணர்வதாகும். இங்கு மண்டிலங் கொள்தல் என்பதற்கு வட்டம் அல்லது வட்டமாய் ஓடுதல் (சுற்றுதல்) என்பதாகப் பொருள் கொள்வார்கள்.

காணினும், கேட்பினும், கருதினும், களிதரும் கடவுள் சிவனென, காலமும் வாழ்பவர் சேரமான் பெருமாள்.

பொன்னார் மேனியனைப் பணிந்த சேரமான் பெருமாள், நூறு பாடல்களைக் கட்டளை கலித்துறையில் பொன்வண்ணத் தந்தாதியாகப் பாடியுள்ள பாட்டில்,

“பொன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
மேனி பொலிந்திடும்
மின்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
வீழ்சடை வெள்ளிக்குன்றம்
தன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
மால்விடைத் தன்னைக் கண்ட
என்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
ஆகிய ஈசனுக்கே”

என்ற வரிகள் நெஞ்சை ஈர்ப்பனவாகும். சித்திர வண்ணமாக அமைந்த இந்த பொன்வண்ணத்தந்தாதி, சிந்தையை சிவமயமாக்கும்; இந்த வண்ணங்களைப் படித்துப் பரவசமாகும் போது,

இவ்வண்ணம் நிகழ்ந்த வண்ணம்
இனியிந்த உலகுக் கெல்லாம்
உய்வண்ணம் அன்றி மற்றோர்
துயர்வண்ணம் உறுவதுண்டோ
மைவண்ணத்(து) அரக்கி போரில்
மழைவண்ணத்(து) அண்ண லேயுன்
கைவண்ணம் அங்குக் கண்டேன்
கால்வண்ணம் இங்குக் கண்டேன்.

என்று பாலகாண்டத்தில் அகலிகை மீது ஸ்ரீராமனின் கால்பட்டதும், அந்த வண்ணத்தைப் பாடியுள்ள கம்பனின் கவிநயமிகுந்த பாட்டுவரிகள் நினைவிற்கு வராமல் போகாது. வளமார்ந்த வண்டமிழ்ப் பாட்டு வண்ணங்களை நெஞ்சம் மறக்க இயலுமோ!

திருவிளையாடற் புராணம் தந்த பரஞ்சோதி முனிவர் கடவுள் வாழ்த்திலேயே,

"பூவண்ணம் பூவின் மணம்
போல மெய் போதமின்பம்
ஆவண்ணம் மெய்கொண்டு
அவன்றன் வலி ஆணைதாங்கி

என்று வண்ணங்களை முன்னிறுத்தி பூ வண்ணம் முதலில் தோன்றப்பாடியுள்ளது பூ என்பதற்கான பொருளுணர்ந்து பூமியின் வண்ணத்தை, பிறப்பின் வண்ணத்தை, மலரின் வண்ணத்தை பொலிவு வண்ணத்தை நன்செய் நில விளைவு போக வண்ணத்தை அழகு வண்ணத்தை எனப் பலவாகக் கண்டு இன்புற வைக்கிறது.

பூ என்றால் யானையின் நெற்றிப் புள்ளிகள் என்றும் பொருள் உண்டு. அந்த சிவபாலனின் வண்ணத்தை பூவண்ணம் என்றேத்திப் புகழ்ந்தார் போலும்.

ஆவண்ணம், பசுவண்ணமா, கருணையாம் இரக்கத்தின் இயல்பா, ஆன்மாவின் பாங்கா, இல்லை இவை எல்லாமும் தானா! வண்ணவிதங்கள் தான் எத்தனை எத்தனை!

"இடமால் வடமாலை வண்ணம்" என்ற கபில தேவரின் பாடல்வரி, மாலை நேரத்து செவ்வானின் வண்ணம் போன்ற திருமேனி உடையவன் சிவபிரான், என்று பொன்மஞ்சள் வண்ணத்தை அது சொல்லும். திங்கள் சூடிய செஞ்சடை, தெய்வச் சிறுபிறை இளநிலா, தேய்விலா ஒளிச்சுடரோன், சிவனல்லவா! மங்களங்களைச் செய்பவன் அவன். சிவனையே சிந்திக்கும் வண்ணமான செயல்புரியும் அடியார்க்குத் தெளிவு தருபவன்!

"வண்ணங்களுக்குள் முதன்மையான வண்ணம் (நிறம்) வெண்மையானது. நிஷ்களமான திருமேனி உடைய

சிவபிரானின் நிறம் சுத்தமான ஸ்படிகம் போன்ற நிறமாகும். ஸ்படிகமான அவனே முதல்வன்! நமக்குப் பரனும் அவனே. அறிவு (புத்தி) வண்ணமாகி, ஞான வடிவமாகி மனத்திற்குள் எழுந்தருளியவன்.

இவ்வண்ணமான சிந்தனையைத் தருகின்ற,

“அந்திவண் ணாஅ ரனேசிவ னேஎன்று
சிந்தைசெய் வண்ணம் திருந்தடி யார்தொழ
முந்திவண் ணாமுதல் வாபர னேஎன்று
புந்தி வண்ணன்எம் மனம்புகுந் தானே!”

என்று திருமந்திரம் காட்டுகிற திருவண்ணங்கள் உள்ளத்தில் உலா வருகின்றன.

“வண்ணம் என்றாலே நிறம், வர்ணக் கலவை என்று மட்டும் பொருள் இல்லை. அழகு, குணம், இயல்பு மூன்றையும் கூட வண்ணம் என்பர். சிறப்பு, வடிவம், வகை இம்மூன்றையும் கூட வண்ணம் என்றே கூறுவார்கள். பாவின் ஓசை, சந்தப்பாட்டு இரண்டினையும் வண்ணம் என்று மொழிவது இசை மரபு. இப்படியே வண்ணம் பற்றிய எண்ணம் விரிவாகச் செல்லும்.

“சுழல் வண்ண முஞ்சடைக் கற்றையும்
மற்றவர் காணகில்லார்
தழல் வண்ணங் கண்டே தளர்ந்தோர்
இருவரந் தாமரையின்
நிழல் வண்ணம் பொன் வண்ணம் நீர்நிற
வண்ணம் நெடிய வண்ணம்
அழல் வண்ணம் முந்நீர் வலஞ்சுழி
ஆள்கின்ற அண்ணலே”

திருவலஞ்சுழி மும்மணிக் கோவையில் பிரானைப் பாடியுள்ள நக்கீர தேவநாயனார் நயங்களும்,

"காணீர் கதியொன்றும் கல்லீர்
எழுத்தஞ்சும் வல்ல வண்ணம்
பேணீர் திருப்பணி பேசீர்
அவன்புகழ் ஆசைப்பட்டு"

என்று அஞ்செழுத்தின் அரும்வண்ணத்தில் அவன் புகழ் காட்டியும்,

"திருவொடு பொலியும் ஒருபால் திருமுடி இனைய வண்ணத்து நினைவரும் காட்சி" ஆகிய பட்டினத்துப் பிள்ளையாரின் பாட்டு வரிகளும் பரவசம் தருபவை.

"அவன் கண்டாய் வானோர்
பிரானாவான் என்றும்
அவன்கண்டாய் அம்பவள
வண்ணன் அவன் கண்டாய்"

என்று காரைக்கால் அம்மையார் அற்புதத் திருவந்தாதியில் காட்டும் வண்ணம் கண்டால், பிரான் கழல் பணியச் செய்யும்.

"முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்"

என்று அப்பர் சுவாமிகள் அருளிய அகப்பொருள் உருவகப்பாட்டின் அற்புதம் நெஞ்சில் தவழும்.

அருள் சுரந்து ஆதரிக்கும் அற்புதக் கூத்தன் திருவருளின் வண்ணங்கள் யாவும் எண்ணங்கடந்து இதயத்தைப் பற்றுகிற காந்த வரிகளாகும்.

கைலாய வாணன், கௌரி நாயகனின் வண்ணங்களுக்கு ஓர் எல்லையுமுண்டோ!

இதோ ஒரு இயற்கை நிறைந்த இறைமையின் திருக்காட்சி. முல்லைக்கொடிகள் பெருமளவு பொழிலாய் இருக்கும் இடம். தழைத்து வளர்ந்து செழித்த

முல்லையின் நறுமணம் வீசிடும். அங்கே நந்நலம் தரும், நற்பதி திருக்கருகாவூர். சிவபெருமான் முல்லைவனத்தில் எல்லையிலா அழகு மிளிர சீலமுடன் எழுந்தருளிய சிவத்தலம் அது.

முல்லை கமழ்கின்ற கருகாவூரில் உறைந்த இறைவனுடைய வண்ணங்களைத் திருஞானசம்பந்தர் பலவாறு பாடியுள்ள வரிகள் வண்ணங்களுக்குப் புதுவண்ணம் தருகிறவாறு அமைந்துள்ள சிறப்பு நெஞ்சத்தை ஈர்க்கிறது.

ஒவ்வொரு பாடல்களின் இறுதி வரிகளிலும் சம்பந்தப்பெருமான் காட்டுகிற வண்ணங்கள் படிப்பவர்களின் எண்ணங்களை சிந்தனை ஆய்வுக்கே அழைத்துச் சென்று விடுகிறது.

வண்ணம் என்பது ஒரு வகையான இசைப்பாட்டு. ஆனால், திருஞானசம்பந்தர் தீட்டியுள்ள வண்ணம் புது வகையானது.

வண்ணம் என்பதற்கு அழகு, இயல்பு, இவ்வளவு மடங்கு, குணம், சிறப்பு, நிறம் மணம், வடிவம், வகை, வர்ணக் கலவை என்பதுடன் சந்தப்பாட்டு என்றும் பொருள் உண்டு.

ஆக, இவையனைத்தையும் உள்ளடக்கி இந்த ஞாலத்திற்குக் காட்ட வேண்டும் என்று ஞானசம்பந்தர் விரும்பித்தானோ என்னவோ,

"அத்தர் வண்ணம் அழலும்
அழல் வண்ணமே"

என்று முதல் பாட்டிலும்,

"அமுதர் வண்ணம் அழலும்
அழல் வண்ணமே"

என்று அடுத்த பாட்டிலும், மூன்றாவது பாட்டில்,

"அழகர் வண்ணம் அழலும்
அழல் வண்ணமே"

எனவும், நான்கு ஐந்தாவது பாடல்களில்

அடிகள் வண்ணம் அழலும்
அழல் வண்ணமே
ஐயர் வண்ணம் அழலும்
அழல் வண்ணமே

என்றும் பாடியுள்ளார். மேலும், தொடர்ந்து வரும் பாடல்களில்,

ஈசர் வண்ணம் எரியும்
எரி வண்ணமே
எந்தை வண்ணம் எரியும்
எரி வண்ணமே

என்பதாகப் பாத்தொகுத்துப் பணிந்து ஞானசம்பந்தர்,

அண்ணல் வண்ணம் அழலும்
அழல் வண்ணமே
ஆர்த்த வண்ணம் அழலும்
அழல் வண்ணமே

என்று, சேர்ந்தார்க்கு இடர் தீர்க்கும் சிவனாம், அந்த செல்வனாம் சிவபெருமான் மீது எத்தனை எத்தனை வண்ணங்களைச் சேர்த்துள்ளார்.

அத்தர், அமுதர், அழகர், அடிகள், ஐயர், ஈசர், எந்தை, அண்ணல் என எட்டு வண்ணங்களுடன் 'ஆர்த்த' வண்ணத்தையும் காட்டியுள்ளார்.

ஞானசம்பந்தப் பெருமானின் ஆர்த்த வண்ணத்தை எண்ணும் போதே, மணிவாசகப் பெருமானின் திருவெம்பாவையில் உள்ள

"ஆர்த்த பிறவித்துயர் கெட, நாம்
ஆர்த்தாடும் தீர்த்தன்"

என்னும் பாட்டு வரிகளும் நினைப்பில் வந்து நிற்கும்.

அப்போது, ஆர்த்த (நம்மைக் கட்டிப் பிணித்திருக்கும்) நிலையும், ஆர்த்தாடும் (மகிழ்ச்சி ஆரவாரம் செய்து) நிலையும் என்பதனை அர்த்தப் பொலிவுகள் நிறைந்த வண்ணங்களாக மிளிர்ந்து ஒளிர்கின்றதை, புரிந்துணர்ந்து பூரித்து மகிழ்ச்சி கொள்ளலாம்.

வண்ணத்திற்குரிய பல்வகைப் பொருளும், பல்நிலை வடிவுகளும் கூடி வந்துள்ள கவினழகுப் பாங்குகள் இவை.

திருநாவுக்கரசரின் சிந்தையையும் வண்ணங்கள் ஆட்கொண்டுவிட்டது போலும்! அப்பன் நீ, அம்மை நீ ஐயனும் நீ அன்புடைய மாமனும் நீ மாமியும் நீ என்றெல்லாம் உறவு கொண்டாடியும் நாவுக்கரசர்

"செம்பவள வண்ணர்
செங்குன்ற வண்ணர்
செவ்வான வண்ணர் என்
சிந்தை யாரே"

என்று தனித்திருத்தாண்டகத்தில் பாடி மகிழ்ந்து, வெள்ளை தாழ் சுண்ண வண்ணம் உடைய சிவபிரானைக் காண்கிறார்.

இத்தகைய இறைவண்ணங்கள் யாவும் இசைமயமான வண்ணங்களாகி இறை பக்தியை ஊட்டி இன்பம் பயந்து அனைவருடைய நெஞ்சங்களிலும் பதிந்து,

"பண்ணுமி யாழ் வண்ணம்
பாடிடச் சிந்து என்றார்"

என்ற யாழ் வண்ணச் சிந்துகளும் நினைவில் வந்து, சேரமானின் பொன்வண்ணத் தந்தாதியின் தடம் பற்றி, சிவப்பற்றை சிந்தையில் ஏற்றி சேரமான் பெருமாளின் சிவநேசத்தை கண்முன்னே கொண்டு வந்து நிறுத்துகிறது.

ஈசன் வண்ணங்களில் மெய்மறந்து, பூரண புராண நாரணன் அறியாக் காரணக் கடவுள், சோதிச் சுடரொளி, ஆதித் தனிப்பொருள், ஏகநாயக, போதநாயக, காலமூன்றையும் கடந்த கடவுள், கழலடிகளையே நனவிலும், கனவிலும் சித்தத்தில் கொண்டிருப்பவர் சேரமான்.

"சேரமான் பெருமாளின் கனவில், பாண்டிநாட்டுச் சித்தராகத் தோன்றி, சோமசுந்தரக் கடவுள், பாணபத்திரனுக்குத் திருமுகப்பாசுரம்-சீட்டுக்கவி அருளிச் செய்துள்ளதையும், சேரமன்னனிடம் பாணனை அனுப்பி உள்ளதையும், அடியவன் பாணனுக்கு உதவுமாறும் தெரிவித்து மறைந்தார்.

மறுநாள், பொழுது புலர்ந்ததுமே, சோமசுந்தரரின், திருமுகப் பாசுரமாம் சீட்டுக்கவி கொடுத்தனுப்பியுள்ள அந்த பாணபத்திரனைக் காண, சேரமான் துடித்தார். உடனேயே பாணனைப் பார்த்துவிட மாட்டோமோ என்று பரவசப்பட்டார்.

சிவபெருமானே, தம்மிடம் அனுப்பியுள்ள சிவபக்தனை தரிசிக்க சேரமன்னர் பெரிதும் ஆவல் முந்திட இருந்தார். காலம் நகர்ந்து கொண்டுதானிருந்தது. ஆனால், சேரமானுக்கு என்னவோ காலம் நகராதது போலவும், மிக மெதுவாக நகர்வது போலவும் தோன்றியது.

"சிவபெருமானே திருமுகம் அருளியிருக்கும்போது, அந்த பாணன் நேராக உடனே அரண்மனை வரவேண்டியது தானே" என்று எண்ணிக்கொண்டார்.

"ஒருவேளை வந்த வழிக் களைப்பாற்றிக் கொள்ள ஊரில் ஏதேனும் ஓரிடத்தில் சற்றே இருந்து விட்டு வருகிறானோ"

"களைப்பாற்றிக் கொண்டதும் எப்படியும் இங்கு தானே வருவான்"

"வழி தெரிந்து விரைவாக அவன் இங்கு வரவேண்டுமே"

இப்படியே பலவாறான எண்ண அலைகளின் வயப்பட்டு, சேரமன்னர் பாணரின் வருகை பற்றியே நினைத்துக் கொண்டிருந்தார்.

"எப்படியோ சிவபெருமானின் பக்தனுக்கு யாரேனும் ஒருவர் வழிகாட்டாமலா இருப்பார்" என்றும் நினைத்துக் கொண்டார். மனம் அப்படியும் இப்படியுமாக அலைந்தது.

பாணன் வரும்வரை காத்திருக்க, சேரமன்னனின் மனம் காத்திருக்கும் நிலையில் இல்லை.

அமைச்சர்களுடன் கலந்து உரையாடினார். காவலர்களை உடனே அனுப்பி, பாணன் எங்கிருந்தாலும் கண்டு வரக்கட்டளை பிறப்பித்தார்.

திருமுகப் பாசுரம் கொண்டு, சேரநாடு வந்துள்ள பாணபத்திரனை, எங்கிருந்தாலும், தேடிக் கொண்டு வருக என்றார். வினாடிப் பொழுதில், பாணனைத் தாம் தேடிச் சென்றல்லவா அழைத்து வர வேண்டும் என அவரது மனம் சொல்லிற்று.

மறுகணமே, "பாணன் இருக்குமிடம் கண்டு உடனே வருக" என்று கட்டளையினைச் சிறிதே மாற்றம் செய்து ஆணையிட்டார்.

அரசரின் ஆணையைச் சிரமேற்கொண்டு கடமையாகக் கருதிய அமைச்சர்கள் அதனை அறிவித்தனர். அறிவிப்புக் கேட்டதுமே ஏவலாளர்களும், காவலாளர்களும் செவியேற்ற கட்டளைச் செய்தியை, சேரமன்னனுக்குச் செய்ய வேண்டிய பெருஞ்சேவகமாக செயல்படுத்தத் தயார் ஆனார்கள்.

நான்கு திசைகளிலும், காவலர்கள் நடையாகச் சிலரும், புரவியில் சிலரும் எனச் சென்றனர்.

மன்னரே சென்று தேடும் மனநிலையில் இருந்ததை அமைச்சர்கள் அறிந்தார்கள். மன்னரின் மனநிலை உணர்ந்த, அந்த நிலைக்கேற்ப பணியாளர்களின் முயற்சிகளைத் தீவிரப்படுத்தினார்.

இந்தச் செய்தியும், அதன் சாரமும் மக்களுக்கும் எட்டியது. சேரநாட்டு மாந்தர், வேந்தர் பிரானின் விழைவு விரைவில் ஈடேற வேண்டிக் கொண்டனர்.

மன்றங்களில், மாடவீதிகளில், கல்விச்சாலைகளில், அறச்சாலைகளில், பயணவிடுதிகளில் எங்கும் காவலர்கள் தங்கள் தேடும் பணியில் முனைந்தனர்.

கோயில்கள், கோயில் பிராகாரங்கள் இறைவன் திருச்சந்நிதிகள் ஆகிய இடங்களில் எல்லாம் பாணன் இருக்கிறானா எனப் பார்த்தனர்.

குளக்கரைகளில், வீதிகள் சேரும் சந்திப்புகளில் தேடினர்.

வீதிகள் தோறும் வந்து பார்த்தனர். வீட்டுத் திண்ணைகளில் உற்றுப் பார்த்தனர். காவலர்களின் கண்கள் திண்ணைகள் தோறும் நுண்மையாகப் பர்வையைச் செலுத்தின.

சேரநாட்டுக் காவலர்கள், திருவஞ்சைக்களத்துத் திருவீதிகளின் பக்கமாக வந்தார்கள். அங்கே ஒரு வீதியில் உள்ள வீட்டுத் திண்ணையின் முன்னே, வீதியை நோக்கயபடியே நின்று கொண்டிருந்த ஒருவனைக் கண்டார்கள். கண்டதும் அவனுடைய பார்வைகளும், அவனது உருவமும் "அவன் தான் பாணபத்திரனாக இருக்கக்கூடும்" என்று ஊர்ஜிதம் செய்தது.

காவலர்களில் மூத்தவன் முன்னே வந்து, அவனை நெருங்கி, பாணபத்திரன் தான் அவன் என்பதை சந்தேகத்திற்கு இடமின்றித் தெளிவாக்கிக் கொண்டான்.

கணநேரத்தில், மன்னனுக்குச் செய்தி பறந்தது. மன்னர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லாமல் இருந்தது. பரிவாரங்கள் சூழ, பாணபத்திரனைக் காண, சேரமான் சற்றும் தாமதம் செய்யாமல், உடனே எழுந்து வேகமாகப் புறப்பட்டு வந்தார், காற்றென வந்தார்.

பாணபத்திரன் நின்று கொண்டிருக்க, அவனுடைய இரு புறங்களிலும் காவலர்கள் சூழ்ந்திருக்க, சேரமான் கண்ட காட்சியில் அவரது அன்பு, வெள்ளமெனப் பெருக்கெடுத்து வார்சடையன் விட்ட கங்கையெனப் பிரவாஹித்தது.

பாணனின் அருகே வந்து நெருங்கினார் மன்னர். தம்முடைய சிரம் மீது கரம் வைத்துக்கொண்டு சேரமான் ஆடினார். பாடினார்; நாடிவந்து பாணனைப் பார்த்து ஆனந்தம் கொண்டார். இதயப் பரவசத்தில் இறைவனின்

கருணையை எண்ணி மண்ணில் வீழ்ந்து, அந்த மகேசனை வணங்கி எழுந்தார். பாணனொடு மன்னரும், அரண்மனைக்கு விரைந்தார்.

மன்னர் இவ்வாறெல்லாம் முகமன் செய்து வரவேற்ற காட்சி பாணபத்திரனையும் பரவசத்தில் ஆழ்த்தியது. உமாபதியான ஓங்காரநாதனின் ஒப்பற்ற திருவருள் தான் என்னே, என்னே என்று அவனுடைய சிந்தை கசிந்துருகியது.

சிவனாரே தமக்குத் திருமுகப்பாசுரம் அருளியுள்ளதை நெஞ்சார நினைத்து, அத்திருமுகப் பாசுரத்தை பாணனிடமிருந்து பெற்றுக்கொண்டார் மன்னர்பிரான்.

பொன் வண்ணத்தந்தாதி பாடிப் போற்றிய புனிதரல்லவா சேரமான்! பொன்எனக் கருதிச் சிவனின் செம்பொருள் என்று உளமார நினைத்து, கண்ணில் ஒற்றிக் கொண்டார். உவகை மேலிட மேலிட, ஆடிக்களித்தார். "கழறிற்றறிவார் நாயனார்" அல்லவா! "கண்டு கொண்டேன் எம்பிரானை" என்று களித்தர்டினார். அறுபத்து மூவரில் ஒருவரல்லவா சேரமான்!! அகமகிழ்ந்து அரன் தந்த அரிய பொக்கிஷமென நினைந்து ஆடினார்.

பட்டாடையிலிருந்து எடுத்து பாணபத்திரன் கொடுத்த அந்த திருமுகப்பாசுரத்தைப் பெற்றுக்கொண்ட சேரமானின் இரு நயனங்கள் மாத்திரம் அதில் தோயவில்லை. சிவமே தவமென்றிருக்கும் சேரமானின் சித்தத்தில் ஆயிரம் நயனங்கள் தோன்றி, பிரகாசித்த வண்ணம் செஞ்சுடர் ஒளி வண்ணமாய், திருமுகப் பாசுரம் திவ்ய ஒளிச் சுடரில் பளிச்சிட்டுப் பளிச்சிட்டுத் தெரிந்தது.

சேரமான் சிந்தை, செழும் சோதி வனப்பாகியது. அதன் காரணமாக, மன்னர் திருமேனி சிவமயமாகி செம்பொன் போல் ஜொலித்தது.

திருமுகப்பாசுரமாகிய சீட்டுக்கவியை மீண்டும் கண்களில் ஒற்றிக்கொண்டவராய், பரவசத்தின் எல்லைக்கோட்டைத் தாண்டியவராய், அத்தனின் அன்பில் புளகாங்கித மெய்தினார்.

சேரமன்னர், சிவபெருமான் அருளிய திருமுகப் பாசுரத்தில் சித்தம் பூரித்துப் படிக்கலானார்.

14
சிந்தையில் பதிந்த திருமுகப்பாசுரத்தில், சேரமானின் சங்கர தரிசனம்

சேரமான், ஆனந்தக் களி நிலையிலிருந்து ஒருவாறு விடுபட்டு சீட்டுக் கவியைப் படிக்கத் தொடங்கினார். தொடங்கியதுமே, அவரது பார்வையில் மூன்றாவது வரி, முனைப்பாக முன்வந்து நின்று, நான்காவது வரியுடன் ஒன்றி, கண்களில் பார்வையை காந்தமென ஆகர்ஷித்திழுத்தது.

"அன்னம் பயில்பொழில் ஆலவாயில்
மன்னிய சிவன்யான் மொழி தருமாற்றம்"

இந்த இருவரிகளைப் படித்ததும், சிவபெருமானே தமக்கு எழுதிய திருமுகம் இது என்ற நினைப்பு மேலோங்கிடவும், பக்தி மேலீடு உந்த உந்த, பெருமிதமும் பக்தி சார்ந்த கர்வமும் பொங்கி, அகவுணர்களின் மீது உலாவி முகத்தில் பிரதிபலித்தது.

சேரமானின் கண்கள் பனித்தன. அடுத்த வரிகளைப் படிக்க மிகுந்த அவா எழுந்தது. ஆனால், சேரமான் அவர்களின் மனம் அடுத்த வரிக்குத் தாவ இடம் தரவில்லை. அந்த இருவரிகளிலேயே சிவநேச ஈர்ப்பு மன்னரைப் பிடித்து வைத்துக் கொண்டது.

சேரமன்னன் திருமுகப்பாசுரத்தைக் கையில் வைத்துக்கொண்டு, மேலே படிக்கவில்லை. என் செய்தான் மன்னன்! என் செய்தான்!

சூடுவன் நெஞ்சிடை வைப்பன், பிரான் தந்தது எனப்பாடுவன்; பன்மலர் தூவிப் பணிந்தேத்துவன்; ஆடுவன்; ஆடி அமரர் பிரான் என்று நாடுவன்; நாடி அவன் நல்லருளில் திளைத்தின்புறுவன்;

சேரமானின் நிலை, பழம்பாட்டு வரிகளுக்கு இசை மீட்டிப் புகழ் கூட்டுகிறதாக அமைந்து உரை மகுடம் சூட்டுகிற நிகழ்வுகளாக இருந்தது.

திருமுகப்பாசுரத்தின் மீது வைத்த கண் எடுக்காமல், கருத்தூன்றி, சித்தத்தை அதன்பால் பதித்தபடியே, சேரமான் பெருமாள் படிக்கலானார்:

"மதிமலி புரிசை மாடக்கூடற்
பதிமிசை நிலவு பால்நிற வரிச்சிறகு
அன்னம் பயில்பொழில் ஆலவாயில்
மன்னிய சிவன் யான் மொழிதரு மாற்றம்

பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்கு
உரிமையின் உரிமையின் உதவி ஒளி திகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக் கீழ்ச்
செருமா வுகைக்கும் சேரலன் காண்க

பண்பால் யாழ்பயில் பாணபத்திரன்
தன்போல் என்பால் அன்பன் தன்பால்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே"

படித்து முடித்ததும், சேரமான் பார்வை பாணபத்திரன் பால் திரும்பியது. அன்புருத்தரித்த இன்பிசைப் பாணன்

அங்கே இருந்த காட்சி, முதல்வன் வழி நிற்கும் மாட்சியாக மன்னனுக்குத் தெரிந்தது.

சந்திரன் அளாவுகிற பெருமதில்களால் சூழப்பெற்ற நான்மாடக்கூடல் பதியில் உள்ள பால் நிகர்த்த வரியுடன் கூடிய சிறகுகள் கொண்ட அன்னப்பறவைகள் தங்கியிருக்கும் சோலைகளால் சூழ்ந்த ஆலவாயில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் விடுத்துள்ள செய்தி. மடல் என்ற சீட்டுக்கவியின் நான்கு வரிகளான முதற்பகுதியை சேரமன்னன் இன்னுமொரு தடவை படித்து இன்புற்றார்.

'சிவன்யான் மொழிதருமாற்றம்' என்ற வார்த்தைகள் சேரமானுக்குத் தம்மை சிவ ஐக்கியப்படுத்தும் வாசகமாகத் தோன்றியது. நேராக, சிவன் நமக்கே முடங்கல் எழுதியுள்ளது கிடைத்தற்கரிய பேறு அது என்று நினைந்து பெருமிதத்தில் சேரமான் மனம், அவரது மனத்திற்குள்ளேயே வலம் வந்து கொண்டிருந்தது.

திருமுகப்பாசுரத்தின் மையப்பகுதியைப் படிக்கும் போது, மெய்யுடன் சேர்ந்திடுமாறு சீட்டுக்கவியை அணைத்துக் கொண்ட பிறகு, படிக்கலானார். பருவகாலங்களில் பரவியிருக்கும் மேகம் போன்று பாவலர்களான இசைவாணர்களுக்கு உரிமைகள் செய்து, ஒளியுடன் கூடிய நிறமுடைய சீர்மிகு சந்திரனையொத்த, குடையின்கீழ் இருந்த வண்ணம் போர்த்திறம் நிறைந்த குதிரையினைச் செலுத்துகிற சேரநரபாலன் காண்பானாக என்பவற்றை இதயமொன்றிப் படிக்கும் போது சேரமான், இறைவன் தம்பால் கொண்டுள்ள "இறங்கி வரும் நிலையை" எண்ணி எண்ணி இறுமாந்தார்! அதே நேரம், நெஞ்சம் நெகிழ்ந்தார்.

அதன் நிறைவுப் பகுதியான வரிகளைப் படிக்கும் போது நெஞ்சையதில் பறி கொடுத்தார்.

பண்களின் பாகுபாடு அறிந்த யாழிசை வல்லவனான பாணபத்திரன், இந்தத் திருமுகமாகிய சீட்டுக்கவியுடன் தங்களிடம் காண்பது கருதி வருகின்றான். அவன் உம்மைப் போலவே என்னிடம் அன்பு பூண்டவன். ஆகையால், மாண்பொருள் வழங்கி அவனை உடனே இங்கு வரவிடுவீராக என்பவற்றை சேரமான் படித்து, கண்களில் ஒற்றிக் கொண்டு நிறைவு செய்கின்ற சமயத்தில் மன்னரின் நயனங்கள் மளமளவென்று ஆனந்த பாஷ்பம் பொழிந்தன.

'தன்போல் என்பால் அன்பன் தன்பால்!' என்ற இடத்தில் நிறுத்தி, நிதானமாக சேரமான் பெருமாள் படித்துப் படித்து அதிலே லயித்தார். அந்த லயிப்பில் மிதந்தபடியே மீண்டும் ஒருமுறை 'தன்பால் என்பால் அன்பன் தன்பால்' என்பதைத் தனித்தனி வார்த்தைகளாக நீட்டி இசைத்து, நெஞ்சுக்குள் நிரந்தரப்படுத்திக் கொள்வது போல் பாடியபடியே படித்தார்.

பாணபத்திரன், சிவன்பால் கொண்ட அயரா அன்புக்கு இறையருளிச் செயலே சிவபெருமான் எழுதிய இந்தத் திருமுகப்பாசுரம் என்னும் சீட்டுக்கவி.

ஆம்; சீட்டுக்கவி என்பது செந்தமிழ் வாழ்வுடன் ஒன்றியது. பைந்தமிழ்ப் பாட்டுவானில் அந்தாதி, அகவற்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, விருத்தப்பா, வெண்பா, உலா, கலம்பகம், கோவை, குறவஞ்சி, சதகம், சாற்றுகவி, தூது, பரணி, பள்ளு, பிள்ளைத்தமிழ், மடல், மாலை எனப் பல வகைகளில் பாட்டு இலக்கியம் பரந்த மணம் வீசிக் கொண்டிருக்கிறது.

வேண்டுகோள், சிபாரிசு அல்லது உதவிபுரிதல், கோரிக்கை ஏதேனும் ஒன்றை நிறைவேற்றுமாறு வேண்டி, பொறுப்பில் (தகுதியில்) உள்ளவர்க்கு எழுதும் முடங்கலே சீட்டுக்கவி. அது செய்யுள் வடிவில் அமைந்து இருக்கும்; கவிதையாக மிளிர்வது அது.

முடங்கல் என்றழைப்பது வழக்கம். முடங்கல் என்றால் ஓலைச்சுருள், கடிதம் என்று பொருளாகும். பண்டைய காலத்தில், ஓலைச் சுவடிகளில் எழுதுவது தான் வழக்கமாக இருந்தது. அதனால், முடங்கல் என்பதான கடிதத்தையும், ஓலைச் சுவடியில் எழுதி, சுருள்போல் சுருட்டி அனுப்பி வந்தார்கள்.

ஓலைச் சுருளில் அவ்வாறு அமைந்ததனால், அதனை ஓலைத்தூக்கு என்றும் அழைக்கலாயினர். வள்ளல்களுக்கு, புலவர்கள் ஓலையில் பொறித்து எழுதுவது ஓலைத்தூக்கு என்றாகி, பின்னாளில் சீட்டுக்கவி என்ற திருநாமம் பெற்று விளங்கலாயிற்று.

காலவளர்ச்சியில், காகிதங்கள் உருவான நிலையில், காகிதத்தில் எழுதுவது, கடிதம் என்றாயிற்றென்பர். ஆக, சீட்டுக்கவி, காகிதத்திலும் எழுதப்பட்டது.

பரிசில் வேண்டி, புவியாளும் வேந்தருக்கு, அவர்களைப் புகழ்ந்து பாடியும், வாழ்த்தியும், எழுதியது சீட்டுக்கவியாக மலர்ந்துள்ளது. இங்கே, சிவபெருமான் தன் பக்தனுக்குப் பொருள் தருமாறு சேரமானுக்கு எழுதியுள்ள கோரிக்கை முடங்கலென்னும் ஓலைத்தூக்கு தான், சீட்டுக்கவியாக சேரமான் கரங்களில் காட்சி தந்து கொண்டிருந்தது. இறைவன் அருளியதால் திருமுகப்பாசுரம் என்று சிறப்பித்து அழைக்கப்படுகிறது.

பொதுவாக, பதினான்கு சீர்களில் விருத்தமாக இதனை இயற்றுவார்கள். நான்கு பகுதிகளாகவோ, மூன்று பகுதிகளாகவோ அமைத்து ஆக்குவது மரபு.

முதற்பகுதி எழுதுவோரின் அறிமுகம், இன்னார் எழுதுகிறார் என்கிற விளக்கம் உடையதாக அமையும். இரண்டாவது பகுதி எழுதப்படுவோரின் (பெறுபவரின்) சிறப்பினை ஏற்றமுடன் விவரித்துக் கூறுவதாக அமையும்.

மூன்றாம் பகுதியில் கோரிக்கை அல்லது வேண்டுகோள் அல்லது உதவிபுரிதல் என்னும் சீட்டுக்கவியின் கருப்பொருள் இடம்பெறும். வேண்டுகோளை நிறைவேற்ற வேண்டுவதைச் சொல்வதும் மூன்றாம் பகுதியில் இடம் பெற்று அமையும். நான்காவது பகுதி சீட்டுக் கவியைப் பெறுபவருக்கு வாழ்த்தும் பல்லாண்டும் கூறி நிறைவாகும், சீட்டுக்கவிக்குரிய இலட்சணங்கள் இவை என்று மொழிவார்கள்.

சிவபெருமான் அருளிய சீட்டுக்கவி மூன்று பகுதிகள் கொண்டவையே. வாழ்த்துக்கூறும் நான்காம் பகுதி இல்லாத போதும், தன்பால் என்பால் அன்பன் தன்பால் என்ற வார்த்தைகளால் எல்லாம் அடங்கி வருகிற பான்மை, நுண்மான் நுழை புலத்துடன் நோக்குவார்க்கு எளிதாகப் புலப்பட்டு, சிந்தையிற் ஏற்றிக்கொள்கிற, தெளிவினை அந்த வரி எடுத்தியம்பும்.

சேரமான் பெருமாள் நாயனார் செந்தமிழிலும், ஸம்ஸ்கிருதத்திலும் பண்டிதராவார். புலமை சான்ற பேரறிவாளர், சேரமான் பெருமாள். அதனாற்றான் சீட்டுக்கவியில் உள்ள வரிகளை நின்றும் நிதானித்தும், நீட்டியும், நிலைப்பட்டும், படித்தும், பாடியும் அளவற்ற ஆனந்தத்தில் திளைத்தார்.

சிவபெருமான் தாமே எழுதிய சீட்டுக்கவியை சிவநேசனாகிய பாணன் மூலம் தம்மிடம் சேர்ப்பித்துள்ளதை நினைத்து நினைத்து உளம் நெகிழ்ந்தார் சேரமான். சிவபெருமானே தம்மருகே வந்துவிட்டதாக அவருக்கு ஓர் உணர்வு.

செந்தாமரை சூரிய உதயத்தை எதிர்பார்த்து இருக்கும்; ஆம்பல் சந்திரோதயத்தை எதிர்பார்த்து இருக்கும். வண்டு பூ விரியும் சமயத்தை எதிர்பார்த்திருக்கும். சிவனடியார்கள் தம்முடைய சிந்தையில், தியானத்தில் சிவபெருமான் வருகையை எதிர்பார்த்திருப்பார்கள்.

பாணபத்திரன் மூலம் திருமுகம் வந்தது என்றதும் சேரமானுக்கு சிவபெருமானின் வருகையாகவே அது தோன்றியது.

"பூவலரப் பார்க்கும் பொறிவண்டரன்பர்
தேவரவைப் பார்ப்பர் தெளிந்து"

என்பதாகவுள்ள பாட்டுவரிகளில், 'வரவு' என்பது, தே என்றால் தெய்வம், அதாவது சிவன் என்பது பொருள்.

பசுவின் பின்னே அதன் கன்று ஓடுகிறது. யாரேனும் ஆணையிட்டா அந்த ஆவின் கன்று அவ்வாறு ஓடுகிறது. யாரும் ஆணையிடவில்லை. என் பின்னே வா என்று பசு கன்றுக்குக் கட்டளையிட்டுள்ளதா. அப்படியும் இல்லை. இருந்தாலும் பசுவின் பின்னே தம்மிச்சையாக, தானே பின்தொடர்கிறது இளங்கன்று.

தான் பெற்ற இளங்கன்றை விட்டு நீங்காமல், அதன் கூடவே ஓடுகிற பசுவைப் போல் சிவனருளால் சிவனே சிவனே சிவனே என்றால் சிவபெருமான் உமையாளுடன் அடியார் பின் தொடர்ந்திடுவான் என்பது சான்றோர் சாற்றியுள்ள வாசகம்.

"சிவனே சிவனே சிவனே என்பார்கள்
சிவன் உமையாளோடும் திரிவன் சிவனருளால்
பெற்ற இளங்கன்றைப் போல் பிரியாமல் பின்னோடிச்
சுற்று பசுபோல் தொடர்ந்து"

என்பது நீதி சாஸ்திரத்தைத் தழுவி எழுந்த நீதிவெண்பாப் பாட்டு. கொன்றைவேந்தன், உலகநீதி, நீதிவெண்பா எல்லாம் பைந்தமிழ் பாட்டுக் கருவூலங்கள்.

நீதிகள் அறிந்தவரும் அந்நெறிகளின் படி வாழ்பவருமான சேரமான் சிவனே சிவனே சிவனே என்று சதாகாலமும் தியானிப்பவர். அதையே வாழும் நெறியாகக் கொண்டவர் சேரமான். அத்தகையவர் பின்னே சிவபெருமான் வருகை தராமலும் இருப்பாரோ!

'சிவன் உமையாளோடும் திரிவன்' என்றபடி நிகழ்ந்ததாகவே சேரமான் உளமார எண்ணி, அந்தச் சீட்டுக்கவியில் தோய்ந்து படித்து பேரின்பம் கொண்டார்.

'சிவனருளால்' என்ற நீதிவெண்பாவில் உள்ள சொல்லை நினைத்தாலும் அவன் அருளால் தான் அனைத்தும் நடக்கும் என்பது தெளிவாகிறது. அந்தத் தெளிவிற்கு விளக்கம் தருவது போல்,

"சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளால் அவன் தாள் வணங்கி"

என்ற மணிவாசகப் பெருமானின் உளமுருக்கும் திருவாசக வரிகளுக்கேற்ப சேரமான் சிந்தையுள் நின்றவர் சிவபெருமான். அதனால் அவனருளால் என்பதாகிய 'சிவனருளால்' என்னும் நீதிவெண்பா வாக்கின்படி, சேரமானிடம் சிவபெருமான் வருகை தந்து, அவருடனேயே இளங்கன்று பசுவைத் தொடர்ந்து திரிவதைப் போன்றே அமைந்திருந்தது.

கயிலைநாதன் கழலினை நினைத்தார்க்கு அவன் கண்ணார வந்து நிற்பான் என்றாற் போன்று சேரமான் பாணனையும் சீட்டுக்கவியையும் சிவாம்சமாகக் கண்டு இன்புற்றார்.

கண் சுமந்த நெற்றிப்பிரான், கலிமதுரை மண் சுமந்து, கூலித்தொண்டராகி, அக்கோவின் மொத்துண்டு, புண் சுமந்த பொன்மேனியன் திருஉருவம் திருமுகப் பாசுரத்தின் ஒவ்வொரு எழுத்துக்களிலும் பதிந்திருப்பதாக, சேரமானுக்கு தோன்றியது.

"இவன் செய்தி எல்லாம் என் செய்தி என்றும் இவனுக்குச் செய்தது எனக்குச் செய்ததே" என்று பவமகல சிவன் நின்று ஏற்பான். சிவபாதங்களை நினைப்பவர்க்கு சிவனே அனைத்தும் செய்வான் என்பர் சான்றோர். சான்றோரில் சிறந்த சேரமானும் அஃதுணர்ந்து தெளிந்தார்.

அகத்தும், புறத்தும் இறைவனுடன் உயிர் ஒன்றாகி, ஒழுகினால் பாசநீக்கத்தால் பெறுவதே சிவப்பேறு என்பார்கள். அந்த சிவப்பேறு தான், திருவடிப்பேறு ஆகும். அந்தத் திருவடிப்பேறே நிட்டை (நிஷ்டை, நியமம்) எனப்படும்.

சிவபிரானிடம் ஏகனாகி நின்றால் தான், ஆணவமென்னும் மலம் நீங்கும். திருவடியாகிய சிவானந்தம் உண்டாகும்.

உயிர் என்கிற சீவனும் சிவன் என்கிற பரமனும் ஒன்று என்று காணவேண்டும். அதுவும் அவன் அருளாலேயே ஆகும் செயலாகும். சீவனை ஒட்டிக்கொண்டிருக்கிற அதன்மேலுள்ள அந்த ஆணவக்

குறியை, (சுழியை) அகற்றிவிட்டால், சீவன் சிவன் ஆகிவிடும்.

சிவனிடம் ஏகனாகி நின்றுவிட்டால் ஆணவமலம் நீங்கும். பாசம் நீக்குமுறைகளைச் சைவசித்தாந்தம் தெளிவுபடச் சொல்லும். பசு, பதி, பாசம் என்றுவிளக்கி இறைநிலைப்பேறு பெறுவதைப் படிப்படியாக, செந்தமிழ்நாட்டுச் சீர்மிகுந்த சைவம் பாடல்களின் வழியே மொழிந்திருக்கிறது.

களிம்பறுத்தான் என்ற களிம்புச் சொல் சிறப்பாகச் சொல்லுமிடத்து, ஆணவத்துடன், பொதுவான மாயை, கன்மங்களையும் குறிக்கும் என்பார்கள். வெளிப்புறத்தே பிராரத்தம் வந்து தாக்காமல் இறைபணியில் நிற்கவேண்டும். தனக்கென்று ஏதுமின்றிச் செயலுமில்லை. அதனால் அவனுடன் உயிர் கலந்தொன்றி நிற்கையில், அவன் அருளுடன் உயிரின் அறிவு இச்சை (ஆசை) செயல் மூன்றும் ஒன்றிக்கலந்து செயல்படும். இவ்வாறு பெறுகிற பயன்தான் பாச நீக்கம், சிவப்பேறு என்பார்கள். இவையெல்லாம் நிலைகள் தான்.

பாசம் நீக்குதலை, களிம்பறுத்தல் என்பார்கள். செம்பில் சேர்ந்த களிம்பு செம்போடு ஒட்டிக்கொண்டே தானிருக்கும் அல்லவா. களிப்பறுத்தல் என்றே பாடி உள்ளார்கள்.

> உண்ணின்று உருக்கி
> ஒப்பிலா ஆனந்தக்
> கண்ணின்று காட்டிக்
> களிம்பறுத்தான்

என்று திருமூலர் உபதேசம் செய்துள்ளதை ஊன்றிக் காணுங்கால் உண்மைகள் ஐயம்திரிபுற விளங்கும்.

ஒப்பில்லா ஆனந்தம் என்பது பூரணமான நிலையில் விசாரமற்று தூங்குதல் என்பதாகும்.

"“கண்ணின்று காட்டி” என்ற தனது அத்துவிதக் கலப்பினை எடுத்து இயம்புகிற இடமாகி களிம்பறுத்தானே என்று முடிகிறது. கண், காட்சி, காணுதல் ஆகிய மூன்றும் ஒன்றுடன் ஒன்று ஒட்டியது; பிரிக்க் இயலாதது.

கண்ணினால் காட்சியைக் காண உயிர்தான் உதவ வேண்டும். உயிருள்ள கண்களாலேயே உருவத்தைக் காண முடியும். “உயிர் காட்டக் காணும் இயல்புடைய கண்'' என்பார்கள். கண்ணுடன் உயிர் கலந்து காட்சியைக் காட்டி, உயிருடன் கண் கலந்து காட்சியில் மகிழ்ந்து வருகிற தன்மை போல் உயிருக்குப் பொருளை அறியும்படி பரமன் அவ்வுயிரோடு கலந்து நின்று அறிவித்தும், அறிந்தும் வருபவன்.

அதனால்தான், கலந்து நிற்கிற அத்தகைத்த அத்துவித (அத்வைத) நிலையை நெஞ்சிற்கொண்டு, சித்தத்துடன் அன்பு செய்தல் வேண்டும். அந்த அயரா அன்பினால் பரமன் திருவடி என்னும் சிவானந்த அநுபூதியை அடையலாம் என்பார்கள்.

கண்ணொளி, உயிரின் (ஆன்ம) அறிவு, இரண்டும் வெவ்வேறு. இரண்டும் பிரிக்க முடியாமல் ஒரு தன்மைப் படுதலில் பார்வை பிறக்கிறது. பிரபஞ்சம் தெரிகிறது. இருபொருள்கள் ஒன்றாகின்றன.

தீ (அக்னி) என்பது ஒரு பொருள். அதாவது அக்னி பொருளால் ஒன்று. ஆனாலும் அக்னி எனவும், சூடு எனவும் இரு தன்மைப் பட்டிருப்பவை. அதே நேரம் ஒன்றிக் கலந்திருப்பனவையுமாகும்.

அதையே, ஒரு பொருள் குண என்பர். மற்றொன்று குணி. இரண்டும் பிரிக்கமுடியாத நிலைப்பட்டு அத்தன்மையான இரண்டு விதமான ஒருமையிலும் குண, குணியின் சம்பந்தம் 'தாதான்மியம்' என்று சொல்லப்படும்.

முற்றறிவும் (ஞானம்) சிவனும், (பரமாத்மா) சிற்றறிவும் (அஞ்ஞானம்) உயிரும் (ஜீவாத்மா) வேறுவேறு அறிவும் தொழிலுடைய பேதப்பொருள்கள் என்றாலும், பிரித்திட இயலாத கலந்து நிற்றலால், பேதங்களுடைய இரண்டு பொருள்களும், தம்முள் அபேதமாதற்குரிய கலந்த விசேஷம் தான் சுத்த அத்துவிதம் (அத்வைதம்) என்பதாக விரித்தும் விளக்கியும் சுருக்கியும் சூக்குமமாகவும் சொல்வார்கள்.

அந்த அத்வைத நிலை கண்டால் அகிலம் எவ்வாறு அமையும். எதிலும், எங்கும், எப்பொழுதும் பேதங்களற்ற ஒருமை நிலைப்பட்ட புதியதோர் உலகும், அதனுள் உறைந்திடும் உலகோடும் வாழ்வாங்கு வாழ்வர் அன்றோ!

அத்தன்மைத்தாய அத்வைதம் நிறுவி புதியதோர் உலகம் செய்திடவந்த சிவபெருமான், காலடியில் சங்கரராக அவதரித்தார். நிர்க்குணனும், ஸர்வஞ்ஞன் ஆகியவனும் ஸர்வ வியாபியாகியவனும் ஸர்வேஸ்வரர் சிவபிரானே, சேரநாட்டு மண்ணில் வந்து உதித்தார். சங்கர பகவத் பாதர் என்றே அழைக்கப்படுகிறார்.

சங்கரர் என்றதுமே அத்வைதம் பற்றிய எண்ண அலைகள் நெஞ்சில் பரவும். அதுவே அத்துவிதம் என்று மொழியப்படுகிறது.

அத்துவிதம் என்கிற வார்த்தைக்கு இரண்டு இல்லை ஒன்றே என்று பொருள் கூறுவர். அத்வீதியாய

(ந த்வீதிதாய என்பதில் 'ந்' கரமெய் நீங்கிட) இன்மை, அன்மை மறுதலை எனப்படும் மூவகைப்பொருளை உள்ளடக்கியது. நகரமும் அகரமும் ஒருபொருள் தருபவையே.

ஏகம் என்பதுண்டு. ஒன்று பிரம்மம் உளதென்பர் என்று ஒரு வாசகம் இருக்கிறது.

இறைவனும் (பசு) இந்த உயிரும் (பதி) வெவ்வேறானவை. மயக்கங்களை நெஞ்சில் உருவாக்கும் தத்துவம் இது. ஒன்று எனக் கருதி மயங்கி நான் பிரம்மம், அஹம் ப்ரஹம்மம் என்று மொழியாதிருக்கவே, யஜுர் வேதம் மிகத் தெளிவுபட 'அஹம் ப்ரஹ்மாஸ்மி' என்ற மகாவாக்கியத்தை வழங்கியிருக்கிறது.

சாமவேதம் சிவப்பிரானுக்கு நெருக்கமானது. தத்துவம் என்று சொல்லாமல் தத்வமஸி என்று சொல்வதையும், பரக்ஞானம் ப்ரஹம்மம் என்று ருக்வேதம் பகர்வதையும், அயமாத்மா ப்ரஹம்மம் என்று அதர்வண வேதம் கூறுவதையும் மஹாவாக்கியங்கள் என்று நான்கு மறைகளும் செப்புகின்றன.

இந்த நான்கு மறைத் தீர்ப்பும் "சாந்தம் சிவம் அத்வைம் சதுர்த்தம்" என்கிற மாண்டூக்ய உபநிடதம் மூலமும் தெளிவாகும்.

அத்வைதம் என்பதானது ஒரு நிலை. அதுபற்றியே, ஒரு மகாகவி 'அத்வைத நிலைகண்டால்' என்றான்.

இறைவன் உயிர்களுடன் 'அவையேதானாய்' (பேதாபேதமாய்) இருக்கும் நிலையை அத்துவிதம் என்பதற்கு உண்மையான பொருளாகக் கொள்வர். வேதங்களில் மொழிந்துள்ளது போன்று, 'ஏகம்' பற்றியும் 'த்விதீயாய' பற்றியும் ஆழ்ந்து உணர்ந்து அறியும் போது

மயக்கங்களற்ற தெளிவுகள் பிறக்கும். பதிப்பொருளின் பான்மை பளிச்சிடும்.

தெளிவார்ந்த தத்துவமான சைவமும் அதன் பெருமையும் மிகத் தொன்மையானது. அநாதி சைவர், ஆதி சைவர், மஹான சைவர், அநுசைவர், அவாந்தர சைவர், பிரவரசைவர், அந்நிய சைவர் என ஏழு வகையாகச் சொல்வார்கள்.

அநாதி சைவர் என்பவரே சிவபெருமான். சதாசிவமூர்த்தியாலே தீட்சை பெற்றவர்கள் ஆதிசைவர்களாவார்கள். பஞ்சமுக தீட்சை பெற்ற முனிவர்கள் அவர்கள்.

அத்திரி என்பவர் ஒரு ஆதிசைவர். வேத மந்திரங்களின் த்ரஷ்டாவாக (செய்தவராக) விளங்கிய மகான் அவர்.

படைப்புக்கு இறையவனான பிரம்ம தேவனின் மகன் மரீசியின் புதல்வர். காசியபரும் ஆதி சைவர் தான். விசார வித்தகரான இவர் உலகில் பல்லுயிர் தோன்றக் காரணமானவர்.

தசரத குமாரனான ஸ்ரீராமருக்கு அறிவூட்டி ஆசார்யராகத் திகழ்ந்த விஸ்வாமித்திரர் என்கிற கௌசிகரும் ஒரு ஆதி சைவரே. நவீனச் சட்டங்கள் நல்லாட்சி பற்றி எழுதியுள்ள கௌதமர் என்பவரும் ஒரு ஆதிசைவர் தான். குடியரசுச் சிந்தனைகள் ஸ்மிருதியில் யாத்த பாரத்வாஜர் ஆதிசைவரே. வேதியர்கள், முனிவர்களான இந்த ஐந்து மகரிஷிகளும் ஆதி சைவர்கள்.

அநாதி சைவர் எனப்படுகிற சிவபெருமானின் தீட்சை பெற்று ஆதிசைவர்களான ரிஷிமகான்களைத் தொடர்ந்து சிவபெருமானே சேரநாட்டில் வந்து அவதரித்தார்.

செந்தமிழ் கோலோச்சிய சேரநாட்டில் குலசேகரவர்மனைத் (குலசேகர ஆழ்வாரை) தொடர்ந்து பட்டத்திற்கு வந்தவர் ராஜசிம்ம வர்மன். இருவரும் மன்னர்களாயினும் செந்தமிழிலும் ஸம்ஸ்கிருதத்திலும் வல்லவர்கள் ஆவார்கள்.

ராஜசிம்ம வர்மனிடம் சங்கரர் வந்தபொழுது காவியச் சுவடுகளை மன்னர் படிக்க, சங்கரரே கேட்டு மகிழ்ந்தாராம்.

அனாதி சைவரான சிவபெருமான் ஆதி சங்கரராகத் தோன்றி சேரநாட்டு மன்னனுக்கு திருக்காட்சி கொடுத்திருக்கிறார்.

ஆம்;

சங்கரரிடம் தாம் இயற்றிய மூன்று ஸம்ஸ்கிருத நாடகக் காவியங்களை பணிவுடன் அளித்து படித்துக் காட்டி, பின்னர் அவை அழிந்து போன கட்டத்தில், அந்நாடகக்காவியங்களை சங்கரரே, தம்முடைய நினைவாற்றலிலிருந்து (ஞாபக சக்தியிலிருந்து) மீண்டும் சொல்லக் கேட்ட மன்னன், இந்த ராஜ சிம்மவர்மன். (மாதவிய சங்கர விஜயம் ஆதாரம்)

சங்கரரை தரிசித்தது மட்டுமின்றி, சங்கரரின் சிந்தைவழி தாம் இயற்றிய நாடகக் காவியங்களை மீண்டும் கேட்கிற பேறு பெற்ற சேரமன்னன் ராஜசிம்மன், சிவநேசச் செல்வராகத் திகழும் சேரமான் நாயனாராக இருக்கக் கூடும் எனக் கருத இடமுண்டு. (இந்த சரித்திக்

குறிப்பை வரலாற்று ஆய்வாளர்கள் மேலும் கண்டு தெளிய வேண்டும்)

ஆதிசைவரை, ஆதி சங்கரரைக் கண்ட பேறு சேரமானுக்குக் கிடைத்தது. சேரமான் பெருமாள் நாயனாருக்கு எத்தனையோ சிறப்புக்கள் உண்டு. அன்பின் செயலாகவே சங்கரரும் சேரநாடு வந்து ராஜசிம்மவர்மரைக் கண்டார் போலும். இந்தக் குறிப்பையும், கருத்திற் கொள்கிற போது, சேரமானின் சிவபக்தியும், சிவனுறவும், சிவனருளும் மேலும் கூடுகிறது.

சேரமன்னர், சீட்டுக்கவியில் முழுமையுமாகத் தோய்ந்து, "பாணபத்திரன் தன்போல் என்பால் அன்பன் தன்பால்" என்ற வரிகளில் தன்வயப்பட்டும், தத்துவச் சிந்தனைகளில் ஆழ்ந்து மிகுந்து, பின் அதனின்று ஒருவாறு விடுபட்டு, சீட்டுக்கவியை பொற்பீடத்தில் வைத்தார்.

பொற்பீடம் முன்னைவிடப் பன்மடங்கு பொலிந்து மின்னியது.

'ஆலவாயில் மன்னிய சிவன்' ஆணைப்படி 'மாண்பொருள் கொடுத்து' பாணபத்திரனுக்கு எல்லாச் சிறப்புக்களும் செய்யும் வைபவத்திற்கு சேரமான் தயாரானார். சிந்தையில் பதிந்துவிட்ட சீட்டுக்கவி சேரமானுக்கு சங்கர தரிசனமாகவே பட்டது.

அமைச்சர்களும், நூல்வாணர்களும், சாத்திரப் பண்டிதர்களும், செந்தமிழ்ப் புலவோர்களும், இசைவாணர்களும், மற்றுமுள அரசவைப் பிரதானிகளும், காவலர்களும், ஏவலர்களும், ஒருவரைவிட ஒருவர் அதிக ஆர்வம் பொங்கிட, பணிகளில் ஈடுபட்டனர்.

அனைத்து ஏற்பாடுகளையும் திட்டமிட்டு, அதற்குரிய பணிகளில், அதற்கு என்று தனித்தனித் திறமை உடையவர்களைப் பொறுப்பாக்கி, கவனிக்கச்செய்து, செவ்வையான முறையில் நடைமுறைப் படுத்தியிருந்தார்கள். ஒருவர் பணியில் மற்றொருவர் தலையீடு செய்யாமலும், ஆனால் துறைதோறும் பணியில் உள்ளோர் ஒருங்கிணைப்பு முறைமையிலும் வைபவக் கோலம் சீர்மை பெறத் துவங்கியது.

கொடுத்த பணிகளின் தன்மை கருதாது, எல்லோரும் பாங்குடன் முனைந்து தங்கள் ஒவ்வொருவரையும் அதில் இணைத்துக் கொண்டு இன்பம் கண்டார்கள்.

அரண்மனையும் அரசவையும் பூரணமாக புத்தெழிலும், புதுப்பொலிவும் பூண்டு மின்னிக் கொண்டிருந்த கோலம், சேரமன்னனுக்கு எல்லா வகையிலும் மகிழ்ச்சியைத் தந்து கொண்டிருந்தது.

15

பாணனுக்கு மாண்பொருள் வழங்கி சேரமான் சிறப்புச் செய்தல்

பொற்பீடத்தில் திருமுகப்பாசுரத்தை வைத்த சேரமான், அந்த பொற்பீடத்தை அணிபெறச் செய்தார். யானை ஒன்றை அழைத்து வருமாறு ஆணையிட்டார்.

ராஜ அலங்காரங்களுடன் அற்புதமாக யானை அங்கே வந்து நின்றது. அரசுவா; ஆம், அதுவே பட்டத்து யானை.

அகல்விழி உமையாள் ஆசை மைந்தனாம், அங்குச பாசமும் கொம்பும் தரித்த ஆதிமூலம்; ஆம், அந்த சக்திக்குமாரன், ஆரண முகத்தன்; சந்திர மௌலித் தலைவன் புதல்வன்; சங்கரன் மகன் அந்த யானைமுகத்தான், வெற்றி தரும் சுடர் விநாயகத்தேவன்.

அந்தக் கணநாதன், தெய்வங்களின் அண்ணன் (பூர்வஜன்), ஜ்யேஷ்ட ராஜன் என்றும் வேதம் போற்றும். கஜமுகன் என்றாலே கம்பீரம் தோன்றும். அந்த கஜமுகனே இங்கு வந்தனனோ, என என்னும் வண்ணம் அந்த யானையைப் பலரும் பார்த்தார்கள்.

தெய்வீகம் இழையோட,கம்பீரமாக துதிக்கையை ஆட்டிக்கொண்டே யானை அங்கே வந்து நின்றது.

யானையின் கழுத்தில் புரசை பீதமாக மின்னிக் கொண்டிருந்தது.

திருமுகப்பாசுரம் உள்ள பொற்பீடத்தை சேரமன்னர், யானை மீது வைத்திடும் பொறுப்பை முக்கியப் பிரதானி ஒருவரிடம் பணித்தார்.

பாணபத்திரனை யானை மீதுள்ள பொன் அம்பாரியில், முன்னே அமரச் செய்தார், மன்னர் யானைமீது பாணனுக்குப் பின்னமர்ந்து, இரட்டைக் கவரி வீசினார்.

அடியாரை முன்னிறுத்தி, அரசர் பின்னிருந்தார்.

யானையின் துதிக்கையில் மங்களச் சின்னமாக 'மௌக்திகம்' பிரகாசித்துக் கொண்டிருந்தது. முன்னும் பின்னுமாக சிற்றசைவுகளுடன் துதிக்கை ஆடுகிற போது அந்த மௌக்திகத்தின் ஜொலிப்பு பன்மடங்காகி, அதனின் ஒளிக்கீற்றுகள் நாலா பக்கங்களிலும் சிதறிப் பரவின. துதிக்கையின் சிந்தூர வண்ணம் தேசுடன் ஒளிர்ந்தது.

பாதங்களை சற்றே தூக்கியவாறு, கால்களை, மெல்ல மெல்ல நகர்த்தி யானை நகர்ந்த நடை, சேரமன்னருக்குக் கட்டியம் கூறுவதாக இருந்தது.

யானையின் துதிக்கை அணியாக மௌக்திகத்திற்கு சற்று மேலே திருநீறு போன்று மூன்று பொன்வரிகள் சிவசொரூபமாகக் காட்சியளித்தது.

வகைவகையான வாத்தியக் கருவிகள் முழங்கிட, அரசவையின் பிரதானிகள், புலவர்கள், பெருமக்கள், குடிமக்கள் எனத் தொடர்ந்து வர, ஊர்வலம், நகர்வலமாக வந்தது. ஊரவர் யாவரும் வீதிகளின் இருபுறமும் பாங்குடன் நின்று பார்த்து மகிழ்ந்தனர்.

பின்னின்று பார்ப்பவர்களுக்கு முன்னிருப்பவர்கள் சற்றே இடமளித்தும் அவர்களும் பார்த்து மகிழுமாறு உதவினர். பெரியவர்கள் சிறார்களை தங்களின் தோள்களின் மீது அமர்த்திக் கொண்டும் நின்றனர். தோள்களின் மீதிருந்த சிறார்கள், வாகனசவாரி செய்யும் மகிழ்ச்சியுடன் ஊர்வலக் காட்சியை இன்பமாகக் கண்டு களித்தனர். பெரியவர்கள் ஊர்வலத்தில் மனமொன்றிப் பார்த்துக் கொண்டிருந்ததால் தோளின் மீது சுமை இருப்பதாகவே அவர்களுக்குத் தெரியவில்லை.

சிவபக்தர்களான அம்மக்களிடம் சிரத்தை மிகுந்திருந்ததால், அவர்களுக்குச் சிரமம் என்பதே மனத்தில் சிறிதளவும் படவில்லை.

சிரத்தை என்பது தான் பெரிய செல்வம் ஆகும். சுருதியொன்றில், சிரத்தையே தனம் என்று பேசப்படுகிறது. சிரத்தை இருக்கிறவனுக்கு சம்சயம் அதாவது சந்தேகம் இல்லை. சிரத்தை என்பதான மெய்ப்பாடான ஈடுபாடு செலுத்துவது சேரநாட்டு மாந்தர்களின் இயல்புடன் ஒன்றியது.

சேரமான் மன்னரைப் போன்றே மாந்தர்களும் செந்தமிழ், ஸம்ஸ்கிருதத்தில் தேர்ந்தவர்களாவர். மன்னர்பிரானின் சிரத்தையைப் பற்றி சொல்லவே வேண்டாம். எதிலும், எப்பொழுதும் சிரத்தையோடு பணிகளாற்றும் செம்மல் சேரமான் பெருமாள் நாயனார்.

சிவபக்தியில் தோய்ந்த பாணபத்திரனின் 'அயராத அன்பு' தான் சிரத்தை. சிரத்தை மிகவும் அவசியமானது என்பதை சாஸ்திரம் சொல்லிக்கொண்டே இருக்கிறது. சிறியதொரு விதையிலிருந்தே மிகப்பெரிய ஆலவிருக்ஷம் வளர்ந்தோங்கியிருக்கிறது என்று சொல்வதைக் கேட்டதும், இதிலிருந்து எவ்வாறு இந்த விருக்ஷம்

உண்டாக முடியும் என்பதான ஐயம் சிறிதுமின்றி சிரத்தையுடன் கேட்க வேண்டும்.

இந்த விஷயத்தை சாந்தோக்ய உபநிக்ஷதம் சொல்கிறது. மாத்யந்தினச்ருதியில், "ச்ரத்தா வித்தோ பூத்வா, ஆத்மன்யேவ ஆத்மானம் பச்யதி" என்று ஒருவாக்கியம்.

"யஸ்யஸ்யாதத்தா நவிசிகித்ஸாஸ்தி" என்று சிரத்தை உள்ளவனுக்கே ஐயமின்றி ஸ்வரூபம் பிரகாசிக்கும் என்பதான சாந்தோக்ய ச்ருதி வாசகம் காண்வச்ருதியிலும் வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

கீதையில் பகவான் ச்ரத்தாவான்லபதே ஞானம் என்றே மொழிந்துள்ளதும் சேரநாட்டு மாந்தர்களின் விஷயத்திலும் மன்னர்பிரான் விஷயத்திலும் ஒரு உரைகல்லாகவே அமைந்திருந்ததை அந்த ராஜபவனியான ஊர்வலத்தின் போது காணமுடிந்தது.

சிரத்தை என்பதே ஒரு ஞானம் என்பதாகக் கொண்டிருந்த சிவபக்தர்கள் அந்த மக்கள். விஷயத்தைப் பிரகாசப்படுத்துவது தான் ஞானத்தின் இயல்பு, சுபாவமாகும். ஆதலால் தான் சிரத்தை என்கிற ஞானமுடைய மக்கள் எல்லோரும் அந்த ஊர்வலத்தின் நடையைப் பூர்ணமாகக் கண்டு களித்தார்கள்.

பாணபத்திரன், சேரமான், யானை, அங்கே சிவபெருமான் அருளிய சீட்டுக்கவி ஆக அக்காட்சி மிகப்பிரகாசமாகத் தெரிந்தது. மெல்ல, மெல்ல நகர்ந்து சென்ற ஊர்வலத்தின் நடையிலும் அதன் அசைவுகளிலும், மாந்தர் மனம் லயித்து ஒன்றியது. மனம் திறந்து, ஒருவருக்கொருவர் முகபாவங்களில் தங்கள் மகிழ்ச்சியைச் சம்பாஷிப்பது போலவே பரிமாறிக்கொண்டனர்.

ராஜபவனியாக நகர்வலம் வந்த அந்த ஊர்வலம், ஊர்வலமோ, பார்வலமோ, சேரமானின் யானைத் தேர்வலமோ, சைவத்திருபொலியும் சீர்வலமோ என்று மாந்தரெல்லாம் ஒருமித்து வியந்ததுவும், நயந்ததுவும் கண் கொள்ளாப் பெருங்காட்சியாகவும், செவிக்கு இனிதாகவும் இருந்தது. மக்கள் திருக்கூட்டம் மகிழ்ந்ததுவும் மனம் நெகிழ்ந்ததுவும் சேரமன்னரைப் புகழ்ந்ததுவும் எங்கும் நிறைந்த வண்ணமாக இருந்தது.

இசைக்கருவிகள் இன்னிசை எழுப்பின. முரசங்கள் முழங்கின. பேரிகை ஆர்த்தன. சங்குகள் ஒலித்தன. பெண்கள் எட்டு மங்களத் திருவிளக்குகளை ஏந்தி எதிர்வர, அரண்மனை மாளிகைக்குள்ளே பாணபத்திரனை சேரமான் அருகிருந்து, அணைத்த படியே அழைத்துச் சென்ற அழகுக்கு நிகரானதொன்று நித்திலத்தில் இல்லை.

"நமச்சிவாய வாழ்க
நாதன் தாள் வாழ்க"

என்ற சிவத்திரு முழக்கம் விண்ணை எட்டிற்று. 'ஒளிவளர் விளக்கே' என்ற ஓசை பேரோசையாய்ப் பரவிற்று.

"தெளிவளர் பளிங்கினை திரள்மணிக் குன்றே, சித்தத்துள் தித்திக்கும் தேனே" என்று திருவிசைப்பா திருப்பல்லாண்டு எங்கணும் ஒலித்தது.

திருவடிப் பேறே சிவப்பேறு என்ற நிலையில் சிவானந்தம் பயத்தலை உணர்ந்து பாணபத்திரன், மெல்லிய நடையுடன் சேரமான் தன்னொடு சேர்ந்து, சற்று பணிவுடனேயே, கால்பதிய வைத்து, நடந்து வந்தான்.

அரண்மனை மணிமண்டபம் அலங்காரத்திற்கு தனி இலக்கணம் அமைத்தாற்போன்று இருந்தது. மணிமண்டபமோ, இல்லை, அணிமண்டபமோ அது என்று திகழ்ந்தொளிர்ந்தது.

பாணபத்திரனை நந்நீராடச் செய்தனர். பட்டுப் பொன்னாடை தரித்து மணிமண்டபம் வரப் பணித்தனர்.

பொன்னாலான முத்தாசனத்தின் மீது பாணபத்திரனை எழுந்தருளச் செய்தனர்.

அமுது ஒத்த விருந்தளித்தார். சுவைகளின் கூட்டு நல்விருந்தாக அமைந்து பரிணமித்தது. பக்தி உடையார் புரிந்த செயல் அல்லவா!

பாணனுக்கு நறுமணம் கமழ் சந்தனம் தந்தனர்; கனிவகை ஈந்து வெற்றிலை பாக்கு நல்கினர். உபசார முறைமை மகத்துவமாயிருந்தது.

வழங்கியவை யாவும் பொன் தட்டுக்களில் வழங்கப்பட்டன. பொன் மனத்துச் சேரனின் பொன் மனம் போல் எல்லாம் நிகழ்ந்தன.

சோமசுந்தரக் கடவுள், “மாண்பொருள் கொடுத்து வரவிடுப்பதுவே” என்று திருமுகப்பாசுரத்தில் சாற்றியிருந்தபடியே, சேரமான் பெருமாள் நாயனார் திருவாலவாயுடையாரின் திருவுள்ளம் பற்றி விரைவினில் பாணனுக்குப் பொருள் கொடுத்துச் சிறப்புக்கள் செய்து அனுப்ப எண்ணினார்.

பாணபத்திரனின் அயராத சிவபக்தி சேரமானின் சிந்தையை விட்டு நொடிப்பொழுதும் அகலவில்லை.

சேரமன்னர்கள் பரிசில் வழங்குவதிலும் மன்னர்களாகவே வாழ்ந்தவர்கள் அல்லவா!

பீதாம்பரம் அணிவித்து பாணபத்திரன் அருகே நின்று, அந்தச் சிவனடியார் அருகிலிருப்பதே தமக்கும் சேரநாட்டிற்கும் ஆங்காலம் (நல்லகாலம், எடுத்த காரியமெல்லாம் வெற்றியடையும் காலம்) என்றெண்ணி அகமகிழ்ந்தார் சேரமான்.

சேரமானின் தோற்றம் ஒரு அளியனின் தோற்றம் எனப் புலவோர்கள் பேசிக் கொண்டனர்.

அளியன் என்றதும் ஒரு புலவர் 'எளியவன்' என்று தானே பொருள் என்றார்.

"அன்புமிகுந்தவன்' என்றும் அர்த்தமுண்டு என நவின்றார் இன்னொரு புலவர்.

அளி என்றால் 'கொடுத்தல் செய்' 'காத்தல் செய்' 'கலந்து பழகு' என்றெல்லாம் கூட பொருள் காணலாம் என்றார், நிகண்டு படித்த இன்னொரு புலவர். அருள், கொடை, குளிர்ச்சி எனவும் விரித்து உரைத்தார்.

அளியன் மட்டுமில்லை. சேரமான் மாந்தருக்கெல்லாம் அணியனும் ஆவார் என்றார், அந்த உரையாடலில் சேர்ந்து கொள்ள விரும்பிய மற்றொரு புலவர்.

சேரமான் பாணபத்திரனுக்கு என்னென்னவோ சீர் எல்லாம் செய்திட எண்ணி எண்ணி, எண்ணிலாதன செய்தார்.

'தொங்கல்' ஒன்றை அணிவித்தார். அங்கிருந்த அரசவைச் சான்றோரில் ஒருவர் 'அரசவிருது இது'

என்று அருகிலிருந்தவரிடம் தெரிவித்தார். தொங்கல் எனச் சாற்றுவதே மரபு என்று விளக்கவும் செய்தார்.

அகாரணன், அகோரன், அங்கணன், அதிகுணன், அந்திவண்ணன் அந்தச் சிவபிரானை அனுதினமும் துதித்தேற்றும் சேரமான், பாணபத்திரனுக்கு வழங்கிட

'பீலி கொணர்க' என்று தம் உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தியதும், 'மயில் தோகை' கொணர்ந்தங்கு ஒருவர் நின்றார். 'மயில் தோகை விசிறி' கொண்டு வந்து நின்றார் இன்னொருவர். "வெண்கொடை' கொண்டு வந்து அதனை விரித்தபடி கரத்திலேந்தி நின்றார் மற்றொருவர். 'சிறு ஊது கொம்பு' பொற்பூண் பிடித்த அதனுடன் வந்து நின்றார் பிறிதொருவர். சேரமான் பார்த்தார். பார்த்துப் பார்த்து பரவசமானார். பீலி என்றதுமே, பீலிக்குரிய 'பொருள்' எல்லாம் கொண்டு வந்து நின்ற தம் சேவகர்களின் காட்சி சிவன் அருள் என்றே சிந்தையிற் கொண்டார்.

பாணபத்திரனுக்கு கண்டையும், கழலும் அணிவிக்கப்பட்டன. பொலன் பொலிந்த வண்ணமாக பாணபத்திரனைக் கண்டு மகிழ்வதில் சேரமான் பெருமிதம் அடைந்தார். பாணனுக்கு அணுக்கமாக இருந்தார்.

அமைச்சர்களில் மூத்தவர் பணித்தபடி, சேரமான் அருகில் அறுவர் வந்து நின்றனர்.

பொன்னாலன கழுத்தணியை தங்கத்தட்டில் தாங்கிக் கொண்டு நின்றார் ஒருவர். உருத்திராட்ச மாலையுடன் இன்னொருவர் நின்றார்.

பதக்கமொன்றைத் தயாராக வைத்துக் கொண்டு நின்றார் மூன்றாமவர்.

தோள்வளையுடன் பிறிதொருவரும், அணிகலச் செப்புடன் மற்றொருவருமாக நின்றனர்.

ஆறாவது பணியாளர் ஒருவகை பறையுடன் நின்று கொண்டிருந்தார்.

சேரமான், பாணபத்திரனைப் பார்த்துப் பார்த்து பரவசம் கொண்டிருந்த நிலையில், 'கண்டிகை கொண்டு வாருங்கள்' என்று கட்டளையிட்டார்.

'கண்டிகை' என்றால் மேற்சொன்ன ஆறுபொருளையும் கூறுவது வழக்கம் என்பதால் மூத்த அமைச்சர் அந்த ஆறுபொருள்களுடன் காத்திருக்கும் அந்த ஆறு பணியாளர்களையும் மன்னர் பார்வையில் செலுத்தி கண்டிகையை அளித்தார்.

மன்னரின் மனவிருப்பத்தை முழுவதுமாக உணர்ந்து ஆவனபுரிந்த அமைச்சர்களின் திறம் வியந்து, சேரமான் உவகை கொண்டார்.

"யான் இயம்பியதொன்று; இயைபுடன் இயற்றினீர் வகை தெரிந்து நீவிர்"

மன்னர் மனமாரப் பாராட்டினார்; புலமை சான்ற அமைச்சரின் பெருமையை வியந்து,

எம்மனோர் நீவிர், என் மனம் அறிந்தீர், எம்மையோர் நீவிர் என நவின்றார்.

சேரவேந்தன் செந்தமிழ் வித்தகன்; செந்தமிழ் செங்கோலோச்சிய நிலத்துப் பெருவேந்தன் சேரமான்.

"திப்பியம், திப்பியம்" எனச் செப்பியவாறே அங்கு கொணர்ந்த பொருள்களை நோக்கிய மன்னனின் வார்த்தைகளைக்கேட்ட ஒரு புலவர்.

"தெய்வத்தன்மை உள்ள பொருள்கள் இவை என்பதை நம் வேந்தர் 'ஒரு சொல்லால்' குறிக்கும் அழகே அழகு என்றார் மெல்லிய குரலில்.

"அம்மட்டோ, 'வியந்திடும்படியாக அமைந்த செயல்' என்பதை வேந்தர்பிரான் நயமுடன் 'ஒரு சொல்லால்' வழங்கிவிட்டார் எனப்பகர்ந்தார் இன்னொரு புலவர்.

அனைத்தையும் செவியுற்றவாறே, சேரமன்னர், ''செவ்விது செவ்விது, நன்று மிக நன்று' என்று செந்தமிழின் சீர்மல்கிட, மந்திரம் போல் மொழிந்தார்.

மன்னரின் மனவிருப்பத்தை முழுவதுமாக உணர்ந்து செயல்படும், அமைச்சரை நினைத்து சேரமான் உவகை கொண்டார்.

சேரமான், பாணபத்திரனுக்கு அரசின் பொக்கிஷக் கருவூலத்தைத் திறந்து காட்டினார். என்னே அன்பின் தகைமை! ஒன்றெனக் கருதும் ஒப்பரிய மனப்பாங்கின் சீர்தான் என்னே!

''பொன் வண்ணமான மேனி பொலிந்திருக்கும் எம்பெருமானின் அயரா பக்தியுடைத் தொண்டரே, பாணரே, இங்குள்ள இத்திரவியமனைத்தையும் நீவிர் எடுத்துக் கொண்டு செல்க'' என்று தம் உள்ளக் கிடக்கையைத் தெரிவித்து வேண்டிக் கொண்டார். மன்னருக்குரிய கட்டளைத் தோரணையின் சாயல் கூட சிறிதுமின்றி, கனிவான, மெய்யன்பு கூடிய குரலாக அது இருந்தது.

சேரமானின் மாண்பு தான் என்னே!

பாணபத்திரன், மன்னனின் பரவச மொழி கேட்டு, சேரமான் அவர்களைப் பணிந்து வணங்கியவாறு,

“திருவாலவாய்ச் செல்வராம் சோமசுந்தரரின் திருவருளுக்குப் பெரும்பாத்திரமாகிய தேவரீர்! மன்னர் மன்னா! மாதேவனின் அடியாரில் சிறியேனினும் சிறியேன் நான். தாங்கள் தருகின்ற பொருள் அடியேனுக்கு திருப்தி தர வல்லது; போதுமானது; ஈதனைத்தும் எடுத்துக்கொண்டு அடியேன் என் செய்வன்” என்று பதிலுரைத்து அடக்கத்துடன் நின்றான்.

சிவனடியான் பாணனின் பண்பு இது.

சேரமானோ, பொன்னும் பொருள் அனைத்தும் பரமனதுவே, எனப் பகர்ந்தான். ‘கொள்ளும் நீர் எடுத்துக் கொள்ளும்’ எனக் கூறி, ஆட்சியோடும் அனைத்தும் தந்து விட சேரமான் சித்தமாகி அவ்வாறே செப்பினார்.

“பேண என்றனுக்கு வேண்டுவன கொஞ்சம் பொருளே. கொஞ்சமே போதும் மன்னா! ஆலவாயன் அருள் பெருக்கும் வண்ணம் அரசினையும் அரசு உறுப்புக்களையும் தேவரீர், தாங்களே கைக்கொண்டு அருளுடன் ஆட்சி புரிதல் வேண்டும்.”

பாணபத்திரன் நெஞ்சுருகி, மன்னரிடம் இவ்வாறு வேண்டிக்கொள்ள, சேரமானும் ஒருவாறு மனம் சமன்பட்டார். ‘கொஞ்சம்’ என்பதற்குத் தாமே பொருளுரைத்துக் கொண்டு பொருள் கொடுத்தார்.

பொற்சிவிகையோடு பொன்னும் பொருளுமாக ஆபரணங்கள், திரவிய வகைகள், முத்து மணிரத்தினம் என வழங்கினார்.

யானை, குதிரை என பிற பலவும் அளித்தார். எண்ணிலாதன வழங்கினார் சேர மன்னர்.

மறவாது, மகாதேவன் கழல் நினைந்து, வாழ்த்தி, ஏத்திப் புகழ்ந்தாரைப் பொன்னுலகம் ஆள்விப்பான், பாலொத்த வெண்ணீற்றானாம் சிவபெருமான்.

சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து, தரணியையே வானளாவத் தருவான் அந்த, சோமசுந்தரக் கடவுள்.

சிவனவன் சிந்தையினில் நின்றதனால், சிவபக்தி தந்த செல்வம் பெரும் செல்வமாயிற்று.

பாணபத்திரனுக்கு சேரமான் செய்த சிறப்புக்கள் அனந்தம், அனந்தம்.

பாணன் சேரமானைப் பிரிந்திட மனமில்லாமல் பிரியலானான். காலடிகளை ஓசையின்றி, மெல்ல நகர்த்தி, மெதுவாக நடந்தான். பாணபத்திரன் முன் நடக்க, சேரமன்னர், பரமனடி பற்றி நடப்பது போல், பாணன் பின்னே ஏழு அடிகள் கடந்து சென்றார்.

பின்னும், திரும்பிட மனமில்லாமல் பாணபத்திரனைத் தொடர்ந்து நீண்ட தூரம் நடந்து மனத்தை அதிலேயே பதித்தவாறு வழியனுப்பி வைத்து, தம் அரண்மனைக்குத் திரும்பினார், சேரமான் பெருமாள் நாயனார்.

பாண்டியநாடு நோக்கி, பாணன் பயணமானான்.

16
பொற்பலகையில் மதுரை நாயகன்

சேரநாட்டை விட்டு, பாண்டிய நாடு அடைந்து, பாணபத்திரன் மாமதுரைத் திருநகரம் வந்து சேர்ந்தான்.

செல்வச் செழிப்பில் சிவநெறி பற்றி வாழ்ந்தான். குபேரன் போல் வாழ்ந்தான் என்று கூறலும் மிகையாகாது. அந்தணர்கள், புலவேர்கள் எனப் பலருக்கும் பொருளினை வழங்கி, மனம் மகிழ்ந்தான். இரவலர்க்கும் இல்லை என்னாது பொருள் ஈந்தான். அறம்புரிவதற்கே ஆலவாயன் சேரமான் மூலம் அளித்த பொருள் எனக் கருதி நல்லறம் ஓம்பி வாழ்ந்தான். வந்தோரை முகமலர்ந்து வரவேற்று உபசரித்தான். வேண்டியவர்க்கு வேண்டுவன தந்தான். விரும்பிய பல்லுதவிகள் புரிந்து சித்தத்துள் தித்திக்கும் தேனாக, சிவபிரானை எண்ணியே வாழ்ந்து வந்தான்.

முக்காலும் இறை இசை பாடுவதை பெரும் பணியாகவும், முதற்பணியாகவும் கொண்டிருந்தான். பாணபத்திரன், அர்த்த யாமத்திலும் சோமசுந்தரர் திருக்கோயில் சென்று ஆலவாய் அழகனின் திவ்ய சொரூபத்தில் சொக்கி நின்றான். துதித்தேத்தி, தூயதிரு சிவன்பதமே மேலானது என வாழ்ந்தான்.

அம்பலத்தாடும் அரசன், அந்த வெள்ளி அம்பலத்தான் திருப்பள்ளியறை செல்லும் சமயம்—

இடையூறு எந்தவிதமாக ஏற்பட்டாலும், நியமங்கள் மாறாமல், இறை இசைபாடுபவன் பாணபத்திரன் என்னும் கீர்த்தியை இந்தத் தரணிக்குத் தெரிவிக்கும் பொருட்டு அருள்பாலிக்கலானார், சோமசுந்தரனார்.

வானம் பெருமழையாகப் பொழியத் தொடங்கியது. அடைமழை இடிமின்னலுடன் பெய்தது. 'இடியும், முழக்கமும் ஈசர் உருவம்' அல்லவா! நக்ஷத்திரங்கள் விண்ணின்று மறைந்தன. வானத்தைக் காரிருள் கவ்வியது. இருட்டில் திசைகள் தெரியவில்லை. மெய் இருட்டு.

பாணன், மழையில் நனைந்தபடியே வந்து ஆலவாயன் கோயிலை அடைந்தான். சோமசுந்தரரின் திருவருள் தான் மழையாக அவன் மீது பொழிந்தது. அவன் அப்படித்தான் நினைத்தான்.

யாழ் எடுத்தான், பண் கூட்டி, பாணன் யாழ் மீட்டினான். செந்தமிழில் தேன்பாட்டுப் பாடினான். மழையின் தண்மையில் அவனது விரல்கள் விறைத்தாலும், தரையில் மண் சேறென மாறியதால் கால்கள் தளர்ந்தாலும், மெய் வருத்தம் சிறிதுமின்றி, பெய்யும் மழையிலும் பெம்மான் மீது அமுதமாய் இசை பொழிந்தான்.

கானாமுதம் படைத்தான். அந்தக் கானாமுதக் காட்சி விந்தையிலும் விந்தையாகத் தோன்றியது. நாதத்தின் நயத்தினுக்கோர் நேர் எதுவும் உண்டோ!

ஓசை தரும் இன்பம், பேரின்பம் தான். அந்த இன்பத்திலும் தெய்வீக கீத ஒலியின் இன்பம் உவமையில்லா இன்பம் அல்லவா!

மெய்ப்பாட்டல்லவா. எண்டிசையும் இன்பக் களியேறப் பாடினான் பாணன், யாழிசை கூடி, பொன்னை நிகர்த்தாற் போன்று பொங்கி வந்தது.

ஆலவாயன் பாணனின் இசையை மெச்சி, அயராத சிவபக்திக்கு அருள் கூட்ட,

"இதோ இந்தப் பலகை உள்ளது. உனக்காகவே இந்தப் பலகையை அமைத்துள்ளோம். நீ, இசை பொழிக. இப்பலகையின் மீது நின்று இசை பொழிக."

என்று வானத்திலிருந்து எழுந்த பேரொலியுடன் ஒன்பது வகை மணி, ரத்ன, வைரங்களுடன் இழைக்கப்பட்ட பொற்பலகை ஒன்று திருவருளால் வந்தது.

எப்போதுமே பணிவுடையவன் பாணபத்திரன். இப்போதும், பணிவுடைமையால், பரமன் இட்ட உத்தரவை, ஏற்கத் தயங்கினான். பொற்பலகையோ பாணனின் அருகிலேயே நெருங்கிற்று.

சோமசுந்தரக் கடவுளின் திருவருளைத் தெரிந்து கொண்டான், பாணன்.

பொற்பலகை மீதேறி, பூமழைபோல் பொன் வண்ணப் பெருமான் சிவன்மீது தோத்திரம் பாடி இசை கூட்டினான்.

நலிவு இல்லாத நாதம்; தடையில்லாத தாளம்; பழுதில்லாப் பண்; பக்தி மீதூறப் பண்பாட்டுக்குரல் இசைத்தான்.

ஊன் உருகப்பாடும் ஒலி மேலோங்கியது. வேயின் குழலோடு வீணை முதலா மனிதர் வாயினிலும், கையாலும் வாசிக்கும் பலகருவி சேர்ந்தொலிப்பது போல் தெய்வ கீதமாக ஒலித்தது.

நாளெல்லாம் நெஞ்சைப் பறி கொடுத்துக் கேட்கும் நாத இன்பமாக ஒலித்தது.

காலைக் கதிரழகின் கற்பனைகளும், மாலை வனப்புகளின் அற்புதங்களும் ஒன்றிய சுந்தர எழில் கூட்டும் காட்சிகளின் ரசம் ஊட்டும் வகையில் ஒலித்தது.

வான்வெளியில் சோதி ஒளிச்சுடர் படர்ந்து வண்ணக் கீற்று வகைகள், உள்ளத்தில் எழுப்புகிற இன்னொலி போல் ஒலித்தது.

தேவ தேவனை, வேத கீதனை, பாவநாசனை, அந்தப் பரமேசுவரனைப் பண்ணிசைத்துப் பாடினான்; பாடிப்பாடி மகிழ்ந்து பரவசம் எய்தினான்.

பாட்டுத்திறம், அவனை பாலித்துக்கொண்டிருந்தது.

வருணனின் வான் மழை அங்கே வர்ஷித்துக் கொண்டிருந்தது.

பாணனின் தேன்மழை இங்கே பொழிந்து கொண்டிருந்தது.

மதுரைச் சோமசுந்தரக் கடவுளின் மகத்துவம் மனத்தினுள் இறுகிப் பதிந்தபடியே, பொற்பலகை பெற்ற பெரும் பேற்றினை எண்ணிப் பூரித்தவாறே, பொற்பலகையுடன், பாணபத்திரன் இல்லம் நோக்கிச் செல்லலானான்.

பாணன் பொற்பலகையுடன் இல்லம் செல்ல வழி செய்வது போல் வான் மழை நின்று விட்டது.

பாணன் மெல்ல நடந்து சென்றான். செல்லும் போதே, பாணனின் உள்ளத்தில் சிவனருள் என்னும் கருணை மழை பொழிந்து கொண்டிருப்பதை அவன் பூரணமாக உணர்ந்தான்.

மன்னனிருக்க, மாதவன் பொற்பலகையைத் தனக்களித்துள்ளதை மன்னவன் அறிந்தால்...

மன்னன் அறிந்தால்...

வரகுண பாண்டியன் அறிந்தால்...

இப்படியொரு எண்ணம் அவனை ஆட்கொண்டது.

மண்ணில் கால் பதித்து, கால் பதித்து நடந்தாலும் பாணனின் எண்ணமெல்லாம் விண்ணோரும் ஏத்தும் அந்த விண்ணாளனாகிய சிவபிரானின் திருவடி களிலேயே லயித்து நின்றது. இந்தச் சிந்தனையிலிருந்து விடுபட்டு...

செஞ்சடை வெண்மதி அணிந்த சிவபெருமானின் திருக்கோலமே அவனை வழிநடத்திச் செல்வதாக நினைத்தான். ஆடும் அம்பலத்தான் அடிமேல் அடியெடுத்து, தனக்கு முன்னே காலடி பதித்து தடம் காட்டிச் செல்வது போல் அவனுக்குள்ளே ஒரு பிரமை. அந்தப் பிரமை பிரமை தானோ! ஒருவேளை அந்தராத்திரியில் சலனப்படுகிற சிவபக்தி பிறப்பிக்கிற புதுப்பொலிவூட்டும் சிவசக்தியோ, அது!

இனம் தெரியாத ஒரு புது வேகம் பாணனிடம் ஊடுருவியது. பாணனின் அகநயனங்கள், உள்ளுக்குள்ளேய பளிச்சிட்டுப் பளிச்சிட்டு, மின்னி மின்னி, ஒளி தந்தது. இடிபோன்ற ஓசை ஏதுமின்றி, அமைதியும், மென்மையும் தவழ்ந்து பாணனின்

இதயத்தில் சிவஜோதி ஒன்று சுடர்விட்டுப் பிரகாசிப்பது போல் அவனுக்குத் தோன்றியது.

அதுவே பெரிதாகப் பரந்தது. சிவதரிசனங்களின் பல்வகைக் காட்சிகளைக் கொண்டதாக வெளிச்சமாகத் தெரிந்தது. முன்னே தெளிவாகவும், பின்னே பின்னே பல தரிசனங்கள் தொடர்ந்து பாணனின் கண்களில் பட்டன.

எங்கும் சிவனருள் விளையாட்டாகிய நடனம் என்பதே சிவநெறியாளர்களின் சித்தத்தில் பதிந்தது. பாணனின் பார்வையில், தாழ் சடையும், மாந்தளிர் மேனியும், மாண்புடன் திகழும் மங்கை பாகமும், கருமான் உரி ஆடையும், கறைக்கண்டமும், கங்கையும் சிந்தைக்கு விருந்தாக அமைந்து காட்சிப் படுகின்றன.

கூத்தனின் குனித்த புருவமும், கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும், இன்னும் எல்லாமும் பாணனின் முன் காட்சிப்படுகின்றன.

பொற்பாதமும் தெரிகிறது.

இறைவன் கழலே பாணபத்திரன் கண்களில் படுகிறது.

செல்வன் கழல் காணும் இன்பமே இன்பம்.

பேரொலி கேட்கிறது. என் உள்ளம் பெருமான் கழலல்லால் பேணாது என்ற ஒலி அவன் நெஞ்சில் உலா வருகிறது.

"முடிகொண்ட மத்தமும்
முக்கண்ணனின் நோக்கும் முறுவலிப்பும்
துடிக்கொண்ட கையும்
துதைந்த வெண்ணீறும் சுரிகுழலான்
படி கொண்ட பாகமும்"

என்ற பாட்டொலி எழுந்து பாணனைப் பரவசப்படுத்தி, இல்லம் நோக்கி நடக்கும் அவன் நடையில் தனித்ததொரு தன்மையை உண்டாக்குகிறது.

சித்தமெல்லாம் சிவமாகிவிட, பாணனின் கண்களின் முன்னே யாவும் சிவ தரிசனங்களாக வந்து ஒளி வீசுகின்றன.

ஆடும் அவன் பாதம் அருட்பாதம். குஞ்சித பாதம் தூக்கிய திருவடி. தன்னிழல் தந்து காத்தருளும் பாதம் அது. திருவடிகளுள்ளும் திரோதனத் திருவடி, 'நான்', 'எனது' என்ற பற்றிரண்டையும் போக்கும் தூக்கிய திருவடி, பற்று விட்டு, பற்றுகளை அற்றவன் திருவடிகளைப் பற்றிடும் உயிர்கட்குப் பேரின்பம் பயக்கும், பாதங்கள் பாணனின் கண்களில் பட்டன.

கண் எனும் ஒளிப்பொருளும் பொருள் உணர்ச்சியால் பார்க்கிற அறிவுணர்ச்சியும் உணர்ச்சியூட்டும் புறச்சோதிகள் சூரியன், சந்திரன், தீச்சுடர் (சோம, சூரிய, அக்னி) ஆகிய முச்சுடர் முக்கண்ணன் இச்சா, ஞான, கிரியா முச்சக்தியாய் காட்சியளித்தான்.

ஆனந்த நடனத் தாண்டவனின் முகப்பொலிவே தனியழகாகும். புன்சிரிப்பு, புன்முறுவல் அதற்கு இணையேது. கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பு; சிவபிரானின் இந்தக் குமிண் சிரிப்பு வெறும் சிரிப்பல்ல. வெறு நகையல்ல இது; உள்ளதன் மலம் வாட்டி வினை கெடுத்து, நிலையளிக்கும் புன்முறுவல்; "இடர்மூன்றும் இழித்தருளும் இளமுறுவல் முகமலரிலங்க" குமிண் சிரிப்புடன் கோதகன்ற ஈசனின் தோற்றம் தெரிந்தது.

ஞானியர்க்கு ஓர் அடையாளமெனத் திகழும் சடைமுடி முற்றுமுணர்ந்த பெருஞானி சிவபெருமான்.

பணித்தசடை, செஞ்சடை, முடிச்சடை, பரந்தசடை உடையோன் இறைவன். 'நுண்சிகை ஞானமாம்' என்றார் போல் ஞானமூட்டும் ஞான சொரூபியாக அந்த நீள் சடையான் திருவதனக் காட்சி திகழ்ந்தொளிர்ந்தது.

சோமசுந்தரனின் திருமுடியில் பிறைமதி, அளவிலா ஞானத்தின் வடிவாகி மேன்மைப்படுத்தும் தன்மை காட்டுகிறது. பிறைமதி முழுமதியாய் கர்வமுடன் சுற்றியதுண்டு. தக்கன் முதலியோர் சாபத்தினால் தேய் மதி என மாறி, இறைவனிடம் சேர்ந்ததும் சாபத்தைப் போக்கி, திருமுடி மேல் வைத்த வண்ணம் வினை அறுத்து, சீர் பெற்ற பான்மையுடைய பிறைமதியுடன் திங்களணிந்தோன் தரிசனம் கண்டான், பாணன் தன் நடைப் பயணத்தில்.

கங்கை, சடைக்கண் சிக்கி விளங்குகிறவள், பெரும் பிரவாஹமெடுத்து பாய்ந்தோடும் அந்தக் கங்கையையும், ஓர் மயிர்க்காலில் கட்டி அடக்கவல்ல, அளப்பரிய ஆற்றலுடையவனாக அந்த கங்கை புனை ஈசன் கண்கொள்ளாக் காட்சியாக எதிரே காட்சி தந்தான்.

அறுகும் எருக்கும், ஊமத்தம் பூவும், முடியிற்கொண்டு, அறிவின் நுணுக்கம், அறிவின் விளக்கம், விருப்பு வெறுப்பு நீங்கிய தன்மை என மூன்றுக்கும் விளக்கமானவன் கபாலமென்னும் நித்ய மங்கள வடிவனனாய் மனக்கண் முன்னே வந்து நின்றான்.

பவளமேனியனாம் அந்தப் பால் வெண்ணிறத்தான் சந்ததமும் திருவெண்ணிற்றுத் திருமேனியன், "பாசமும் அங்கது கழியப் பண்ணும் திருவெண்ணீறும்" என்று தூய தன்மை பெறுகிற பெருமை படைத்த திருநீறு, வெண்மைத் தன்மை மாறாத, தனிப்பொருளாய் அநாதி நித்தியப் பொருளாய் ஆலவாயழகன் திருமேனியில்

துலங்கிட, திருவாலவாயுடையார் தன்னெதிரில் தெரிவதாகவே பாணன் உணர்ந்தான்.

வெள்ளியம்பலத்தான், அன்று விறகு சுமந்து விற்பவனாக வந்து தன்னைச் சோதனையிலிருந்து காப்பாற்றிய திருவருளை இமை நேரத்தில் இதய கமலத்தில் ஏற்றி வைத்துக் கொண்டு சோமசுந்தரக் கடவுளைக் கொண்டாடினான். முப்போதும் ஆலவாயனைத் தொழுததால், எப்போதும் தன்முன்னே, அவன் இருப்பதாக எண்ணிக் கொண்டான்.

பாணனின் இசையைக் கேட்டு அருள் பாலித்தவன் அம்பலவாணன். அம்பலவாணனின் திருச்செவிகள் பரநாதம் பரவுகிற பிரகாச வடிவுடையவை. எங்குமாய் ஏகமாய்ப் பரவிய பிரணவத்தின் வடிவு தான் பிரகாசம். உடுக்கையால் ஒலி எழுப்பி, வலப்புறத்துச் செவிதனில் அதனை ஏற்றுக்கொண்டு, சப்த உலகைத் தோற்றுவித்துக் கொண்டிருக்கிறார். இடது புறத்துச் செவியில் அகங்கார வடிவுள்ள உயிரான மானின் ஒலியை ஏற்று, அதனையும் அடக்கியாளும் செவிஉடையான் சிவபெருமான்.

குழையும், தோடும், காதணிகள் வலது காதில் குழையும், இடது காதில் தோடும் (தோடுடைய செவியன்) அணிந்து, ஆண் பெண் அடங்கிய உலகம் தன் வடிவமே எனக்காட்டுகிற சிவசக்தியின் தரிசனமாக, சோமசுந்தரக் கடவுள் திருச்செவியில் குழையும் தோடும் பொலிய பவனி வருவதாகத் தோன்றியது, பாணனுக்கு.

அருளாற்றலின் எல்லைகளின் வரம்புகளைத் தாண்டியவன் இறைவன். அவன் நீலகண்டன். "ஆலாலம் உண்டான். அவன் சதுர்தான் என்னேடீ" என்றார் போல, நீலகண்டம் சதுர்களுக்கு அப்பாற்பட்டது. நஞ்சுண்டும், சாகாதிருக்கும் நீலகண்டன்

நித்தியமானவன். அத்தகைய நித்தியத்வம் நிறைந்த நிர்மலனை நினைந்தபடியே கருணை மழையில் நனைந்தவாறே, பாணபத்திரன் நடந்து, இல்லம் நோக்கிச் சென்று கொண்டிருந்தான்.

நான்கு சுரங்களுடன் பின்வலக்கரத்தில் துடியுடன் படைத்தல் தொழிலை தெரிவித்துக் கொண்டிருக்கிற தாண்டவமாடும் திருச்சிற்றம்பலத்தான் ஸ்வரங்களின் தோற்றுவாயாக இருந்து நாதவடிவினனாக விளங்குகிறான்.

உயிர்கட்கு அபயம் தருகிற அவன் அம்பலக் கூத்தனாகக் காட்சி தருகிறான். கருணாமூர்த்தியான அவன் இடது கைகளில் ஒன்று குறுக்காக, திரிபதாகை முத்திரையுடன் தூக்கிய திருவடியுடன் வழங்குகிற திருக்காட்சி பாணபத்திரனுக்கு கஜஹஸ்தம் போன்று கண்களில் தெரிந்து, இதுதான் இன்பமயமான இடம்; நீ அடையக் கூடியது, இதுவே என்பது போல் தோற்றமளித்தது.

சிவபிரானின் திருமார்பில் குறுக்காகி, உந்தி வரையும் தொங்குகிற முப்புரிநூல், பூணும் நூல் ஆதலால் இது பூணூல். மூலாதாரத்தில் தொடங்கி நாபிக் கமலத்திற்கு மேலாக வந்து எழுகின்ற குண்டலினியைக் குறிப்பால் காட்டுவதே இது. வேத முடியாம் பிரணவ காயத்திரியின் அறிகுறியாக, சொரூபமாக 'நூலது வேதாந்தம்' என்ற திருமந்திர முழக்க ஒலி விண்ணில் படர சிவபெருமான் தனக்குக் காட்சி தருவதாக பாணன் மானசீகமாக நினைத்தான்.

கோவணமும், வேதமும், பரஞானமாம். வையத்தில் விளங்குகின்ற கலைகள் அறுபத்து நான்கினையும், நான்கு வேதங்கள் எனப்படும் அரைஞாணிற் கோத்து அணி

திகழ அந்த அமலனின் அருங்காட்சியை மணிவாசகர் பாடிக்காட்டுவது போல் பாணன் செவிகளில் ஒரு இசை கேட்டது. அந்த இசை பாணனை உருகச் செய்தது.

பாணபத்திரன் இல்லம் நோக்கி நடந்து சென்று கொண்டிருந்தான். பொற்பலகை பெற்ற பூரிப்புடன், பொன்னார் மேனியனின் பலவடிவங்களையும் பாணன் நடைப்பயணத்தில் தரிசனங்களாக மனத்தில் வரித்துக் கொண்டானோ! அந்த ஆலவாயன் தான் அருள்கொண்டு பாணன் முன் வந்து தோன்றி தரிசனம் தந்தானோ!

'மறை சிலம்பு ஆர்ப்ப' மாதேவன் வந்தனனோ!

கள்ளவினைவென்று பிறப்பறுக்கச் சாத்திய வீரக்கழலுடன் விமலன் தெரிந்தனனோ!

தூக்கிய திருவடியுடன் கண்ணில் பட்டனனோ!

ஊன்றிய திருவடி, முயலகன், திருவாசி, கபாலமாலை, பாம்பணி, பரசு, சூலம், பாசம் வாள், அங்குசம், மழுமணி என பிறயாவுமாய் ஆடும் அத்தனின் கரங்களிலுள்ள அத்தனையுடனும் ஆடவல்லான் பாணனின் கண்களுக்குக் காட்சி தந்தனனோ!

பாணபத்திரனின் இதயத் திருவீதியில் இறைவனின் பவனி நிகழ்ந்த வண்ணமாக இருந்தது. பெரிய வீதிகளைத் தாண்டி நடந்து, சிறிய வீதிகளில் திரும்பி, தன் இல்லத்திற்கு மிக அருகே வந்து சேர்ந்தான்.

"கண்ணில் ஆனந்த அருவி நீர் சொரியக் கைம்மலர் உச்சிமேற் குவித்து" பாணபத்திரன் இல்லம் வந்து சேர்ந்தான்.

மன்னன் வரகுண பாண்டியனுக்கு, "செய்தி தெரியுமோ! தெரிவித்திருக்கத் தவறி விட்டோமோ"!

பாணன் மனம் இப்படி நினைத்தது.

"அன்று இசைப்போட்டியில் திருவருள் கிட்டியதை அறிந்து உவகை கொண்டது போல், இன்றும் பாண்டியன், தான் பொற்பலகை பெற்றதை அறிந்தும் மகிழ்வாரன்றோ"!

"இல்லை, பாணன் வந்து சொல்லவில்லையே என்று எண்ணி இருப்பாரோ, மன்னர்"!

பாணனுக்குப் புரிந்தும் புரியாமலும், விளங்கினாற் போலும் விளங்காதது போலவும் இருந்தது.

மறுநாள் விடியற்காலையே வரகுண பாண்டிய மன்னர் விபரம் அறிந்தார். பாண்டித் திருநாடு எந்நாளும் மகிழும்படி பொற்பலகை பாணபத்திரனுக்கு ஆலவாயன் அருளியிருப்பதையறிந்து தெய்வக் களி கொண்டார். மன்னனிடம் குதூகலம் கொடிகட்டிப் பறந்தது. சைவச் சீராளர் அன்றோ வரகுண பாண்டியன்.

மன்னவர் மதுரையம்பதி சோமசுந்தரரின் திருவடிகளைத் துதித்துப் பணிந்தார்.

"விண்ணவன் தந்த புண்ணியப் பொற்பலகை அது. பாண்டியர்க்குப் பெருமை தரும் பக்திப் பரிசு எனத் திகழும் பலகை அது" என்று பெருமிதப் பூரிப்பு பாண்டிய மன்னரை ஆட்கொண்டது.

'சொற்றுணை வேதியன் சோதிவானவன்' அச்சிவப்பெருமானிடமிருந்து பொற்பலகை பெற்ற பாணபத்திரனை அரசவைக்கு வருமாறு அன்புடன் அழைப்பு விடுத்தான். பாணனுக்குப் போற்றுதல் செய்து

பாண்டிய மன்னர் தானும் ஒரு ஏத்தவல்லாராக இருக்க நினைத்தார்.

திருநாவுக்கரசர் பாடியதை உள்ளத்திற் கொண்டு, சிவபக்தன் பாணனுக்கு செய்யும் புகழ் சிவனுக்குச் செய்வதே என்று கருதியவராக, 'ஏத்தவல்லார் தமக்கு இடுக்கண் இல்லையே' என்று எண்ணிக் கொண்டார். இதனால் பாண்டிநாடு மேலும் நலமுடன் திகழுமென்றும் நம்பினார்.

அரசவைப் பெருமக்கள் அனைவரையும் உடனே வருமாறு உத்தரவிட்டார். தமதுள்ளக்கிடக்கையைத் தெரிவித்து, அதற்கான ஏற்பாடுகளைத் திட்டமிட்டு நடத்த விழைந்தார்.

வரகுண பாண்டிய மன்னனின் விருப்பத்தை ஈடேற்ற, மன்னரைப் போன்றே, அரசவைப் பிரதானிகளும் தயாராக இருந்தனர்.

மன்னரின் ஆணையையேற்று சிறப்புப் பணியாள் ஒருவன் பொறுப்பில் ஐவர் பாணபத்திரனை அழைத்து வர ஏகினர். அரச மரியாதைகளுடன் பாணனை அரண்மனைக்கு அழைத்து வருமாறு அரசரிட்ட ஆணை நகரெங்கும் பரவிற்று.

பாணபத்திரனின் இல்லம் நோக்கி அரசுப்பணியாள் ஐவர் செல்வதை மக்கள் கண்டனர்.

யாவர் இவர். எங்கு செல்கின்றனர் என்று ஒருவரை ஒருவர் கேட்டுக் கொள்ளுமுன்பாகவே, விபரம் நகரம் முழுவதும் பரவியிருந்ததால், வினவுதல் இன்றியும் வியப்புமின்றியும் பக்திகொண்ட பாண்டிநாட்டு மாந்தர் மன்னவரின் மனவிருப்பத்தை வரவேற்பது போன்று மதிப்புடன் இருந்தார்கள்.

மன்னவனின் நன்மனத்தை நாவாரப் பாராட்டியபடி, உரையாடிக் கொண்டே, பாணபத்திரனின் அயராத பக்திக்கு சிவபெருமான் பொற்பலகை வழங்கியதை தங்களுக்குக் கிடைத்த பேறு போன்று மனதார நினைத்து, உளமாரச் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

பாணனை இல்லத்திலிருந்து அழைத்துக் கொண்டு மன்னவரின் தனிச் சிப்பந்திகள் ஐவரும் உடன் வர, பாணன் அரண்மனை நோக்கிச் சென்ற காட்சியையும் மாந்தர் பலரும் கண்டு ஆனந்தக் களி கொண்டார்கள்.

பாணனுக்குப் பாண்டிய மன்னன் சிறப்புச் செய்ய வேண்டும் என மக்கள் விரும்பினார்கள். மக்களின் விருப்பமே மன்னரிடமும் குடிகொண்டிருந்ததால் வரகுண பாண்டியன் தாமதத்திற்கு கொஞ்சமும் இடம் தராமல், பாணபத்திரனை அரண்மனைக்கு அழைத்து வர ஏற்பாடு செய்துவிட்டார்.

பாண்டிய மன்னரின் அரண்மனை நோக்கி, பாணபத்திரன் வந்து கொண்டிருந்தான்.

பொழுதெல்லாம் பாணனுக்கு பரமேசுவரன் நினைவு தானே!

பரமேசுவரன் என்றால் கூடவே பரமேச்வரியும் தான்.

மங்கை பங்கன், கங்கை நாயகனின் தெய்வத்திருவருள் கிடைத்ததையே, நெஞ்சில் கொண்டிருந்த பாணபத்திரன் கண்களுக்கு பரமசிவன் பார்வதி திருக்கல்யாண காட்சி அன்று கயிலையில் நிகழ்ந்த வண்ணம் மனக்கண் எதிரில் தெரிந்தது.

பர்வதராஜன் பெற்ற செல்வி பார்வதி கயிலாய நாதனின் திருக்கரம் பற்றிய திருமண வைபவம் திவ்யமாகத் தெரிந்தது.

சகலதேவர்களும் கூடிய அந்தக் கைலயங்கிரியில் ரிஷப வாகனத்தில் அமர்ந்து திருமுகம் பொலியப் பொலிய வருகிற காட்சி நெஞ்சை நிறைவு செய்தது.

பொற்பலகையுடன் இல்லம் செல்லும் போது, பாணனுக்குச் சிவச்சிந்தனை, இல்லத்திலிருந்து பொற்பலகையுடன் அரண்மனைக்கு வருகை தருகிற போதும் சிவச்சிந்தனை.

சிந்தனையில் எழுந்த சிவதரிசனக் காட்சி! பாணனின் பேறு தான் என்னே!

ஈஸ்வரியின் வடிவழகும் வண்ணஎழிலும், மின்னுகிற ஈசனின் அழகுக்கு அணிசேர்ந்து பிரகாசிக்கிற மணவிழாவின் கோலக்காட்சி மனத்தில் நிறைந்தபடியே நடந்து வந்த பாணன், அரசவைத் திருவிழாக் கோலக் காட்சி எய்தி, பாண்டியன் மணிமண்டபம் பிரகாசப் பேரொளியுடன் திகழ்வதைப் பார்த்தான்.

பாணனை பாங்குடன் வரவேற்ற பாண்டியனின் அரசவை தேவசபை போல் ஒளிவீசிக் கொண்டிருந்தது.

அனைத்தும் கிரமப்படி ஒவ்வொன்றாக சீர்துலங்க நடந்தேறிய பின், வரகுண பாண்டிய மன்னன், பாணபத்திரன் அருகில் நெருங்கினார். இதயக்களி பீறிட்டு மன்னன் வதனம் புன்னகைக் கீற்றுக்களின் தடமாகி செவ்வண்ணமாக விளங்கியது. பாணபத்திரனின் முகமோ சுந்தரச் சோபையுடன் சிவ வண்ணமாக ஜொலித்துக் கொண்டிருந்தது.

மாமண்டபம், அமைச்சர்கள், நூலறிவாளர்கள், புலவோர்கள், சிவம் அறிந்த சீராளர்கள் எனச் சான்றோர்களையும், அரசவைப் பிரதானிகளையும் உள்ளடக்கியதாக இருந்தது.

மாந்தர்களின் திருக்கூட்டம் பெருங்கூட்டமாக, சந்தோஷ ஆரவாரத்தை அமைதியாகத் தெரிவித்துக் கொண்டிருந்தது.

வரகுணபாண்டியன், சிவம் பெருக்கும் செம்மை மிகு பாண்டியர் வழிவழிவந்தவன் அல்லவா!

"சிவத்தின் அத்துவித உதவியை திடமாகப் பற்றிய உயிர் அயராமை என்பதாகிய அன்பு செலுத்தினால் தெரியாத தத்துவத்தின் அரிய நாயகனின் திருவடியாகிய சிவானந்த அநுபூதியை அடையும்" என்ற பேருண்மையை மனத்திற்குள்ளே எண்ணிக்கொண்டவராக, பாணபத்திரனை அந்தப் பொற்பலகையின் மீது அமரச் செய்தார். அணி பல கூட்டி, அகமகிழ்ந்து, "அமர்க, அன்ப அமர்க" எனப் பணித்தார், வரகுண பாண்டிய மாமன்னர்.

"எங்கள் மதுரை நாயகன்; யாழ் இசைப்பாணன்; இவன் எங்கள் மதுரை நாயகன்"

என்று மன்னருக்குரிய மாண்புடன் விளித்து, நிதி கொடுத்தார். பெருநிதியளித்து வரிசைகள் வழங்கினார். பரிசில் பல தந்தார்; பாராட்டினார்; விளைநிலம் வழங்கினார். பொன் அணி பல, மணித்திரள் குவியல் எனப்பல் நிதியும் பெருகிட வாரி வழங்கி கௌரவித்தார். பாணபத்திரனைப் போற்றி, ஏற்றிப் புகழ்ந்தார்.

'பெரிய அன்பின் வரகுண தேவர்' என்று சைவத் திருமுறைப் பாடல்களில் இடம்பெற்ற பாண்டிய மன்னர் வரகுணன். சிவபெருமான் பூலோகத்தில் சிவலோகத்தைக் காட்டி அருளினார், வரகுண பாண்டியனுக்கு. ஆலவாய் அழகனிடம் கொண்ட மாறாத பக்தியும் பற்றும் தான், வரகுணனை 'தேவர்' என்னும் சிவ சிம்மாசனத்தில் ஏற்றியிருந்தது.

அத்தகைய தேவர் பெருமானாகிய வரகுண பாண்டிய மன்னர், சிவபிரானின் திருவருள் கூடிச் சிவப்பேறு என்னும் மகுடத்துடன் திகழும் பாணபத்திரனின் 'அயரா அன்புக்கு' அடிபணிந்தவராக, பொன்னும் மணியும் பாணனுக்களித்து சிந்தை மகிழ்ந்தார்.

பாணபத்திரன் சோமசுந்தரக் கடவுளை தன் மனக் கோயிலில் எப்பொழுதும் போல் பதிய வைத்துக் கொண்டான்.

சிவபெருமான் அருளிய திருமுகப்பாசுரத்தால், சேரமான் பெருமானின் மாண்பொருள் பெற்று, சிவபிரானின் பொற்பலகை பெற்று, பாண்டிய மன்னரால் 'மதுரைநாயகன்' எனப் போற்றப்பட்ட பாணபத்திரன், எளியேனுக்கு இவ்வளவு சிறப்புக்களா என்று எண்ணினான்.

"அம்பலத்தான், அந்த ஆலவாய் அழகன் அருள் தான் என்னே என்னே" என்று ஆனந்தமும் அயரா அன்பின் மிகுதி சிகரமாய்ப் பொங்கிப் பொங்கி எழுந்திடவும் சிந்தையை சிவன்பாலே இருத்தினான்.

'சிவபக்தி தந்த செல்வம்' பாணபத்திரனிடம் பணிவையே அதிகமாக்கியது. நான்கு வேளைகளிலும் திருவாலவாயுடையாரைத் தரிசித்து, துதித்து யாழிசை பாடி வழிபட்டு வந்தான்.

சிவபக்தி தந்த செல்வத்தை சீரடியார்க்கு ஏற்றவாறு வழங்கினான். பொருள் எல்லாம் தக்கார்க்கு ஈந்து, அன்புடைமையே அறவுடைமையாக கருதி வந்தான். சிவம் என்னும் செம்பொருள் பெருக்கி, வளம் கொழிக்க, நலம் புரிந்து நிம்மதியும் நிறைவுமாய் நீண்ட நெடுங் காலம் வாழ்ந்து வந்தான், பாணபத்திரன்.

அனைவரிடமும் அன்புகொண்டு வாழ்ந்தான்; அனைவராலும் அன்பு பாராட்டப் பெற்று வாழ்ந்து வந்தான்; பிறர் நலம் பேணி வாழ்ந்தான்.

சிவன்பதம் சந்ததம் பணிவதே தம் பணி என்று வாழ்ந்து வந்தான்.

சிவபக்தி தந்த செல்வத்தைக் கொண்டு 'பக்தி பக்தி' என்றும், 'அன்பு அன்பு' என்றும், மாதேவன் பக்தியிலும் மானுடத்தின் அன்பிலும் தோய்ந்து, பாணபத்திரன் நீண்ட நெடுங்காலம் நலமாக வாழ்ந்தான்.

அதுவே, சிவபெருமான் அருளிய திருமுகப்பாசுரம் என்கிற 'சிவபக்தி தந்த செல்வம்' என்னும் உண்மைச் சரித்திரமாகிய பக்திக் கதை.

"எவ்வுருவில் யாரொருவர்
உள்குவார் உள்ளத்துள்
அவ்வுருவாய்த் தோன்றி
அருள் கொடுப்பான்"

திருச்சிற்றம்பலம்

* * *

சிவபக்தி தந்த செல்வம்

அனுபந்தம்

★ பன்னிரு திருமுறைகளும், திருமுகப் பாசுரமும் திருவிளையாடற் புராணமும்.

★ சீட்டுக்கவி—சில தகவல்கள்

பன்னிரு திருமுறைகளும் திருமுகப் பாசுரமும் திருவிளையாடற் புராணமும்

அகிலம் முழுவதிலும் உள்ளவர்கள் அனைவருமே சிவநெறியின் பாற்பட்டவர்களே.

வேதாகமங்களில் கூறப்பட்டுள்ள அனைத்தையும் தன்னகத்தே உடையது சைவசமயமாகும். 'இதனை இராசாங்கத்தமர்ந்தது வைதிக சைவசமயம்' என்று மொழிந்துள்ளார்கள்.

இறைவன் அருளிய வேதாகமங்களும் சைவ சமயாசாரியார்கள் அருளிய, பன்னிருதிருமுறைகளும் சித்தாந்த சைவத்தைத் தெளிவுறக் கூறும். ஸ்ரீமெய்கண்ட தேவர் முதலியோரின் மெய்கண்ட சாத்திர நூல்களும் அவ்வழிப்பட்டவைகளே.

வேதம் பொது நூலென்பர்; ஆகமங்கள் சிறப்பு நூல்களாகும். இவற்றில் முரண்பாடுகள் காணப்படுவது போல் தோன்றும்; அதிகார பேதம் என்றும் சொல்வதுண்டு. ஆனால், சான்றோராகிய ஞானமுடையவர்களின் வாயிலாகத் தெளிவுபெற்று ஒருமை நிலைமையினைக் கண்டு அறிந்து உணரலாம்.

ஆதிப்பரம்பொருள் என்கிற முழு முதற் கடவுள் யார்? இறைவனின் இயல்பு, செயல்கள் என்கிற திருவிளையாடல்கள், அடியார்களின் இலக்கணம், ஒழுக்க நெறி (சரியை) மற்றும் ஆகமவழி வழிபாட்டு முறை (கிரியை) எனப் பலவாறாக சிவ சமயம் பற்றி விரிவுபடக் கூறுபவையே பன்னிரு திருமுறைகளாகும். வேதாகமங்களினின்று, மாறுபடாதவாறு, ஸம்ஸ்கிருத மொழி அறியாதவர்களும் உண்மையை உணர்ந்து தெளிந்து தேர்ந்து ஒழுகுமாறு அமைந்தவைகளே பன்னிரு திருமுறைகள் எனச் சாற்றுவார்கள்.

வேதங்களில் காண இயலாத தெளிவுகளும் இங்கே தெளிவாக்கப் பட்டிருக்கின்றன என்பதை சைவ சாத்திர நூல்கள் பகரும்.

பதி, பசு, பாசம் ஆகிய இம் மூன்றினுக்கும் மேல் யாதுமில்லை. மூன்றின் நிலைகளை விளக்கிக் காட்டுகிற பாங்கும், மூன்றின் உண்மையை நிரூபணம் செய்கிற தன்மையும் பொதுச் சிறப்பு இயல்புகளைத் தெளிவுபடுத்தும் விதமும் சைவசமயத்தில் நெறியோடும் முறையோடும் பிரமாணம், இலக்கணம், சாதனம், பயன் என்பதாகவும் சாத்திரங்களாகச் சொல்லப் பட்டிருக்கின்றன.

பாசத்தை நீக்கி, பதியினை அடைதல் வேண்டும். அந்த முறையைத் தெரிவித்தும் சுத்த அத்துவைத இன்பத்தை எடுத்தியம்பியும் அறிந்துணரும் வண்ணம் தெள்ளத்தெளிவுபட முடித்துக் காட்டுகிற தன்மை உடையது சைவ சமயம்.

அனைவரும் ஒன்றென்றும் எவரும் சிவத்தின் புறம்பானவர் இல்லை என்றும் சித்தாந்த சைவம்

சொல்லும். இச்சீரிய நெறியே தாரணியில் சிறந்த சமயமாகும்.

செந்நெறி சார்ந்த பன்னிரு திருமுறைகளின் முதலாவது ஆசிரியர் திருஞான சம்பந்தப் பெருமான் ஆவார். ஞான சம்பந்தப் பெருமானின் அவதாரத்தை,

"வேதநெறி தழைத்தோங்க
மிகு சைவத்துறை விளங்க"

என்றும்; திருநாவுக்கரசரின் அவதாரத்தை,

"அலகில் கலைத்துறை தழைப்ப
அருந்தவத்தோர் நெறிவாழ"

என்றும்; சுந்தரமூர்த்தி சுவாமிகளின் அவதாரத்தை,

"அருமறைச் சைவம் ஓங்க...
...தீதகன்று உலகம் உய்ய"

என்றும் மொழிந்துள்ள திருவதார வாசகங்களை ஆழ்ந்து நோக்குமிடத்து, வேதாகமங்களின் வழியேதான் சைவச் செந்நெறி, உலகுக்கு உய்யும் வழி காட்டுகிறது என்பது ஐயமின்றித் தெளிவாகும்.

வேதநெறி தழைக்க வேண்டுமானால் சைவத்துறை விளங்க வேண்டும்.

கலைகள் தழைப்பதற்கும் அருந்தவமுடையவர்களின் நெறி வழி வாழ்வதற்கும், வேதத்திற்கு நிகரான சைவம் ஓங்கி; இந்த உலகம் தீதுகளேதுமின்றி உய்வதற்கும் இந்த மண்ணில் வந்து அவதரித்தவர்களே தேவாரமுதலி என்கிற மூவருமாவார்கள். இதேபோன்றுதான் அவதாரச் சிறப்புடையவர்கள் திருமுறை ஆசிரியர்கள் அனைவருமே.

வேதாகமங்களுக்கு உண்மை விளக்கங்கள் பன்னிரு திருமுறைகள் எனவும் சாற்றலாம். பிரணவத்தில்

விரிவாகும் வேதாகமம் போன்றே பன்னிரு திருமுறை முதல் எழுத்து ஓகாரம் தான். இறைவன் திருவருளால் தேவார முதல்வர்களும், மற்றையோரும் சிவநெறியைப் பரப்பி சைவச்சீர் திகழ்ந்திடச் செய்தபணி மகத்தானதாகும்.

பன்னிரு திருமுறைகளும் அவற்றின் ஆசிரியர்களும்:

அருளியவர்	திருமுறை
1. திருஞானசம்பந்த சுவாமிகள்	1,2,3
2. திருநாவுக்கரசு சுவாமிகள்	4,5,6
3. சுந்தரமூர்த்தி சுவாமிகள்	7
4. மாணிக்கவாசக சுவாமிகள்	8
5. திருமாளிகைத் தேவர்	9
6. சேந்தனார்	9
7. கருவூர்த் தேவர்	9
8. பூந்துருத்தி காட நம்பி	9
9. கண்டராதித்தர்	9
10. வேணாட்டடிகள்	9
11. திருவாலிய முதனார்	9
12. புருடோத்தம நம்பி	9
13. சேதிராயர்	9
14. திருமூலர்	10
15. திருவாலவாயுடையார் (இறைவன்—சிவபெருமான்)	11
16. காரைக்காலம்மையார்	11

17.	ஐயடிகள் காடவர்கோன் நாயனார்	11
18.	சேரமான் பெருமாள் நாயனார்	11
19.	நக்கீரதேவ நாயனார்	11
20.	கல்லாடதேவ நாயனார்	11
21.	கபிலதேவ நாயனார்	11
22.	பரணதேவ நாயனார்	11
23.	இளம்பெருமான் அடிகள்	11
24.	அதிரா அடிகள்	11
25.	பட்டினத்துப் பிள்ளையார்	11
26.	நம்பியாண்டார் நம்பி	11
27.	சேக்கிழார் சுவாமிகள்	12

மாசு மருவற்ற ஆகாயத்தின் பன்னிரு ராசிகள் போன்று பன்னிரு திருமுறைகளும் 27 நக்ஷத்திரங்கள் போன்று 27 ஆசிரியர்களும் திகழ்ந்தொளிர்கின்ற சீர் படைத்தது சைவசமயம், பன்னிரு திருமுறைகளில் பதினோறாவது திருமுறையின் முதல் பாசுரத்தை அருளியவர் இறைவராகிய சிவபெருமானே. திருவால வாயுடையார் அருளிய பாசுரம் அது.

மதுரை நகரத்து சோமசுந்தரக் கடவுள் சிவபக்தன் பாணபத்திரனுக்கு உதவும் பொருட்டு சிவபக்தி மிகுந்த சேர மன்னனான சேரமான் பெருமாளுக்கு எழுதிக் கொடுத்து அருளிய திருமுகம் அது.

மதுரை ஆலவாய் நகரம். அதையே திருவாலவாய் என்பார்கள். திருவாலவாய்க்கு உடையவர் சிவபெருமான். எழுதியது பாசுரம். சிவபெருமான் எழுதியதால் அது திருப்பாசுரம். திருமுக வடிவில்

அமைந்திருந்ததால் அதனை திருவாலவாயுடையார் அருளிய திருமுகப்பாசுரம் என மொழிந்தனர்.

தம்முடைய பக்தன் அயரா அன்பு செலுத்தும் பாணபத்திரனுக்கு மாண் பொருள்-பெருஞ்செல்வம் அளிக்குமாறு தமது பக்தரான சேரமன்னன் சேரமான் பெருமாள் நாயனாருக்குக் கடிதம் போன்று திருமுகமாக சிவபெருமான் தாமே இயற்றி அருளிச் செய்தது தான் பதினோராம் திருமுறையின் முதலாவது பாசுரம்.

பன்னிரு திருமுறைகளிலும் இறைவன் தாமே அருளிச் செய்த பாசுரம் இது ஒன்று தான்.

மனித குலத்துக்கு மகேஸ்வரனான இறைவன் அருளிச் செய்த ஒரே பாசுரம் இது தான்.

தருமிக்கு அன்று அளித்த (குறுந்தொகையில் உள்ள) 'கொங்குதேர் வாழ்க்கை' என்ற மற்றுமொரு பாடலைச் சொல்வாரும் உண்டு.

ஏற்றுக்கொள்ளப்பட்டதும், வரலாற்று உண்மைகள் உடையதும், பன்னிரு சைவத் திருமுறைகளில் அடங்கியதுமாகிய இந்தத் திருமுகப்பாசுரத்தை மையமாகக் கொண்டு எழுதப்பட்டதே 'சிவபக்தி தந்த செல்வம்' என்ற நூலாகும்.

திருவாலவாயுடையாராகிய சிவபெருமான் அருளிய திருமுகப் பாசுரம், 'திருமுகம் கொடுத்த படலம்' என்று திருவிளையாடற் புராணத்திலும் விவரிக்கப்படுகிறது. சிவபக்தன், பாணபத்திரனுக்கு சிவபெருமான் அருளிய அந்த திருமுகப்பாசுரம் பற்றியும், பாண்டிய மன்னர்களின் சிவபக்தி பற்றியும் சொல்லப்பட்டிருக்கும் திருவிளையாடற்புராணத்தை இயற்றியவர் பரஞ்சோதி முனிவர் ஆவார்.

'திருவாலவாய் திருவிளையாடற் புராணம்' என்று பெரும்புலியூர் நம்பி இயற்றியது இதற்கு முந்தையதாகும்.

பரஞ்சோதி என்ற பெயரில் வரலாற்றில் நால்வர் உள்ளனர். அகச் சந்தானக் குரவர்களில் நான்காவதான பரஞ்சோதி முனிவர் ஒருவர். அறுபத்து மூவரில் ஒருவராகிய பரஞ்சோதியார் (சிறுத்தொண்டர்) இன்னொருவர். திருமலை நாதரின் புதல்வரும் தத்துவப்பிரகாசரின் மாணவருமான 'சிதம்பர புராணம்' பரஞ்சோதி மற்றொருவர் ஆவார்.

திருவிளையாடற் புராணம் இயற்றிய பரஞ்சோதி முனிவர், திருமறைக் காட்டு மீனாட்சி சுந்தர தேசிகரின் புதல்வர் அழகிய தேசிகரின் மாணவர் ஆவார். இவர் பல பக்தி நூல்கள் இயற்றியிருந்தாலும், திருவிளையாடற் புராணமே இவருக்குச் சிறப்பைத் தருவதாகும்.

இந்தத் திருவிளையாடற்புராணம் மதுரை, கூடல், திருவாலவாய் என மூன்று காண்டங்களுடன் கூடியது. அதில் நடுநாயகமான கூடல் காண்டத்தில் வருகிற பாணபத்திரனுக்குத் திருமுகப் பாசுரம் அருளப் பெற்ற நிகழ்ச்சிகள் சொல்லப்பட்டுள்ளன.

ஆக, பதினோராம் திருமுறையில் திருவாலவாயுடையா ராகிய சிவபெருமான் அருளிய திருமுகப்பாசுரம், திருவிளையாடற் புராணத்தில் பாணபத்திரன் நிகழ்ச்சிகளுடன் அமைந்துள்ளதையும் எண்ணிப் பார்க்கிற போது அதன் மகத்துவம் பன்மடங்காகிறது. அதுவே இறைமையும் இலக்கியமும் ஒன்றிய வரலாற்றுக் கதையாக்கப்பட்டு 'சிவபக்தி தந்த செல்வம்' என்ற நூலாக அமைந்துள்ளது.

பாணபத்திரன் எப்போதும் சிவபெருமானுக்கே தன்னைத் தந்தவன். அதனால் பாணனின் அயராத

அன்பினால் இறைவனின் அறிவிச்சைச் செயல்களும் ஒன்றுபட்டு நின்ற நிலை உருவாகியதைக் காணலாம்.

சிவனருள் பாணபத்திரனுக்குப் பெருஞ் செல்வத்தையும், பெரும்புகழையும் அளவற்ற வண்ணம் வழங்கி அருளிய சிவப்பேறாகும். இந்த சிவப்பேறுதான், 'சிவபக்தி தந்த செல்வம்' என்று கொளல் தகுமன்றோ!

சீட்டுக்கவி - சில தகவல்கள்

பதினோராம் திருமுறையில் முதல் பாசுரம், திருவாலவாயுடையாராகிய சிவபெருமான் இயற்றி அருளியது. அதுவே திருமுகப்பாசுரம் என்றழைக்கப் படுகிறது. திருமுகப்பாசுரம் சீட்டுக்கவி பற்றி இந்நூலில் 148 ம் பக்கத்தில் விரிவாகச் சொல்லப்பட்டுள்ளது. மேலும் சில தகவல்கள்.

இறைவன் இயற்றியதால் திருமுகப் பாசுரம். அதுவே சீட்டுக்கவியாகும்.

பெற்றான் சாம்பான் என்பவர் நடராஜப் பெருமானுக்குத் திருவமுது சமைக்க, நாளும் விறகு கொடுத்து வந்த சிவபக்தன். பெற்றான் சாம்பானுக்கு அருள் பாலிக்கும் வண்ணம் நடராஜப் பெருமான் அடியார் உருவில் வந்து "அடியார்க்கு எழுதிய கைச்சீட்டு" என்பதாக புறச்சந்தானக் குரவர்களில் ஒருவராகிய உமாபதி சிவாசாரியாருக்கு சீட்டுக்கவி தந்து, பெற்றான் சாம்பானை சிவகதியில் சேர்ப்பித்தார் என்பது வரலாற்றில் உள்ளது.

இசையறிவும் யாழ்பயிற்சியும் நினைவாற்றலுமுடைய, பிறவிக்குருடர் அந்தகக் கவி வீரராகவ முதலியார். 'ஏடாயிரம் கோடி எழுதாது தன் மனத்தெழுதிப் படித்த விரகன் இமசேது பரியந்தம் எதிரிலாக் கவிவீர ராகவன்' என்று தம்மைக் கூறிக் கொள்கிற இவர் சீட்டுக் கவிகள் இயற்றி உள்ளதாக இலக்கிய வரலாற்றில் காணலாம். பரராச சிங்கமன்னனிடம் பரிசும் பாராட்டும் பெற்றுள்ளார்.

மகாகவி சுப்பிரமண்ய பாரதி எட்டயபுரம் மன்னருக்கு (மகாராஜா ராஜேந்திர ஸ்ரீ வெங்கடேச ரெட்டப்ப பூபதி) சீட்டுக்கவி எழுதியுள்ளார். (நண்பர்கள் வற்புறுத்தலினால் எழுதினார் என்பர்)

1919ம் ஆண்டு மே மாதம் 2-ந் தேதி ஒரு சீட்டுக்கவியும் 3-ந் தேதியிட்ட ஒரு சீட்டுக்கவியும், முன்னது ஐந்து பாக்களிலும் பின்னது மூன்று பாக்களிலும் அமைந்தது.

முதலாவது சீட்டுக்கவி "பாரிவாழ்ந்திருந்த கீர்த்திப் பழந்தமிழ்நாட்டின் கண்ணே" என்று தொடங்குவதாகும். அடுத்தது ஓலைத்தூக்கு என்று குறிப்பிடப்பட்டு, "ராஜ மகாராஜேந்திர ராஜகுலசேகரன் ஸ்ரீ ராஜராஜன்" என்று தொடங்கும். அதில்தான், மிகப் பிரபலமான சொற்றொடரான, "சுவை புதிது, பொருள் புதிது, வளம் புதிது, சொற்புதிது, சோதி மிக்க நவகவிதை எந்நாளும் அழியாத மாகவிதை" என்ற வரிகள் அமைந்துள்ளன. மகாகவி பாரதி, தன்னை கண்ணனடி மறவாத மனத்தான், சக்திதாசனெனப் புகழ்வளரும் சுப்பிரமணிய பாரதி என்று குறித்து உள்ளது காணலாம்.

1971-ம் ஆண்டு ஜூலை மாதம் 9-ந் தேதி, 14-ந் தேதி, 19-ந்தேதி ஆகிய மூன்று தேதிகளில் மதுவிலக்குக்காக, அப்போதைய தமிழக முதல்அமைச்சர்

கலைஞர் டாக்டர் மு.கருணாநிதி அவர்களுக்கு, பாரதிகாவலர் கே.ராமமூர்த்தி (இந்நூலாசிரியர்) மூன்று சிட்டுக்கவிகள் எழுதி அவரிடம் அளித்தார். "நீராலும் நெருப்பு வந்து பற்றிடினும் அழியாத நெறி சொன்ன காந்திப்பாட்டன்" என்று தொடங்கும் ஒரு சீட்டுக்கவியிலும், "நானோர் இளையவன் நல்லவர்க்கு இனியவன் நம் நிலத்து ஏந்தல் காந்திவட்டத்து ராமமூர்த்தி" என்று மற்றொரு சீட்டுக்கவியிலும், "சீரோடும் தத்துவமாய் திகழ்ந்தொளிக் கதிராகி, சிந்தையினைச் சுத்தமாக்கும் காந்தி" என்று மூன்றாவதும் அமைந்துள்ளன. அதில் 'தேரோடும், திருவீதித் திருவாரூர்த் திருமகனே' என்ற வரிகள் உள்ளன.

சீட்டுக்கவிகள் இன்னும் பலரால் பலருக்கு எழுதப்பட்டிருக்கும். செந்தமிழ் இலக்கியத்திலும், தெய்வீக இலக்கியத்திலும் சீட்டுக்கவி ஒரு சிறந்த இடம் பெற்றுத் திகழ்ந்துள்ளது.

துணை நூற்பட்டியல்
BIBLIOGRAPHY

1. திருவிளையாடல் புராணம், பரஞ்சோதி முனிவர் இயற்றியது.
2. தேவாரத் திருப்பதிகங்கள் (ஏழு திருமுறைகள்) சைவசித்தாந்த மஹாசமாஜம், 1926 ம.பா.பதிப்பு 1935.
3. தேவாரப் பதிகங்கள், திருப்பனந்தாள் காசி மடம், 1950.
4. பதினோராம் திருமுறை, கி.வா.ஜகந்நாதன் குறிப்புரைகளுடன், திருப்பனந்தாள் காசி மடம், 1950.
5. திருமூலர் திருமந்திரம், பஞ்சாஷரதீப உரை, திருவாவடுதுறை ஆதினம், 1962.
6. திருமந்திரம் 10ம் திருமுறை, ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் மடம், ஸ்ரீவைகுண்டம், 1956.
7. சிவஞானபோதம், ஸ்ரீபாண்டியபெருமாள் விருத்தியும், தெளிபொருள் விளக்கமும், திருவாவடுதுறை ஆதீனம், 1955.
8. சிவஞான சித்தியார் சுபக்கம், மறைஞானசம்பந்தர் நிரம்பவழகிய தேசியர் உரை, திருவாவடுதுறை ஆதீனம், 1957.
9. சிவஞான போதமும் பன்னிரு திருமுறையும் தே.ஆ.ஸ்ரீ.நிவாசாரியன், திருவாவடுதுறை ஆதீனம், 1954.
10. சேரன் செங்குட்டுவன்: மு.ராகவ அய்யங்கார்.

11. சேரமான் பெருமாள் நாயனார் புராணம். பழங்காலப் பதிப்பு.

12. History of India, Part I & II D.N.Kundra & Smt S.D.Kundra, Navdeep Publications, New Delhi, 1983.

13. தமிழகம் ஊரும் பேரும், ரா.பி.சேதுப்பிள்ளை, தலைமைத் தமிழ்ப் பேராசிரியர், சென்னைப் பல்கலைக்கழகம், 1946.

14. Siva around the world - V.G.Rama Chandran International Society for Indian Ancient culture, 1983.

15. ஆடவல்லான், கும்பாபிஷேகமலர், திருவாவடுதுறை ஆதீனம் 1967.

16. Sankara Digvijaya, Madhva Vidyaranya Tr.Swami Tapasyananda, Sri Rama krishna Mutt, 1986.

17. History of Indian Philosophers, Dr.S.Radhakrishnan, George Allen, London.

18. தமிழக வீரர்கள்: வித்வான் நா.துரைசாமி சிவலிங்கம், நூற்பதிப்புக் கழகம், ஈரோடு 1957.

19. தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம், பகுதி 1 & 2, பேராசிரியர் மது.ச.விமலானந்தம் ஐந்திணைப் பதிப்பகம், சென்னை 1987.

20. நாலாயிர திவ்யப் பிரபந்தம், லிட்டில் ப்ளவர் கம்பெனி, லிப்கோ பதிப்பு சென்னை.

21. சங்ககாலத் தமிழர் வாழ்வு, பேராசிரியர் லெ.ப.கரு.இராமநாதன் செட்டியார், சென்னைப் பல்கலைக்கழகம், 1964.

22. தமிழ் விருந்து, ரா.பி.சேதுப்பிள்ளை, புத்தக நிலையம், திருச்சி, 1945,

23. யாழ்நூல், விபுலானந்த அடிகள் கரந்தை தமிழ்ச்சங்கம், 1947.

24. பஞ்சமாபு, அறிவழகனார், வித்வான் வே.ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர், வெளியீடு, ஈரோடு, 1973.

25. Kerala Sahitya, Ullur S.Parameswara Iyer, Kerala University, Thirvandrum.

26. இலக்கிய அறிமுகம், டாக்டர் மா.ராசமாணிக்கனார், தென்னாட்டுப் பதிப்பகம், 1956.

27. நன்னூற் சுருக்கமும் மூலமும் காண்டிகை உரையும், கொ.ராமலிங்கத் தம்பிரான், ஸி.குமாரசாமி நாயுடு அன்ட் ஸன்ஸ், 1927.

28. வெற்றிவேற்கை, அதிவீரராமபாண்டியன், தமிழ்க்கடல் வெளியீடு, அரோரா பிரஸ், சென்னை- .931.

29. Musical Traditions of Tamilnadu, M.A unachalam, I.S. for I.A.C. Publication 1989.

30. Glimpses from glorious past, I.S. for I.A.C. Publication, 1981.

31. Thesis on some thoughts on Hinduism by Dr.N.Mahalingam (read at the world conference of Hinduism at Sri lanka 1982, Published by sakthi sugars, coimbatore.

32. தலைசிறந்த பாண்டிய மன்னர்கள், அ.கி.பரந்தாமனார், பூமகள் பதிப்பகம், நாகர்கோயில் 1949.

33. தென்னிந்திய வரலாறு, கே.கே.பிள்ளை, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1958.

34. சிலப்பதிகாரம், மணிமேகலை, உ.வே.சாமிநாத அய்யர் பதிப்பு, உ.வே.சா. நூல்நிலையம், அடையாறு, சென்னை.

35. சோழர்கள்: முதற்பாகம், கே.ஏ.நீலகண்ட சாஸ்திரியார்.

36. பாண்டியர் வரலாறு, சதாசிவப்பண்டாரத்தார்.

37. தேவாரத் திருப்பதிகங்கள், அடங்கன் முறை அ.ச.ஞானசம்பந்தன் பதிப்பாசிரியர், கங்கை புத்தக நிலையம், சென்னை, 1998.

38. திருவாசகம், கங்கை புத்தகநிலையம் சென்னை, 1998

39. Selections from his worlds most sacred literature, Eknath Easwaran, Jaico Publishing House, Mumbai, 1997.

40. Essentials of Hinduism; Swami Bhaskarananda, Vedanta Society, Western Washington U.S.A., 1994.

41. தேவார அருள்முறைத் திரட்டு, உமாபதி சிவம் மெய்கண்ட தேவனார் குருபூஜை விழா மலர், திருவாவடுதுறை ஆதீனம், 1993.

42. திருவாசகம், பதிப்பாசிரியர், நீ.கந்தசாமிப்பிள்ளை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1984.

43. தமிழகத்துக் கலைகள், வித்வான் ம.இராமநாதன், உமாதேவன் கம்பெனி சென்னை, 1961.

44. தமிழ் விடு தூது–தனிநாயக அடிகள்; பாரி நிலையம், சென்னை 1962.

45. நீதிநூல் கொத்து, பண்டித நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் உரையுடன். தி.தெ.சைவசித்தாந்தப் பதிப்புக்கழகம் சென்னை, 1950.

46. சங்கரரும் திராவிட சிசுவும், கே.வி.சுப்பு ரத்தினம் கட்டுரை, சங்கர கிருபா வாணிவிலாஸ் பிரஸ், ஸ்ரீரங்கம்.

47. கம்பராமாயணம், வரதமணி, தி லிட்டில் ப்ளவர் கம்பெனி, லிப்கோ சென்னை, 1969.

48. ஸம்க்ஷேபசாரீரகம், ஸ்ரீசுரேஸ்வராச்சாரியாரின் சிஷ்யர் ஸ்ரீஸர்வஞ்ஞாத்ம மஹாமுனிவர் அருளியது. V.S.கமலாம்பாள் உரை.

மற்றும்

★ வரகுண பாண்டியன் வட்டெழுத்துச் சாசனம் 105/1905 சின்னமனூர்ச் செப்பேடுகள்.

★ சாசனம், 408/1906–திருநெல்வேலி.

★ மழுபாடி திருமழுபாடி சாசனம் 98/1920.

★ குலோத்துங்க சோழர் காலச் சாசனம் 180/1894.

★ கண்டராதித்தர் காலச் சாசனம் 450/1908.

★ திருவல்லம் கோயில் கல்வெட்டு, நந்திவர்ம பல்லவன் காலம் கி.பி. 750.

★ குடுமியான் மலைக் கல்வெட்டு (முதலாம் மகேந்திரன் காலம்) பாறையில் 'சதாரிகம்' என்ற பண் ஏழுசுவரம் எட்டுத் தாளங்களுடன் சங்கேதக்குறிகளில் உள்ளன. இறைவன் பாணபத்திரனுக்காகப் பாடிய பண் சாதாரியைக் குறிக்கிறது.





இதுகாறும், 25 நூல்கள் எழுதியுள்ள பாரதிகாவலர், டாக்டர். கே. ராமமூர்த்தியின் முதலாவது வரலாற்று நெடுங்கதை இந்நூல். பக்தி இலக்கியத்தில் இந்நூல், ஒரு புதிய மைல்கல் எனலாம்.

தாமிரபருணி நதிக்கரை கல்லிடைக் குறிச்சியில் பிறந்தவர். அரைநூற்றாண்டு காலம் பாரதி பணிகள் புரிந்தும், பாரதி இலக்கியம் படைத்தும், பாரதி ஆய்வுகளிலும் தோய்ந்த இவர், பாரதி காவலர் என்று பாவேந்தர் பாரதிதாசன் அவர்களால் சிறப்பிக்கப் பெற்றவர்.

ஐ.நா. எழுத்தாளர் அகாதமியின் பாராட்டுப் பட்டயம், அமெரிக்காவில் உள்ள 'இனா கூல்பிர்த்' இலக்கிய அமைப்பின் 'அவார்ட் ஆப் மெரிட்', இத்தாலியின் 'அகாடமிக் டொனோரோ' மற்றும் பிரான்ஸ், தாய்லாந்து நாட்டு இலக்கிய கௌரவங்களும் பெற்றவர்.

பாரதி கலாநிதி, பாரதி சாகரம், பாரதியச் செல்வர், இதயபாரதி, பாரதி பிரசங்க ரத்னாகர, கவிமௌக்திகம், சேவாரத்னம், இலக்கியச் செம்மல் மற்றும் பல விருதுகள், அங்கீகாரம் பெற்ற அமைப்புக்கள் வழங்கி, இவரைச் சிறப்பித்துள்ளன.

திட்பமும் திண்மையும் நிறைந்த பேச்சாளர், கவிஞரும் மொழி பெயர்ப்பாளரும் ஆவார். பல ஆய்வுக் கட்டுரைகள் எழுதியுள்ளார். வாழ்கை வரலாற்று நூல்கள் எழுதுவது இவருக்கு கைவந்த கலை. ஆதிசங்கரரின் பல சுலோகங்களைத் தமிழாக்கம் செய்துள்ளார். ஆங்கிலத்திலும் புலமை மிக்க இவருக்கு, ஹிந்தி ஸம்ஸ்கிருதமும் தெரியும்.

இவரது மனைவி, கங்கா ராமமூர்த்தி சிறந்த நாவலாசிரியர்; சிறுகதை எழுத்தாளர். பல நூல்கள் எழுதியுள்ளார்.

மலர் பிரிண்டர்ஸ் 044-8224803